JANASAKTHI போன்: 84097 6 பக்கம் ஒன்றரை அணா மலர் 8 இதழ் 301 இலங்கை 15 சதம் REGD. NO. M. 5934

ஜனசக்தி

சென்னை	நந்தன, ஐப்பசி 2உ	சனிக்கிழமை	1952, அக். 18
வெளியூர்	நந்தன, ஐப்பசி 3உ	ஞாயிற்றுக்கிழமை	1952, அக். 19

சோவியத்துடன் வர்த்தகம் செய்ய முதல் பிரிட்டிஷ் கம்பெனி நிறுவனம்

லண்டன், அக் 17—

பிரிட்டிஷ் பார்லிமென்டிலுள்ள ஒரு கன்சர்வேடிவ் மெம்பர் உட்பட ஒரு பிரிட்டிஷ் வர்த்தகர் கோஷ்டி இவ வருட ஆரம்பத்தில் மாஸ்கோ பொருளாதார மகாநாட்டில் செய்துகொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்களை அமுலாக்குவதற்கு ஒரு வர்த்தக கம்பெனியை நிறுவியுள்ளது.

"சர்வதேச வர்த்தக சங்க லிமிடெட்" என்ற பெயரில் அது செய்யப்படும். ஐ. நா. வின் உணவு-விவசாய ஸ்தாபனத்தின் முன்னாள் டைரக்டர் ஜெனரலாயிருந்த லார்ட் பாயிட்-ஆர், இக் கம்பெனியின் முதல் தலைவர்.

மக்கள் மீது ராஜாஜி சர்க்காரின் புது வரிகள்

நிலவரி சர்சார்ஜ் மசோதா

செலக்ட் கமிட்டியின் ஜனவிரோத முடிவு

குறுகிய மெஜாரிட்டியில் மசோதா திணிக்கப்படுகிறது

சென்னை, அக் 16—

சென்னை நிலவரி (சர் சார்ஜ்) மசோதா பற்றி பரிசீலனை செய்த செலக்ட் கமிட்டி, ஒரு சில திருத்தங்களுடன் மசோதாவை ஏற்றுக்கொண்டுவிட்டது. கமிட்டியினுள் இம்முடிவை எதிர்த்து 9 பேரும் ஆதரித்து 11 பேரும் ஓட்டளித்தனர். கமிட்டியின் முடிவை எதிர்த்து 9 உறுப்பினர்கள் கூட்டாக ஒரு கண்டனக் குறிப்பை சமர்ப்பித்துள்ளனர். மசோதா கைவிடப்பட வேண்டுமென அவர்கள் கோருகின்றனர்.

ஏழை விவசாயிகள் மீது தாங்கமுடியாத வரிப்பளுவை சுமத்தும் இன்றுள்ள ஜனவிரோத நிலவரி முறையை ஒழித்து, அதற்கு பதில் பெரும் நிலப்பிரபுக்கள் மீது வரிப்பளுவைச் சுமத்தும் விவசாய வருமான வரி முறையைப் புகுத்த வேண்டுமெனச் சகல பகுதி மக்களும் கோருவதை செலக்ட் கமிட்டி நிராகரித்துவிட்டது. கொள்ளை லாபம் அடித்துவரும் பெரும் நிலச்சுவான்கள் மீது சுமைக்காய் அளவு நிலவரியை அதிகரித்துவிட்டு, பெருவாரியான விவசாயிகள் மீதுள்ள பெரும் ...

ஆரம்பத்தில் மசோதா நிர்ணயித்திருந்த சர்சார்ஜ் விகிதங்களாவன:—

முதல் ரூ. 50க்கு	சர்சார்ஜ் இல்லை	
அடுத்த ரூ. 50க்கு	4 அணா	
" ரூ. 400க்கு	8	"
" ரூ. 500க்கு	12	"
" ரூ. 1000க்கு மேல்	16	"

செலக்ட் கமிட்டியின் ரிப்போர்ட் சென்னை சர்க்கார் விசேஷ கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் வருமானத்தை

(2-ம் பக்கம் பார்க்க)

கொரியாவின் குன்றுகளுக்காகப் போர்

சியோல், அக். 18—

இன்று காலை சீனத்தொண்டர் படை எதிர்த்தாக்குதல் நடத்தி அமெரிக்கர்களை முக்கோணக் குன்றிலிருந்து விரட்டியடித்தது. இந்த யுத்தம் 1-மணி 40 நிமிஷ நேரம் நடைபெற்றது.

கொரியாவில் நான்கு முக்கியமான இடங்களில் இரவு பூராவும் போர் நடந்ததாக அமெரிக்கப் படைத் தலைமை கூறுகிறது.

மத்தியப் போர்முனையில் உள்ள இரும்புக் குதிரை குன்று பல தடவை கைமாறியது. இறுதியில் அதை வட கொரியத் துருப்புகள் கைப்பற்றின.

நபாம் குண்டுவீச்சு

இப்போரில் அமெரிக்க வெறியர்கள் 2000 டவுண்டு நிறையுள்ள பயங்கர நபாம் குண்டுகளை வீசினர். அனைத்தையும் சுட்டெரித்தனர்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 25 பேர் கொண்ட புதிய தலைமைக் குழு

மாஸ்கோ, அக். 17—

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தற்போதுள்ள பொலிட்பீரோவைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக 25 பேர் கொண்ட ஒரு தலைமைக் குழுவையும் ("பிரிஸிடியம்"), அதற்கு 11 மாற்று அங்கத்தினர்களையும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி இன்று தேர்ந்தெடுத்தது.

மார்ஷல் ஸ்டாலின், தலைமைக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர்கள் மாலெங்கோவ், எல். பி. பெரியா, ஜி. எம். மலெங்கோவ், என். ஏ. புல்கானின், கே. இ. வரோஷிலோவ், எல். எம். ககனோவிச், மிகோயன், க்ருஷ்சேவ், ஆகியவர்களும் தலைமைக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

பழைய 12 பொலிட் பீரோ உறுப்பினர்களில் 11 பேர் இந்த தலைமைக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். 12வது உறுப்பினர் தோழர் ஆண்டரயேவ் மத்தியக் கமிட்டி உறுப்பினராக மட்டும் இருப்பார்.

இந்தோ-சீனாவில் பிரெஞ்சு தோல்விகள்

ஹனோய், அக். 18—

இந்தோ-சீனாவில் வியட்மின் படைகள், பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்து ... இந்த இடம் ஹனோயிக்கு 90 மைல் வடமேற்கேயுள்ள முக்கியமான பிரெஞ்சு மலைப் பிரதேச தளம்.

நேற்று மாலையில் வியட்மின் படைகள் புதிய தாக்குதல்களை நடத்தி, இரவிலும் விடியற்காலையிலும் தீவிரப்படுத்தி இந்த இடத்திற்குள் புகுந்தன. 4 நாட்களுக்கு முன் வியட்மின் படைகள் 100 மைல் நீளப் போர்முனையில் தங்கள் தாக்குதலை ஆரம்பித்தன. கடந்த வாரத்தில் பல முக்கிய இடங்களை பிரெஞ்சு படைகள் கைவிட வேண்டி ஏற்பட்டது என்று பிரெஞ்சுக்காரர்களே ஒத்துக்கொண்டனர். பெரிய குளிர்கால வியட்மின் தாக்குதலுக்கு இது ஒத்திகையே என்று பிரெஞ்சுக்காரர் அலறுகின்றனர்.

ஜனசக்தி நிதி

முன் வசூல்	2711-13-3
இன்றைய வசூல்	202- 6-3
மொத்தம்	2914- 3-6

சே. மு. இராசவண்ணன் (சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழகம்) தனக்கு ஆண் மகவு பிறந்த ஞாபகார்த்தமாக.	1-0-0
கோவை ஐ. மு. படிப்பகம் தோழர் வ. கே. கோபால் மூலம்	5-0-0
வேலாயுதம், அந்தோனிசாமி, செல்லப்பன் தலா ரூ. 1	3-0-0
தோழர் ஜீவா மூலம்	93-6-3
கிருஷ்ணகிரி பாலசுந்தரம், டிரைவர்	5-0-0
கம்பம் தோழர்கள் டி. எஸ். பொன்ராஜ்	1-0-0
வீரபத்திரன், ஹனீபா தலா 8 அணா	1-0-0
நாசரேத் தோழர் வி. ஆர். அய்யாதுரை மூலம் வசூல்	25-0-0
ஆமதாபாத் தென்னிந்திய தற்காப்பு பண்டு மகாசபை மூலம் வசூல் ரூ. 65ல் செலவு போக	64-0-0
பி. அண்ட் சி. தொழிலாளர்கள் பி. எம். கார்டிங் முதலாவது வார்டு (சுப்பராயலு மூலம்)	4-0-0
	202 6 3

(இதன் விபரம் 13-10-52 ஜனசக்தியில் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது) விபரம் நாளை வெளிவரும்.

நன்கொடை அனுப்பிய அனைவருக்கும் நன்றி.

இந்தோனேஷியத் தலைநகரில் ஊரடங்குச் சட்டம்

ராணுவ ஜனரலை விசாரிக்கக் கோரி வெகுஜன ஆர்ப்பாட்டம்

மந்திரிசபை ராஜிநாமா செய்யுமா?

ஜகார்ட்டா, அக். 17—

...

மந்திரி சபை நெருக்கடி

...

துரோகி டிட்டோவிற்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், அக். 17—

யுகோஸ்லேவியா துரோகி டிட்டோவிற்கு 3 கோடி டாலர் கொடுக்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

பஸ் சர்சார்ஜ் மசோதா

செலக்ட் கமிட்டி ஏற்றுக் கொண்டுவிட்டது

லாரிகளுக்கு வரி உண்டு

சென்னை, அக். 16—

பஸ் சர்சார்ஜ் மசோதா பற்றி பரிசீலனை செய்த செலக்ட் கமிட்டி முடிவு செய்துள்ள திருத்தங்கள் இன்று சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாயுள்ளன.

செலக்ட் கமிட்டி உறுப்பினர்களான தென்னேட்டி விஸ்வனாதம், டி. சி. நாராயண நம்பியார், கே. பி. கோபாலன், பி. வெங்கடேஸ்வரலு, தசரதன், எஸ். ராமலிங்கம் ஆகியோர் இம்மசோதாவை எதிர்த்து ஒரு கண்டனக் குறிப்பை சமர்ப்பித்துள்ளனர்.

செலக்ட் கமிட்டி செய்துள்ள முக்கிய திருத்தங்கள் வருமாறு:—

1. சர்சார்ஜ் என்னும் பதம் நீக்கப்பட்டு 'வரி' என்று மாற்றப்படுகிறது.

2. மைல் ஒன்றுக்கு ஒரு பைசா சர்சார்ஜ் என்றிருந்ததை மாற்றி கட்டண வசூலில் ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா வரி என்று நிர்ணயிக்கப்படுகிறது.

3. புதிய வரியைச் சேர்த்து வசூலிக்கப்படும் கட்டணங்கள் மோட்டார் வெகிக்கிள்ஸ் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட வேண்டிய அதிகபட்ச கட்டணங்களை விட அதிகரித்துவிடக்கூடாது.

4. வாடகைக்கு சாமான்களை ஏற்றிச் செல்லும் லாரிகளுக்கும் இம்மசோதாவின்படி வரி விதிக்கப்படும்.

5. நாளொன்றுக்கு மொத்தம் 50 மைல்களுக்கு மேல் ஓடுவதற்கு அனுமதிக்கப்படாத பஸ்கள், லாரிகளுக்கு இவ்வரி விதிக்கப்படாது.

6. ...

முதல் மசோதாவில் ... ஏழில் ஒரு பங்கு) சர்சார்ஜ் விதிக்கப்பட்டிருந்தது. செலக்ட் கமிட்டியின் திருத்தத்தின்படி மொத்த வசூலில் ரூபாய்க்கு ஒரு அணா விதம் (அதாவது கட்டணத்தில் 16ல் ஒரு பங்கு) வரி வசூலிக்கப்படும். இதனால் பஸ் வரி சிறிதளவு குறைக்கப்பட்டிருக்கிறது.

வரி இவ்வாறு குறைக்கப்பட்டதினால் ஏற்படும் நஷ்டத்திற்கு ஈடுகட்டும் பொருட்டு லாரிகளுக்கும் வரி விதிக்க வேண்டுமென முடிவு செய்துள்ளதாக கமிட்டி ரிப்போர்ட் கூறுகிறது.

கண்டனக் குறிப்பு

கமிட்டியின் முடிவை எதிர்த்து, கீழ்கண்ட கமிட்டி உறுப்பினர்கள் கண்டனக் குறிப்பு சமர்ப்பித்துள்ளனர். தென்னேட்டி விஸ்வனாதம், டி. சி. நாராயண நம்பியார், கே. பி. கோபாலன், பி. வெங்கடேஸ்வரலு, தசரதன் எஸ். ராமலிங்கம்.

இவர்களுடைய கண்டனக் குறிப்பு கூறுவதாவது:—முதலில் வெளியிடப்படாத பல புதிய அம்சங்கள் மசோதாவில் இருப்பதால் இந்த புதிய அம்சங்கள் பற்றியும் பொதுஜன அபிப்பிராயம்

(2-ம் பக்கம் பார்க்க)

நீடித்த சமாதானம் நிலவ

போலந்து யோசனைகள்

ஐ. நா. பொது சபை முன் 9 அம்ச திட்டம் சமர்ப்பணம்

ஐ. நா. அக், 18—

கொரியப் போர் நிறுத்தத்திற்கும், அணுக்குண்டு, விஷக்கிருமி குண்டுகளை தடை விதிக்கவும், ஆயுதக் குறைப்பிற்கும், வல்லரசுகளுக்கிடையே சமாதான ஒப்பந்தம் ஏற்படவும் வழிவகை செய்யும் மிக முக்கியமான தீர்மானத்தை போலந்து அயல்நாட்டு மந்திரி தோழர் ஸ்டானிஸ்லா ஸக்ரெஜேவிஸ்கி ஐ. நா. பொது சபை முன் சமர்ப்பித்துள்ளார்.

உலகில் நீடித்த சமாதானத்தை நிலைநிறுத்தும் நோக்கமுடன் அவர் சமர்ப்பித்துள்ள தீர்மானத்தின் ஒன்பது முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. கொரியாவில் உடனடியாகப் போர்நிறுத்தம் செய்தல்.

2. சர்வதேசச் சட்ட திட்டங்களின் அடிப்படையில் யுத்தக் கைதிகளைப் பரிவர்த்தனைச் செய்தல்.

3. சீனத் தொண்டர்படை உட்பட எல்லா அன்னியத் துருப்புகளையும் கொரியாவிலிருந்து வாபஸ் வாங்குதல்.

4. ...

5. ... வாடங்களையும், ராணுவப் படைகளையும் மூன்றில் ஒரு பங்கு குறைத்துக் கொள்ள வேண்டுமென வல்லரசுகளுக்கு வேண்டுகோள் விடுப்பது.

6. ஆயுதப் பரிஹாரணம் சம்பந்தமாக ஒரு சர்வதேச மகாநாடைக் கூட்டுவது.

7. அணு குண்டுகளையும், இதர படுநாசகர ஆயுதங்களையும் எவ்வித நிபந்தனையுமின்றித் தடைசெய்ய உடனடியாக முடிவு செய்தல். இந்தத் தடையை நிர்வகிக்க, கண்டிப்பான சர்வதேசக் கட்டுப்பாடு ஏற்படுத்துதல்.

8. ரசாயன, விஷக்கிருமி யுத்தத்தைத் தடைசெய்யும் ஜினீவா ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்யுமாறு எல்லா நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுப்பது.

9. வட அட்லாண்டிக் அணியில் பங்கெடுத்துக் கொள்வது, ஐ. நா. அங்கத்தினர் பதவிக்கு முற்றும் முரணானது என்று ஐ. நா. பொது சபை பிரகடனம் செய்வது.

ஈரானிய-பிரிட்டிஷ் உறவு ரத்து

'ஈரான் வளர்ச்சிக்குப் பிரிட்டன் விலங்கிட்டது'

பிரதமர் முஸ்ஸாதேக் அறிவிப்பு

டெஹ்ரான், அக் 17—

பிரிட்டனுடனிருந்த ஸ்தானிக உறவுகளை ஈரான் அறுத்துக்கொண்டது.

'எண்ணெய் தகராறைத் தீர்ப்பதற்கு ஈரான் பலமுறை முயற்சி செய்தும்கூட, பிரிட்டிஷ் சர்க்கார் ஒவ்வொரு தடவையும் அதை எதிர்த்தே வந்திருக்கிறது' என்று ஈரானிய பிரதமர் டாக்டர் முஸ்ஸாதேக் ரேடியோ மூலம் அறிவித்தார்.

"சர்வதேச சட்டங்களுக்கு முற்றிலும் மாறாக ஈரானிய மக்களை மிகக் கொடிய பொருளாதார நிர்ப்பந்தத்திற்கு பிரிட்டன் உள்ளாக்கி வந்திருக்கிறது. நாம் ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை வகுக்க விடாமல் அது தடை செய்து வந்திருக்கிறது" என்று முஸ்ஸாதேக் கூறினார்.

'ஈரானுடன் பிரிட்டன் நேச ...

அமெரிக்க மிரட்டல்

பிரிட்டனுடன் ஈரான் உறவுகளைத் துண்டித்துக் கொண்டால், ஈரானுக்கு அமெரிக்க உதவி நிறுத்தப்படுமென்று அமெரிக்க ஸ்தானிகர் லாய் ஹெண்டர்சன் ஈரானிய சர்க்காரை எச்சரித்ததாக மர்தாசியா எனும் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

ஆனால், இத்தகைய எச்சரிக்கை எதுவும் செய்யப்படவில்லை யென்று அமெரிக்க சர்க்கார் அதிகாரி மாக்டெர்மாட் வாஷிங்டனில் நிருபர்களிடம் கூறினார்.

ஈரானிய சர்க்காரின் இந்த நடவடிக்கையை பகதர் இ... ரோஜ், இத்தோலாத் முதலிய ...

ரூ. 5க்கு குழந்தையை விற்ற தாய்

பஞ்சத்தால் தற்கொலைக்கு முயற்சி

கோவை, அக். 16—

சென்ற 30-9-'52 தேதியன்று, சேலம் ஜில்லா அம்மாபாளையத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுப் பெண் ஒருவள், பிறந்து 5 நாட்களே ஆன, தனது ஆண் குழவியோடு மேட்டூர் காவேரி ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது அருகிலிருந்தவர்களால் மீட்கப்பட்டு மேட்டூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பஞ்சக் கொடுமையால் சில மாதங்களுக்கு முன் பூரண கர்ப்பிணியான தலைனைத் தவிக்கவிட்டுப் புருஷன் இறந்துவிட்டாரென்றும், வேறு நாதியாருமில்லாததால் ஊராக பிச்சையெடுத்தும் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகியும் அன்றுமுதல் அவஸ்தைப் பட்டுவந்த நிலைமையிலேயே தனக்குப் பிரசவமானதாகவும் ...

பின்லாந்து பிரதமர் ராஜிநாமா

ஹெல்ஸின்கி, அக். 17—

...

ஏற்றுமதி சரக்குகளுக்கு விற்பனை வரி கூடாது

திரு-கொச்சி வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

புதுடில்லி, அக். 16—

...

சர்சார்ஜ் விகிதம்

செலக்ட் கமிட்டி திருத்தங்களுக்கு பின்னுள்ள சர்சார்ஜ் விகிதங்களாவன:—

நிலவரி	ரூபாய் ஒன்றுக்கு சர்சார்ஜ் விகிதம்
முதல் ரூ. 50க்கு	இல்லை
அடுத்த ரூ. 50க்கு	2 அணா
" ரூ. 100க்கு	4 "
" ரூ. 300க்கு	8 "
" ரூ. 500க்கு	12 "
ரூ. 1000க்கு மேலுள்ள நிலவரி	16 "

"அப்போதைய வெளியிடும் சுதந்திர தமது பிரசுரங்களை அரசியல் சட்டத்தின் மூலம் [illegible] செய்யப்பட்டதோ [illegible]"

ஜனசக்தி

சனிக்கிழமை 18-10-'52

சோவியத் கட்சி மகாநாடு

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் வெற்றிகரமாக முடிந்துள்ளது. அதன் கொள்கை விளக்க அறிக்கைகளும், விவாதங்களும், முடிவுகளும் உலக ஜனநாயக மக்களிடையே புதிய தெளிவையும், உற்சாகத்தையும் ஊட்டி பரவசப்படுத்தியுள்ளன. ஏகாதிபத்திய கும்பலுக்கிடையே பயத்தையும், அவநம்பிக்கையையும் சிருஷ்டித்துள்ளது.

இதில் ஆச்சரியமில்லை. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சாமானியமானதல்ல. நவம்பர் புரட்சி மூலம் மனிதகுல வரலாற்றிலேயே முதன்முதலாக அது சுரண்டலையொழித்து, சுரண்டப்பட்ட மக்களை ஆட்சிபீடத்தில் வைத்தது. சோஷலிஸத்தை நடைமுறையில் நிர்மாணித்தது. தொழிலாளி வர்க்கத்தின் போராற்றலை மெய்ப்பித்து முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பு ஒழிவது அவசியமென்பது மட்டுமன்றி, சாத்தியமுங்கூட என்று அது காட்டிவிட்டது. தனது சொந்த சக்தியைக் கொண்டு பாசிஸ—ஏகாதிபத்திய உலக யுத்தத்தில் அது உலக நாகரீகத்தையும், மனித குலத்தையும் காப்பாற்றியது. பிறபாடு கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணிக்கும் திசையில், ஏகாதிபத்திய முற்றுகையைச் சட்டை செய்யாமல் சோவியத் யூனியன் முன்னேறி உலகத்திலேயே மிகப்பெரிய வல்லரசாக இன்று திகழ்கிறது.

அதிகாரம் மக்களுக்கே; பாட்டாளி தொழிலாளி வர்க்கத்துக்கே; நிலம் உழுபவனுக்கே என்கிற சுலோகங்களின் எதிரொலியாக புதிய சீனவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஏகாதிபத்திய பிடியிலிருந்து முறித்துக்கொண்டு பிரிந்து சென்றுவிட்டன.

முதலாளித்துவ நாடுகளிலும், காலனி நாடுகளிலும் அமெரிக்க-பிரிட்டிஷ் ஆதிக்க ஆட்சியை எதிர்த்து வன்றுமே கண்டிராத பலத்துடன் தேசவிடுதலை இயக்கமும், சமாதான இயக்கமும் வளர்ச்சி பெற்றுள்ளன.

இவ்வளவு மகத்தான சாதனைகளுக்கு ஆதாரமாக விளங்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாடு, ஐசன்ஹோவர் கும்பலுக்கு திகிலுண்டாக்கியிருக்கிறது. ஒலிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், முதலான பழங்கால பஜனை கோஷ்டிகளுக்கும் கலக்கம் ஊட்டியுள்ளது.

[...]

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுகள் முன்னேவிட பிரம்மாண்டமான சாதனைகளைச் சாதிக்க சோவியத் மக்களுக்கு மட்டுமின்றி, உலக மக்கள் அனைவருக்கும் வழி காட்டிவிட்டது.

மன்னர்கள் மான்யத்தை நிறுத்துக

புவனேஸ்வர், அக். 17— சென்ற ஜுலையில், கம்யூனிஸ்ட் சட்டசபை மெம்பர் தோழர் சி. வி. பட்நாயக் ஒரிசா ராஜ்யத்திலுள்ள மாஜி—மஸ்தானர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் மான்யத்தை அறவே நிறுத்த வேண்டுமென்றும், [illegible] வகுப்பு மசோதா [illegible] களின் விவசாய, தொழில் வளர்ச்சிக்கு செலவழிக்கப்பட வேண்டும் என்று கோரி இம்மசோதாவை அவர் கொண்டு வந்தார். [illegible] என்று ஒரிசா சட்டசபைக்கு [illegible] பிரேரேபித்தார்.

சென்னைக்கு 50,000 டன் செஞ்சோளம் தர மத்திய சர்க்கார் மறுப்பு

மலிவு தானியக் கடைகளின் தேவை அதிகமாகிறது

அரிசி கையிருப்போ கரைகிறது

சென்னை, அக். 16— சென்னை ராஜ்ய சர்க்காரிடமிருந்த செஞ்சோள சேமிப்பு அநேகமாக கரைந்துவிட்டது. சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து சென்ற மாதம் 50,000 டன் செஞ்சோளம் வேண்டுமென்று அவசரமாகக் கேட்டது. மத்திய சர்க்கார் இக் கோரிக்கையை நிராகரித்து விட்டது.

செஞ்சோள விற்பனையினால் சென்னைசர்க்காருக்கு ஏற்பட்ட ரூ. 135 லக்ஷம் நஷ்டத்தையும் மத்திய சர்க்கார் ஈடுசெய்ய மறுத்து விடுமென்று தெரிகிறது.

இப்போது சென்னை சர்க்கார் கையிருப்பிலுள்ள அரிசி சேமிப்பு 2,83,657 டன்களாக குறைந்துவிட்டது. சர்க்கார் கணக்கிட்டபடி மலிவு தானியக் கடைகளில் படிப்படியாக வாங்குவோர் எண்ணிக்கை குறைவதற்குப் பதிலாக ஏராளமாக அதிகரித்துக் கொண்டு போகிறது என்று ஜில்லாக் கலெக்டர்கள் சர்க்காருக்கு அபாயச் சங்கு ஊதியுள்ளனர். ஜில்லாக்களில் சிறு நிலக்காரர்களும் இப்போது தங்களுடைய தேவைகளுக்கு அரிசியை மலிவு தானியக் கடைகளில் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

சர்க்காரின் பங்கீடு கட்டுப்பாடு நீக்கக் கொள்கை அடியோடு தோல்வியடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை நீடித்துக் கொண்டு போகுமானால், சர்க்கார் கையிருப்பிலுள்ள பூரா சேமிப்பும் கரைந்தபிறகு என்ன நிலைமை ஏற்படும் என்று நினைக்கவே பயமாயிருக்கிறது.

கம்யூனிஸ்ட் வெற்றி

ராஜமஹேந்திரம், அக். 18— ராஜமஹேந்திரம் முதல் வார்டில் ஏ. வி. ரமணய்யா (கம்யூனிஸ்ட்) மறுமுறையும் முனிசிபல் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்குக் கிடைத்த ஓட்டுகள் 1296. எதிர்த்து நின்ற சுயேச்சை அபேட்சகருக்கு 563 ஓட்டுகள்.

தற்பொழுது இந்த நகர சபையில் கட்சிகளின் பலம்: முனிசிபல் ஐக்யக் குழுவினர் 14, கம்யூனிஸ்ட்கள் 10, சுயேச்சை 11.

இலங்கையில் இந்திய லுங்கி இறக்குமதி

இலங்கை சர்க்காரின் கொள்கை

சென்னை, அக். 15— இந்திய லுங்கி ஏற்றுமதிக்கு இலங்கை சர்க்காரின் புதிய உத்திரவினால் பாதகம் ஏற்படும் என்று எம்.எஸ். அப்துல் மஜித் வெளியிட்ட அறிக்கைக்கு, சிலோனிலுள்ள இந்திய ஹைகமிஷனரின் முதல் காரியதரிசி பின்வருமாறு பதிலனுப்பியிருக்கிறார்:—

"இலங்கை சர்க்காரின் புதிய உத்திரவு பஞ்சினால் உற்பத்தியான சாரங்களைத் தான் பாதிக்கும். கம்பாயங்களைப் பற்றி உத்திரவில் குறிப்பிடவில்லை, மேலும் அக். 10ந் தேதி வரையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதியான கைத்தறித் துணிகளையும் இவ்வுத்திரவு பாதிக்காது."

தெ. ஆ. இனவெறிப்பிரச்னையை ஐ. நா. பொதுசபை விவாதிக்கும்

பாசிஸ்ட் மலான் கொள்கைக்கு பிரிட்டிஷ் சப்பைக்கட்டு

ஐ. நா. அக். 17— தென் ஆப்பிரிக்க இனவெறிக் கொள்கையை விவாதிக்கும் உரிமையும், அதிகாரமும் ஐ. நா. பொதுசபைக்கு இல்லையென்று கூறி, அப்பிரச்னையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள விடாமல் தடுக்க, தென்னாப்ரிக்கப் பிரதிநிதி செய்த முயற்சியை ஐ. நா. பொதுசபை நிராகரித்தது.

தென்னாப்ரிக்காவின் அடிப்படை உள்நாட்டு விவகாரங்களிலேயே இது தலையிடுவதாகும் என்று கூறி தென்னாப்ரிக்க தூதுகோஷ்டித் தலைவர் விவாதித்தார். இப்பிரச்னையை எழுப்பிய அரபு, ஆசிய நாடுகள் அணியைக் கடுமையாகத் தாக்கினர்.

இனவெறிக்கு பிரிட்டிஷ் சப்பைக்கட்டு

தென்னாப்ரிக்க இனவெறிப் பிரச்னையை விவாதிக்க ஐ. நா. பொது சபைக்கு அதிகாரமில்லை யென்று பிரிட்டிஷ் பிரதிநிதி சர் கிளாட்வின் ஜெப் அறிவித்தார். இப்பிரச்னை விவாதிக்கப்பட்டால், தென் ஆப்ரிக்காவின் உள்நாட்டு விவகாரத்தில் ஐ. நா. தலையிடுவதற்கொப்பாகும். தென்னாபிரிக்கப் பிரச்னையால் சர்வதேசசமாதானத்திற்கும், பந்தோபஸ்திற்கும் ஆபத்து நேரிட்டுவிடவில்லை யென்று கூறி பிரிட்டிஷ் பிரதிநிதி தென்னாப்ரிக்க இனவெறிக்கு சப்பைகட்டு கட்டினார்.

தென்னாப்ரிக்கப் பிரச்னையை விவாதிக்க ஐ. நா. பொதுச் சபைக்கு பூரண அதிகாரமிருக்கிறதென்று இந்தியத் தூதுகோஷ்டித் தலைவர் திருமதி விஜயலட்சுமி தெளிவாக எடுத்துக்காட்டினர்.

தென்னாப்ரிக்க இனவெறிப் பிரச்னை ஐ. நா. பொது சபை அஜெண்டாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதற்கு சாதகமாக 45 ஓட்டுகளும், 6 எதிராகவும் கிடைத்தன. 8 நாடுகள் நடுநிலைமை வகித்தன.

சோவியத் கட்சிக் காங்கிரஸ்

வெற்றிகண்டு ஐஸன்ஹோவர் நடுக்கம்

நியூயார்க், அக். 17— வெற்றிகரமாக முடிவுபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 19-வது காங்கிரஸ் உலகப் பிற்போக்காளர்களிடையில் பெரிய வயிற்றெரிச்சலைக் கிளப்பி விட்டுள்ளது.

"சமீபத்தில் முடிவுற்ற ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ்" வார்த்தெடுத்த ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி புரிவது என்ற ஒரு முடிவை நிறைவேற்றியுள்ளனர். இது 'சுதந்தர' உலகத்திற்கு ஒரு பயங்கர சவாலாகும்" என்று ஐஸன்ஹோவர் அலறிப் புடைத்துள்ளார்.

"கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் ஒரு புதிய சூத்திரத்தை உருவாக்கியுள்ளார்களென்றும், அதை "கெடுபிடி யுத்தத்தின்" வேகத்தில் ஒரு மாறுதல் என்று சொல்லலாமென்றும், ஒருவித "கெடுபிடி சமாதானத்தி"ன் ஆரம்பமென்று கூட சொல்லலாமென்றும் கூறினர். "நடவடிக்கைத் திட்டமாகிய இந்த சோவியத் சூத்திரத்தை எப்பெயர் கொண்டு விவரித்தாலும் "சுதந்திர உலகின்" ஒற்றுமைக்கு இது பெரியதோர் ஆபத்தாக விளங்கப் போகிறது; நாம் ஒரு சிறு தவறும் செய்யக் கூடாது" என்று அலறினர்.

"ஸ்டாலின், மாலடோவ், மலெங்கோவ், பெரியா ஆகியவர்களின் பிரசங்கங்கள் வளர்ந்துவரும் பலத்தின் அடிப்படையில் செய்யப்பட்டன. தங்களுடைய ராஜதந்திரத்தின் நடைமுறைக்கு ஒரு சுதந்திரமும் உருவாக்கினர். தங்களுடைய பிரம்மாண்ட மூலாதாரங்களின் பலத்தை கம்யூனிஸ்ட் உலகம் கவனமாகத் திரட்டுகின்றது. தன்னுடைய சொந்தத் தற்காப்பு வேலைகளிலேயே மூழ்ந்துள்ள "சுதந்திர உலகம்" கோஷ்டிகளாகப் பிளவுபட்டு தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்ளும் ஆபத்தும் இருக்கிறது என்று ஐஸன்ஹோவர் தங்கள் முகாமின் பலஹீனத்தைத்தானே அம்பலப்படுத்திக்கொண்டார்.

"உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு சோவியத்தின் திட்டம் குறிப்பிட்ட உத்தரவுகளாக அனுப்பப்படலாம்" என்று ஐஸன்ஹோவர் தன் வழக்கமான அவதூறுப் பிரசாரத்தில் இறங்கினர்.

2 நூற்றாண்டுகளில் ரஷ்யர்கள் பெரிய சாம்ராஜ்யத்தைக் கட்டிவிட்டார்களென்று கூறி தன் ஏமாற்றுப் பொய்யை ஐஸன்ஹோவர் கட்டவிழ்த்துவிட்டார்.

(முதற் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்துகொள்ள வேண்டுமென நாங்கள் சட்டசபையில் வலியுறுத்தினோம். ஆனால் புதிய அம்சங்கள் குறித்து சர்க்கார் சாட்சியங்கள் எடுக்க மறுத்துவிட்டனர்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இன்று பெருவாரியான பஸ் முதலாளிகளுக்கு போதிய லாபம் கிடைப்பதில்லை. ஒரு சில பெரு முதலாளிகட்கு மாத்திரம்தான அதிகப்படியான லாபம் கிடைக்கிறது. எனவே கட்டண வசூலில் ஒரு குறைந்தபட்ச அளவை நிர்ணயித்து, அதற்கு குறைவாக வசூலுள்ள முதலாளிகளுக்கு இந்த வரி விதிக்கப் படக்கூடாதென நாம் கூறினோம். ஆனால் சர்க்கார் இதை நிராகரித்துவிட்டது.

பஸ் தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் பின் பிரயாணிகளின் வசதிகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் இவை பற்றி கவலைப்படாமல் சர்க்கார் வரி வசூலிக்க மட்டும் கிளம்பி விடுகிறது.

இறுதியில் அதிக வரிக்கு இனி இடமேயில்லை. போலீஸுக்கும் சிறைகளுக்கும் செலவாகும் பணம் குறைக்கப்பட வேண்டும். இதன் மூலம் பட்ஜெட்டை சரிக்கட்ட முடியும். புதிய வரிகளுக்கு அவசியமேயில்லை.

95,000 அமெரிக்க சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நியூயார்க், அக். 16— அமெரிக்காவின் 7 மாகாணங்களிலுள்ள 95,000 நிலக்கரி சுரங்கத் தொழிலாளிகள் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

நவம்பர் மாதத்தில்தான வேலைநிறுத்தம் தொடங்க வேண்டுமென்று சங்கத் தலைவர் ஜானலூயி தேதி நிர்ணயித்திருந்தும், அதையும் பொருட்படுத்தாது தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

சர்க்காரின் சம்பள நிர்ணய போர்டு தொழிலாளரின் சம்பள உயர்வுக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுவதில் அனாவசியக் காலதாமதம் செய்வதைக் கண்டித்தே இவ்வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டுள்ளது.

கைத்தறி ஜவுளி ஏற்றுமதிக்கு ஆபத்து

சிலோன் மார்க்கெட்டை அமெரிக்க ஜப்பான் ஆக்ரமிக்க வழியா?

சென்னை, அக். 18— வெளிநாடுகளிலிருந்து சிலோனுக்குள் இறக்குமதியாகும் சாரம் துணிகளின் விலை மதிப்பில் நாலில் ஒரு பங்கு சிலோன் ஜவுளியை அந்த இறக்குமதியாளர்கள் வாங்கித் தீரவேண்டுமெனபது சிலோன் சர்க்கார் (இன்டஸ்ட்ரியல் ப்ரோடக்ஸ் ஆக்ட்) உத்திரவிட்டிருக்கிறது. இந்த உத்திரவு 15-10-52 முதல் அமுலுக்குவருகிறது. இந்த உத்திரவால் இம்மாகாணத்திலிருந்து சிலோனுக்கு ஏற்றுமதியாகும் கைத்தறி ஜவுளி வியாபாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

பெரும்பாலும் சாரம், லுங்கி போன்ற (இந்த மாகாணத்து) துணிகளைத்தான் சிலோன் மக்கள் விரும்பி வாங்கி உடுத்தி வருகிறார்கள்.

இந்த உத்திரவால், அதிக விலை போட்டு சிலோன் துணிகள் வாங்கி, குறைந்த விலைக்கு விற்கநேரிடும். அதில் ஏற்படும் நஷ்டத்தை இம்மாகாண தறி துணிகள் மீது வைப்பார்கள். இதன்மூலம் இந்நாட்டு கைத்தறி துணிகள் விலை ஒன்றுக்கு இரண்டு மடங்காக உயரும். இதன் மூலம் அதிக விலை கொடுத்து இம்மாகாணத்து கைத்தறி துணிகளை வாங்கமுடியாததிர்ப்பந்தம் அம்மக்களுக்கு ஏற்படும்.

மக்களுக்கு வாங்கும் சக்தி குறைந்துள்ள இந்த நாட்களில் குவிந்து கொண்டிருக்கும் ஆங்கிலோ, அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் ஜவுளியைத்தான் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இந்த நிலைமையை உண்டாக்கவே சிலோன் சர்க்கார் இந்த உத்திரவை போட்டிருப்பது என்பதுதான் உண்மை.

ஏனெனில் சிலோனில் வெள்ளத்தை என்ற இடத்தில் ஒரு மில் இருக்கிறது. சில ஆயிரம் கைத்தறிகள் தான் இருக்கின்றன என்று அறிகிறோம். இதன் மூலம் உற்பத்தியாகும் துணியைக் கொண்டு மேலே குறிப்பிட்ட நாலில் ஒரு பாகத்தைக் கூட ஈடு செய்ய முடியாது.

ஆங்கிலோ— அமெரிக்க ஏகாதிபத்திய [illegible] மார்க்கெட்டை [illegible] உத்திரவு இது [illegible] பத்திய எதிர்ப்[illegible] கொண்ட[illegible] இந்த உ[illegible] நிற[illegible]

இந்த விஷயத்தில் உடனடி தலையிட்டு பரிகாரம் காண வேண்டுமென விரும்புகிறோம். சிலோனிலிருந்து இறக்குமதி செய்யும் சரக்குகளுக்கு ஈடாக இம்மாகாண கைத்தறி ஜவுளியை ஏற்றுமதி செய்வதாயிற்று. ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்விஷயத்தில், உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென மேற்கண்ட வகையில் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று மாகாண கைத்தறி நெசவுத் தொழிலாளிகளையும் ஏற்றுமதி வியாபாரிகளையும்வேண்டுகிறோம்,

இம்மாகாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த பர்மா, இந்தோநேஷ்யா, இந்தோசைனா, மலேயா முதலான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த கைத்தறி ஜவுளி வியாபாரமும் இதே முறையால்தான் தடைப்பட்டுவிட்டதென்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

சிலோன் ஏற்றுமதி மட்டும் (லுங்கி, சாரம்) சுமாராக [illegible] வந்தது. [illegible] வதையும் [illegible] இ[illegible] டம் [illegible] பட்[illegible] து.

மக்கள்மீது ராஜாஜி....

(முதற் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பது மட்டுமின்றி அதிகப்படியான நிலமுள்ளவர்களை அதிக அளவு சுமையைத் தாங்கும்படி செய்ய வேண்டுமெனபதும் இம்மசோதாவின் நோக்கமெனறும், திருத்தப்பட்டுள்ள மசோதாவின் ஷரத்துக்கள் இந்த நோக்கங்களை நிறைவேற்றுகின்றனவென்றும் செலக்ட் கமிட்டி ரிப்போர்ட் கூறுகிறது.

தண்ணீர் வரி

தண்ணீர் செஸ்ஸையும் நிலவரியுடன் சேர்த்து இரண்டுக்கும் சர்சார்ஜ் விதிக்கப்பட வேண்டுமென மசோதா கூறிற்று. நிலவரியுடன் சேர்க்கப்பட்டு சர்சார்ஜ் விதிக்கப்படக்கூடிய தண்ணீர் வரியின் அதிகபட்ச அளவு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. எட்டு என்று செலக்ட் கமிட்டி திருத்தம் செய்துள்ளது. அதாவது ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 8-க்கு மேலுள்ள தண்ணீர் வரிக்கு சர்சார்ஜ் விதிக்கப்படக்கூடாதென கமிட்டி முடிவு செய்துள்ளது.

நிலவரி வஜா

நிலவரி சர்க்காரால் எந்த இடத்திலும் குறைக்கப்படுமேயானால், நிலத்தின் சொந்தக்காரர் உண்மையில் செலுத்தும் நிலவரிக்கு மட்டுமே சர்சார்ஜ் விதிக்க வேண்டுமென்று கமிட்டி திருத்தம் செய்துள்ளது.

மலபார், தென் கர்னாடகம் சம்பந்தமாக செலக்ட் கமிட்டி மசோதாவில் சில சிறு திருத்தங்களைச் செய்துள்ளது.

நிலவரி சம்பந்தமாய் பொய் கணக்கு கொடுப்பவர்கள் மட்டுமே குற்றவாளிகளாகக் கருதப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென கமிட்டி திருத்தம் செய்துள்ளது.

கண்டனக் குறிப்புகள்

தென்னேட்டி விஸ்வநாதம், கே. அரங்கநாதன், எம். நாராயண குரூப், எஸ். சுயம்பிரகாசம், சி. ராமலிங்கையா, எஸ். எஸ். கோல்க்பெயில், சி. எச். கனரன், ஜி. சி. கொண்டையா, எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை ஆகியோர் கமிட்டியின் முடிவை எதிர்த்து ஓட்டு செய்தனர். இவர்கள் கூட்டாக ஒரு கண்டனக் குறிப்பை சமர்ப்பித்துள்ளனர். திருத்தப்பட்ட பின்பும் இம்மசோதா மக்களுக்கு மிகவும் பாதகமுண்டுபண்ணக் கூடியதென்றும் இது கைவிடப்படவேண்டுமென்றும் இக் குறிப்பு கூறுகிறது. மசோதாவின் கொள்கையே தவறானதென்றும் ஏழைகள் மீதுள்ள வரிப்பளுவை இது அதிகரிக்கிறதென்றும், உற்பத்தி செய்ய வேண்டுமென்னும் ஆர்வத்தைக் குறைக்கக் கூடியதென்றும், எங்கும் பஞ்சம் பரவிக்கொண்டுவரும் இன்று இத்தகைய ஒரு மசோதா மிகவும் பொருத்தமற்றதென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இரண்டே ஓட்டுகள் அதிகமாக பெற்று செலக்ட் கமிட்டி குறுகிய மெஜாரிட்டியில் முடிவெடுத்திருப்பது இம்மசோதாவை மக்கள் பலமாக எதிர்க்கின்றனரென்பதையே சுட்டிக்காட்டுகிறதென்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மலபார் சம்பந்தமான ஷரத்துக்கள் மிகவும் மோசமாயிருக்கின்றனவென்று எம். நாராயண குரூப் தன் தனிக் குறிப்பில் கூறுகிறார்.

நிலப்பிரபுக்கள் மீது சிறிதளவு வரிவிகிதத்தைஅதிகரித்துள்ள போதிலும், மலபார் விவசாயிகளைப் பொருத்த வரையில் இம்மசோதா அபாயகரமானதென்று சி. எச். கனரன் கூறுகிறார். ஜில்லா சண்ணுகமிட்டியின் முடிவுகளை அடியோடு எதிர்ப்பதாக குறிப்பிடுகிறார்.

ஈட்டிமுனை

காற்றுடி அரசியல்!

தேர்தல் காலத்தில் சோஷலிஸ்ட் நிறத்தில் காட்சியளித்த காற்றுடி, பக்தவத்ஸலத்தின்பாரததேவிக்கு பூஜைபோடும் பூசாரியாக மாறியிருக்கும் பச்சோந்தித்தனத்தை நான் விமர்சித்திருந்தேன். இதைப் படித்தவுடன், காற்றுடிக்கு கோபம் வந்துவிட்டது. கூடுவிட்டுக் கூடு பாய்வது குற்றமா என்று கேட்கிறது! எங்கு இருந்தாலும், தோழர்களின் புரட்டுகளைப்பற்றியே எழுதிவருவதாகக்கூறி, தன் பதிவிரதத் தன்மைக்கு ருசுகாணபிக்கிறது! "எங்கிருந்தாலும் மக்கள் சக்தியின் ஹம்பக்கை அம்பலமாக்கிக்கொண்டுதானிருப்பேன்" என்று சபதம் போடுகிறது.

சபாஷ் காற்றுடி! நாளைக்கு 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' பத்திரிகை அதிகச் சம்பளம் கொடுத்தால், அதன பூசாரியாக மாறுவதற்கும் காற்றுடி கூச்சப்படாது! "தோழர்களின் புரட்டுகளை" புட்டுப்புட்டுக் காட்டி, "மக்கள் சக்தியின் ஹம்பக்கை" மட்டைக்கு இரண்டு கீற்றாக அம்பலப்படுத்தும் பணியை அமெரிக்கன் ரிப்போர்ட்டரில் சிறப்பாகச் செய்ய முடியுமல்லவா?

*

புதுவை காரைக்காலை மீட்பதற்காக, நேரு சர்க்கார் போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது. இதைக் கண்டித்து கனல் கக்குகிறது காற்றுடி!

புதுவை காரைக்காலை மீட்பதற்காக, பிரெஞ்சு வல்லரசை பகைத்துக்கொண்டால், விபரீதம் விளைந்து விடுமென்று காற்றுடி பூச்சாண்டி காட்டுகிறது! என்னவிருந்தாலும், காற்றுடி வீராதி வீரன தான!

வட ஆப்பிரிக்காவிலுள்ள சின்னஞ்சிறு டுனிஷியா கூட பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பல்லைப்பிடித்துஆட்டுகிறது! அமெரிக்க ஆயுதங்களுடன் ஆர்ப்பாட்டம் செய்யும் பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்து ஆறு வருஷ காலமாக வியட்நாம் மக்கள் வெற்றிகரமாகப் போராடி வருகிறார்கள்! பெட்ரோலை ஊற்றி கிருமிகளை இறைத்து சர்வநாச யுத்தம் நடத்தும் அமெரிக்கரை எதிர்த்து கொரிய மக்கள் சாவுக்கஞ்சாத சமர் செய்கிறார்கள், ஆனால் இங்கே, முறத்தை வைத்துக் கொண்டு, புலியை எதிர்த்துப்போராடிய தமிழ்ப்பெண்கள்வாழ்ந்தநாட்டிலே எட்டுப் புலியைக் காட்டி ஏமாற்றப்பார்க்கிறது காற்றுடி!

இந்திய மக்களிடம் வாலாட்டினால், சமுத்திர ராஜனுக்குச் சவால் விடுத்த சிட்டுக் குருவியின கதியை அடைவாய் என்று கல்கிப் பத்திரிகைகூட பிரெஞ்சு சர்க்காருக்கு சவால் விடுக்கிறது. யானையிடம் விஷமம் செய்யாதே யென்று வித்டன்கூட சித்திரம் போட்டு எச்சரிக்கிறது. ஆனால் காற்றுடி, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு முன்னால் பெட்டிப் பாம்பாக அடங்க வேண்டுமென்று காரியவாதம் பேசுகிறது!

ருஷியா சீனவென்றால் புலியாகப் பாயும் காற்றுடி, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு முன்னால் பசுவாக மாறுவதில் ஒரு அரசியல் இருக்கிறது. ஏகாதிபத்திய சேவையே அந்த அரசியல்!

வாக்கெடுப்புப் பேச்சுக்கு இனி இடமில்லை என்று நேரு எச்சரித்தார். புதுவையும் காரைக்காலும், மாஹியும் இந்திய யூனியனில் ஐக்கியமாக வேண்டுமென்று அவர் கர்ஜித்தார். சொலலைச் செயலில் காட்டுங்களென்று நாம் கோஷித்தோம். பிள்ளையார் பிடிக்க, குரங்காய் முடிந்துவிட்டதே என்று காற்றுடி கவலைப்படுகிறது.

பண்டித நேருவின் வீரப் பேச்சேபேச்சுவார்த்தை நாடகத்துக்கு பீடிகைதான! சென்னையில் ஜம்பமாக பேசிய நேருவுக்கு டில்லியில் குறிப்பு எழுதி பாரிஸுக்கு அனுப்பும் பொழுது, "சுரம்" இறங்கிய தின மர்மமும் இதுதான. பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுக்கு சலுகை அளித்து சமரசம் பேசுவதற்கு நேரு சர்க்கார் தயாராயிருக்கிறது. பிரஞ்சு சர்க்காருக்கு எஜமானகை விளங்கும் டாலர் அமெரிக்காவும் அவ்வகையில் நிர்ப்பந்தம் செய்யுமென்பது திண்ணம். அதனால்தான போலீஸ் நடவடிக்கை கோரினால், காற்றுடிக்கு கோபம் வருகிறது!

★

மக்கள் சக்தியின் "ஹம்பக்"கை அம்பலப்படுத்துவதற்காக அவதரித்திருப்பதாக ஆர்ப்பாட்டம் செய்த காற்றுடி, அடுத்த தினமே மக்கள் சக்திக்கு முன்னால் மண்டியிட நேர்ந்தது.

உழைப்பாளி கட்சி காங்கிரசுடன் ஒத்துழைக்கப் போவதாகத் தகவல் வந்ததும் காற்[illegible] ல் தெரியாமல் குதித்தது. "கடைசியில் சிரிப்பவனே சமர்த்தன்" என்று நான் எழுதியதை ஏமாந்தவன் பேச்சு என்று புறக்கணித்தது. உழைப்பாளி கட்சியின் வெற்றிக்குக் காரணமாயிருந்த ஜனசக்தி கடலூர் முடிவை மாற்றிவிடுமென்று நான் கூறியதைத் கிண்டல் செய்தது.

ஆனால் அடுத்த தினமே, ஐ. ஜ. மு.விலிருந்து பிரியும் முடிவை எடுக்கவில்லை யென்று உழைப்பாளி கட்சித் தலைவர் அறிக்கை விடுத்தார். கொதிக்கும் பாலைருசிபார்த்து நாக்கை சுட்டுக்கொண்ட பூனையைப் போல காற்றுடி கஷ்டப்படுகிறது.

உழைப்பாளி கட்சித் தலைமை ராஜாஜி வலையில் விழுந்துவிட்டதென்று பூரித்த காற்றுடி, அத்தலைமை ஜனசக்திக்குமுன் ஊசலாடுவதைக்கண்டு, முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரையைப் போலவும், பின்னால் பார்த்தால் ராவுத்தர் குதிரையைப் போலவும் இருக்கிறதே என்று வருத்தப்படுகிறது.

கதையும் கருத்தும்

ஒரு மகாராஜாவுக்கு ஒரு மதிமந்திரி இருந்தார். மதிமந்திரி யோசனை கூறும் பொழுது ஒரு தவறு செய்துவிட்டார்; அதை மகாராஜாவும் கண்டு பிடித்துவிட்டார்! "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" அல்லவா! அரசநீதி மந்திரியின் குற்றத்துக்குத் தண்டனை விதித்தது. "நூறு சவுக்கடிக்கு உட்படவேண்டும் அல்லது ஒரே சமயத்தில் நூறு பூண்டு தின்ன வேண்டும்" என்று மந்திரிக்குத் தண்டனை விதித்தார் ராஜா.

பூண்டுக்குப் பயந்த மந்திரி சவுக்கடிக்குச் சம்மதித்தான். ஆனால் ஐந்து சவுக்கடி கிடைத்தவுடன், பாளம் பாளமாக உடல் வீங்க, வலி தாளமுடியாமல் திண்றினான். "அடி வேண்டாம்; பூண்டு தின்கிறேன்" என்று அலறினான். உடனே பூண்டுத் தாம்பாளம் அவன்முன் வைக்கப்பட்டது. பத்து பூண்டுகளைப் புசிப்பதற்குள் அவன் ஏழுதடவை நரகத்தை எட்டிப் பார்த்துவிட்டான! குடல் குமட்ட, வயிற்றிலே குத்தல் எடுக்க, தவியாய்த் தவித்த மந்திரி, "பூண்டு போதும், அடிவாங்குகிறேன்"! என்று அலறினான்.

மீண்டும் அடி தாங்க முடியாமல், பூண்டு தின்கிறேனென்று அழுதானாம்! இறுதியாக நூறு பூண்டுகளையும் தின்று நூற்றுக்கு 97 அடியும் வாங்க வேண்டிய நிலைமை அவனுக்கு ஏற்பட்டது! உறுதியில்லாத ஊசலாடிகளுக்கு நேரிடும் கதியை சித்தரித்துக் காட்டும் இந்தக் கதையை அரசியல் உலகிலுள்ளவர்கள் மறக்க முடியாது. பணசக்திக்கும் ஜனசக்திக்குமிடையே ஊசலாடி உருக்குலைந்து போகாமலிருக்க, இந்தக் கதையின் கருத்து அவர்களுக்கு உதவும்!

—எஸ். ஆர். கே.

அக். 25, 26 தேதிகளில் மாகாண பஞ்சாலைத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூட்டம்

சென்னை, அக் 18— மாகாணத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்று இம்மாதம் 25, 26 தேதிகளில் சென்னையில் தமிழ்நாடு தொழிற்சங்கக் காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெறும். எல்லா மில் தொழிலாளர் சங்கங்களும் குறைந்தபட்சம் 2 பிரதிநிதிகளை இக் கூட்டத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

பஞ்சாலைத் தொழிலாளர்களின் இன்றைய நிலைமையைப் பற்றி அக்கூட்டத்தில் பரிசிலனை செய்யப்படும்.

27ந் தேதியன்று சென்னை வரும் இந்திய சர்க்காரின் தொழில்மந்திரி வி. வி. கிரியைச் சந்திக்க ஒரு தூதுகோஷ்டியும் அக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும்.

செயலாளர்,
தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ்.

நடக்கவிருப்பவை

காஞ்சீபுரம்:—19—10—52 ஞாயிறு மாலை 6 மணிக்கு இரட்டை மண்டபம் அருகில் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெறும். பேச்சாளர்கள், கே. எஸ். பார்த்தசாரதி, பி. ஸ்ரீனிவாசராவ் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுக்காரியதரிசி).

சென்னை: 19—10—52 ஞாயிறு மாலை 3 மணிக்கு சென்னை மெமோரியல் ஹாலில் பின்னி பீச் இன்ஜினீயரிங் தொழிலாளர் சங்கத்தின 10வது ஆண்டுவிழா நடைபெறும். பல தலைவர்கள் கலந்துகொள்வார்கள்.

...யத் யூனியனும் சர்வதேச நிலைமையும்

...ளித்துவ அமைப்பு சீர்குலைகிறது

...ாங்கிரஸில் மலெங்கோவ்
...த அறிக்கையின் விவரம்

...டி முடிவுற்ற சோவியத் யூனி... ...சிக் காங்கிரஸில், கட்சியின் ...பில் தோழர் மலெங்கோவ் ... சமர்ப்பித்தார். சர்வ தேச நிலைமை, சோவியத் யூனிய...மை, கட்சி ஆகிய மூன்று ... அந்த அறிக்கையின் முக்கியத் ... பாகத்தை மட்டும் இந்த இத ...றுக்க முடியாத புள்ளி விபரங் ...நிலைமையைப்பற்றி முழுப்பார் ...தவும் இந்த பாகத்தை வாசகர் ...படித்து பயனடைவர்களென்று ...

...து காங் ...காப்தகர ...டய பல ...துள்ளன. ...உலக யுத் ...களையும் அர ...அடியோடு ...க்கி விட்டது. ...நாற்றத்தையே ...மைத்தது; சர்வ ...பத்திய பிற் ...களால் தயார் ...இழக்கில் ...வறி பிடித்த ...மேற்கில் ஹிட் ...ராலும் கட்ட ...பபட்ட யுத் ...தூண்டிவிட்ட ...டங்களையெல் ...டியாக்கிற்று. ...னின் வீரம் ...ராட்டத்தின ...யுத்தம் ஏகா ...திகள் எதிர் ...நேர்விரோத ...முடிவுற்றது. ...ரியன் அழிங் ...அல்லது ...தற்கோ பதில ...தின் விளைவாக ...பலம்பெற்று ...தன் சர்வதேச ...ஓங்கி உயர்ங ...யகம் பலவின ...கால்வியுறுவதற் ...த்தத்தின விளை ...ஐரோப்பாவி ...க்கு ஐரோப்பா ...வேறு நாடுகள் ...வ அமைப்பிலி ...யேறி, அவற்றில் ...நாயக அமைப்பு ...து. காலனிகளி ...நாடுகளிலுமுள்ள ...வும் கடுமையாக ...த்தப்படுவதற்கு ...த்தின் விளைவாக ...ரில் தேசவிடுதலை ...ஒரு புதிய சக்தி ...டுக் கிளம்பி, ஏகா ...கலோனியல் ...நெருக்கடியை ...ரமடையச் செய் ...தான சீனமக்கள் ...திர முக்கியத்வ ...ற்றி உலக விய ...ஏகாதிபத்திய ...பூராவிற்கும் ...ரு பெருத்த அடி ...ரித வர்க்கத்தின ...ரு பகுதி இன்று ...ய ஒடுக்கு முறை ...விடுதலை பெற்றுள் ...திபத்திய சுரண் ...லிருந்து விடுதலை ...ளது.

...த்துவ உலகிலும் ...யுத்தம் ஜெர்மனி, ...இத்தாலி ஆகிய ...ரும் அரசாங்கங் ...ரசுகளின ஜாபிதா ...விலகிவிடும் ...பதது. மேலும் ...ன்சும, பிரிட்டனும் ...ஏற்கனவே ...ந்தஸ்தை இழந்து ...செய்தது. ...ற்காலத்தில் சர்வ ...லாளித்துவ அமை ...விடாமல் மென் ...லவினமடைந்தது; ...னநாயக, சோஷலிச ...இடைவிடாமல் ...ம் வளர்ந்து பல ...

...ாதாரத் துறை ...பிற்கால ஆண்டு ...தலாளித்துவ நாடு ...ிய பொருளாதார ...ள் பலவும் ஏற்பட் ...அமெரிக்க ஏகாதி ...விஸ்தரிப்பை அடு ...லாளித்துவ நாடுக ...ய விரோதங்கள் ...டைந்துள்ளன. ...தாரத்தை ராணுவ ...வது மூலமும் ...ரு யுத்தத்திற்கு ...து மூலமும் ஏகாதி ...இந்த பொரு...

...வின் தலைமையிலுள்ள ஜனநாயக-எதிர்ப்பு ஆக்கிரமிப்பு முகாம், சமாதானத்திற்காகப் பாடுபடும் ஜனநாயக முகாம் ஆகிய இரு முகாம்களும் தோன்றின. இந்த கால கட்டத்தில் முதலாளித்துவ உலகில் பிற்போக்கிற்கும் ஆக்கிரமிப்பிற்கும் புதியதோர் தலைமைப்பீடம் உருவாகியுள்ளது. அமெரிக்காதான் இந்த தலைமைப் பீடம். சமாதானத்திற்கும் மக்களின் சுதந்திரத்திற்கும் தேசிய சுதந்திரத்திற்கும் பிரதான அபாயம் இன்று அமெரிக்காவிலிருந்து தான வருகிறது. இந்த அபாயத்தைக்கண்டு, உலகெங்கும்சமாதான சக்திகள் சமாதானத்தையும் தங்கள் நாடுகளின தேசியசுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு உறுதியுடன் போராடும்பொருட்டுத் திரண்டெழுந்துள்ளன.

யுத்தபிற்காலத்தில் சோவியத் யூனியன் 18-வது கட்சி காங்கிரஸ் சுட்டிக்காட்டிய பாதையில், யுத்தத்தால் தடைசெய்யப்பட்ட அந்த பாதையில், அதாவது சமாதான ரீதியில் முன்னேறி சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்குப் படிப்படியாக வளர்ந்து செல்லும் பாதையில், மீண்டும் முன்னேறிச் செல்ல தொடங்கிற்று. யுத்த பிற்கால ஆண்டுகளில் தொழிலிலும், போக்குவரத்திலும், விவசாயத்திலும் இன்னும் விஞ்ஞானத் துறைகள் யாவற்றிலும், கலாச்சாரத்திலும் கலையிலும் சோவியத்யூனியன் மாபெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளது. இவ்வாண்டுகளில் சோவியத் அமைப்பு மேலும் பலம்பெற்று உறுதியடைந்தது. சோவியத் சமுதாயத்தின் கருத்தொற்றுமையும் அரசியல் ஒற்றுமையும் நம நாட்டிலுள்ள தேசிய இனங்களிடையே உள்ள நட்புறவும் மேலும் ஓங்கி வளர்ந்துள்ளன. இவ்வாண்டுகளில் உலக சமாதானத்தைப் பாதுகாத்து நிலைநாட்டுவதற்கு சோவியத் யூனியன் சக்திவாய்ந்த போராட்டம் நடத்திவந்துள்ளது.

சர்வதேச நிலைமையின் பிரதான அம்சங்களை ஆராய்வோமாக.

1. சர்வதேச முதலாளித்துவ அமைப்பும் முதலாளித்வ நாடுகளின் பொருளாதார நிலையும் மேலும் பலவீனமடைகின்றன.

உலகப் பொருளாதார நிலைமையை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்பொழுது, அதில் இன்று திட்டவட்டமான இருவித வளர்ச்சிப் போக்குகள் காணப்படுகின்றன.

சோவியத் யூனியன் மக்கள் ஜனநாயகங்கள் ஆகியவற்றின் சமாதானப் பொருளாதாரம் தங்கு தடையின்றி முன்னேற்ற மடைந்து வருவது முதலாவது போக்கின பிரதிநிதியாகும். இந்தப் பொருளாதாரம் நெருக்கடிகளால பாதிக்கப் படுவதில்லை. சமூகத்தின் பொருளாதார கலாச்சார தேவைகளை அதிகபட்ச அளவு பூர்த்தி செய்ய வேண்டுமெனபதே இந்தப் பொ... ளாதாரத்தின் நோக்கமாகு... வெகுஜனங்களின் வாழ்க்கை... தரம் இடைவிடாமல் உயர்ந்... வருவதையும் எல்லாருக்கும் வேலை கிடைப்பதையும் இ... பொருளாதாரம உத்திர... ...கிறது. ஜனநாயக ...டுகளி...

...துவப் பொருளாதாரம் இரண்டாவது போக்கின் பிரதிநிதியாகும், மென்மேலும் அதிகமாக தீவிரமடைந்துவரும் முதலாளித்துவ பொது நெருக்கடியினுள்ளும் திரும்பத் திரும்ப வெடித்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியினுள்ளும் அகப்பட்டுக் கொண்டு திக்குமுக்காடும் ஒரு பொருளாதாரம் இது. ஆயுத உற்பத்திக்குப் பொருளாதாரத்தைக் கட்டுபடுத்துவதும் யுத்தத்திற்கானஉற்பத்தியில் ஈடுபடும் தொழில்கள் மாத்திரம் ஒருதலைப்பட்சமாக வளர்வதும் நாடுகளிடையே விரோதமும் போட்டியும் ஏற்படுவதும் ஒரு சில நாடுகள், பிற நாடுகளை அடிமைப்படுத்துவதும் தான் இதன் போக்கு. முதலாளித்துவப் பொருளாதாரம் சமூகத்தின் நலன்களுக்காகப் பாடுபட வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை. நாட்டிலுள்ள பெருவாரியான மக்களைச் சுரண்டி, சீரழித்து, வறுமையில் ஆழ்த்துவதின் மூலமும், இதர நாடுகளிலுள்ள மக்களை, குறிப்பாக பின் தங்கியுள்ள நாடுகளிலுள்ள மக்களை, அடிமைப் படுத்தி இடைவிடாமல் அவர்களைக் கொள்ளையிடுவதின் மூலமும், இறுதியில் யுத்தத்தின் மூலமும் தேசப் பொருளாதாரத்தை ராணுவமயமாக்குவதின் மூலமும் முதலாளிகளுக்கு அதிகபட்ச லாபங்கள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமெனபதையே இது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேற் கூறிய படுமோசமான நிலைமைக்கு இதுவே காரணமாகும்.

சோவியத் யூனியனின் தொழில் வளர்ச்சியையும் முதலாளித்வ நாடுகளின் ஸ்தம்பிப்பையும் பின்வரும் புள்ளி விபரங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன :—

1929-க்கும் 1951-க்கும் இடையில் சோவியத் யூனியனிலும் முதலாளித்துவ நாடுகளிலும் தொழில் உற்பத்தியின் வளர்ச்சி :
(1929-ம் ஆண்டு உற்பத்தியை 100 என்று கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது)

	1929	'39	'43	'46	'47	'48	'49	'50	'51
சோவியத் யூனியன்	100	552	573	466	571	721	870	1082	1266
அமெரிக்கா	100	99	217	155	170	175	160	182	200
பிரிட்டன்	100	123	—	112	121	135	144	157	160
பிரான்சு	100	80	—	63	74	85	92	92	104
இதாலி	100	108	—	72	93	97	103	118	134

இந்த அட்டவணையிலிருந்து தெரிவது என்ன? சோவியத் யூனியனின் தொழில் உற்பத்தி 1929-ல் இருந்ததைவிட 1951-ல், 1266சதவிதம்உயர்ந்துள்ளது. அதாவது 1929-க்கும் 1951-க்கும் இடையில் சோவியத் யூனியனின் தொழில் உற்பத்தி 13 மடங்கு அதிகரித்துள்ளது. யுத்தத்திற்கு முன்பிருந்ததைப் போலவே, யுத்த பிற்காலத்திலும் சோவியத் நாட்டின் இயந்திரத் தொழில் சமாதான உற்பத்தியின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தங்கு தடையின்றி முன்னேற்றமடைந்துள்ளது.

ஆனால் அமெரிக்காவின் தொழில் உற்பத்தி 1929-க்கும் 1939-க்கு மிடையில் ஸ்தம்பித்துக் கிடந்தது. 1939க்குப்பின் அது முன்னேறியதென்றாலுங்கூட, இரண்டாவது உலக யுத்தத்தின்போது ராணுவ தளவாட உற்பத்தி வானளாவி உயர்ந்ததின காரணமாகவே இந்த முன்னேற்றம் சாத்தியமாயிற்று. இந்தயுத்தம் முடிவடைந்ததும் அமெரிக்கத் தொழில உற்பத்தி கணிசமான அளவு குறைந்தது. கொரி... மக்கள்மீது யுத்தம ...த்து விடப்பட்ட ...ன் அமெரிக்கா அதிகப ...ன ஆயுத உற்பத்தியில் இறங்கிய பின்பு அமெரிக்கத் தொழில் உற்பத்தி மீண்டும் ஓரளவு ...கிறது. யுக்த ...வாட...

இதே காலகட்டத்தில் பிரிட்டனில் தொழில் உற்பத்தி 60 சதவிதம் தான் அதிகரித்தது. மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் தொழில் உற்பத்தி மேலும் அதிகமான அளவிற்கு 1929-ம் ஆண்டின் நிலையிலேயே ஸ்தம்பித்துக் கிடக்கிறது.

ஆனல் ஐரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகளில் நாம் காண்டதென்ன? மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளைக்காட்டிலும் இந்த நாடுகள் யுத்தத்தில் பன மடங்கு அதிகமான சேதமடைந்தன. இருந்த போதிலும் இந்நாடுகள் 1951க்குள் தங்கள் தொழில் உற்பத்தியை யுத்த முற்கால நிலையைக் காட்டிலும் மிகவும் அதிகமாக உயர்த்திக் கொண்டுள்ளன. போலந்தில் 2.9 மடங்கும், செக்கோஸ்லோவாக்1·7 மடங்கும், ஹங்கேரியில் 2·5 மடங்கும், ருமேனியாவில் 1·9 மடங்கும், பல்கேரியாவில்4.6மடங்கும் அல்பேனியாவில் 5 மடங்கிற்கும் அதிகமாகவும் தொழில் உற்பத்தி வளர்ந்தது. இந்த நாடுகளில் தொழில்கள் மட்டுமின்றி விவசாயமும் விரைவாக முன்னேறி வருகிறது. குறிப்பாக தொழில்களுக்கு மூலப்பொருள்களை அளிக்கும் விவசாயப் பயிர்கள் மிகவும் துரிதமாக வளர்ச்சி பெற்றுள்ளன. ஆடு மாடுகள் வளர்க்கும் தொழிலும் குறிப்பிடத்தக்க பல வெற்றிகளைக் கண்டுள்ளது.

ஜெர்மன் ஜனநாயக குடியரசும் பொருளாதார வளர்ச்சியில்பிரமிக்கத் தக்க முறையில் முன்னேற்ற மடைந்துள்ளது. 1952-க்குள் யுத்த முற்கால தொழில்உற்பத்தியை எட்டிப் பிடித்ததோடல்லாமல், 36 சதவிகிதம் அதிகரித்துக் கொண்டுமுள்ளது. 1946-ல் இருந்ததைக் காட்டிலும் 1951-ல் தொழில் உற்பத்தி 2.4 மடங்கு அதிகமாயிற்று. இரும்பு, எக்குத் தொழில்களும், இயந்திர உற்பத்தி தொழிலும், ரசாயனத் தொழிலும், மின்சாரத் தொழில்களும் ஆண்டுதோறும் இடைவிடாமல் வளர்ச்சி பெற்று வருகின்றன. விவசாயத் துறையிலும் சாகுபடியாகும் நிலத்தின விஸ்தீரணமும் ஏக்கர் ஒன்றுக்கு அறுவடையாகும் தானயத்தின அளவும் யுத்த முற்கால அளவுகளைக் காட்டிலும் மிகவும் அதிகரித்துள்ளன.

சீன மக்கள் குடியரசின் பொருளாதாரம் மிகவும் விரைவாக வளர்ச்சி யடைந்து வருகிறது. அதன் மக்கள் அளவு கடந்த ஆர்வத்துடன் உழைத்து வருகின்றனர். ஜப்பானிய படையெடுப்பாளர்களையும் கோமின்டாங் பிற்போக்கர்களையும் எதிர்த்து நீண்ட பல ஆண்டுகளுக்கு நடைபெற்ற நாசகார யுத்தத்தின கொடிய பலாபலன்களை அவர்கள் வெற்றிகரமாக அகற்றி ஒழித்துவிட்டு முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். மக்கள் ஜனநாயக சர்க்கார் நிறுவப்பட்டதிலிருந்து சீனத்தின தொழில் வளர்ச்சி மிகவும் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

1949ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1951-ல் ஆலைப் பொருளுற்பத்தி இரண்டு மடங்குக்கும் அதிகமாகப் பெருகியது; ரெயில்வே போக்குவரத்து புனரமைப்பு செய்யப்பட்டு, புதிய ரயில்வே லைன்களும் வெகு வேகமாக அமைக்கப்பட்டு வருகின்றன. மக்கள் சீனக் குடியரசினல் அமுலாக்கப்பட்ட மகத்தான விவசாய சீர்திருத்தத்தின பயனாக விவசாயத்தில் முக்கியமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1949உடன் ஒப்பிடும்போது 1951ல் தானய உற்பத்தி 128 சதவிகிதமும், பருத்தி 252 சதவிகிதமும் உற்பத்தியாகியுள்ளது. பழைய சீனவில் தேசத்தின நிதி நிலைமை பரிபூர்ணமாக சீர்கெட்டுக் கிடந்தது; பணவீக்கம் பிரம்மாண்டமான அளவிற்கு ஏற்பட்டிருந்தது; ஆனல் மக்கள் சீனக் குடியரசு நாட்டின் நிதி நிலைமையை ஒழுங்குபடுத்தி நாணயச் செலவாணியை ஸ்திரபபடுத்தியது.

ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து விடுதலை அடைந்ததற்குப பின்னல் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசில் பெரிய பொருளாதார முன்னேற்றங்கள் சாத்ய மாக்கப்பட்டுள்ளன. 19...6 ...டன்ஒப்பிடும்...து 19... ...ப பெருகு...

எல்லாப் பயிர்களின் அறுவடையும் வெகுவாக அதிகரித்தது. கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் மக்களின் ஆக்கபூர்வமான உழைப்பு அமெரிக்கஏகாதிபத்தியவாதிகளின் தாக்குதலால் குறுக்கிடப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் கொடியின்கீழ் நடவடிக்கைகளிலீடுபடும் அமெரிக்கத் துருப்புகளும், இதர நாடுகளின் துருப்புகளும் வடகொரியாவின் சமாதானத்தில் திகழ்ந்த நகரங்களையும், கிராமங்களையும், அதனுடைய தொழிலையும், விவசாயத்தையும் மிருகத்தனமாக நாசமாக்கி வருகின்றனர்.

மங்கோலிய மக்கள் குடியரசு தன்னுடைய பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் பல முக்கிய வெற்றிகளை சாதித்துள்ளது. ஒவ்வொரு வருடமும் அது பலம் பெற்று விரிவடைந்து வருகிறது. மங்கோலிய மக்களின் யதார்த்த வாழ்க்கையில் சுபீட்சம் அபிவிருத்தியடைந்து வருகிறது. நாட்டினுடைய அடிப்படையான தொழிலாகிய, கால்நடை வளர்ப்பு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. குடியரசு ஏற்பட்ட பின் ஆடுகளும், மாடுகளும் 2½ மடங்கு அதிகரித்துள்ளன. கால்நடைகள் பூராவிலும் இப்பொழுது உழைக்கும் விவசாயிகளுக்குசொந்தம். சர்க்காரால் நடத்தப்படும் தொழில்களும், கூட்டுறவு முறையில் நடத்தப்படும் தொழில்களும், கடந்த 10 வருடங்களில் சுமார் மும்மடங்கு ஆகியுள்ளன.

முதலாளித்வ நாடுகளிலும், ஜனநாயக முகாமிலுள்ள நாடுகளிலும் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சிபற்றிய புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது, அமெரிக்கா உட்பட முதலாளித்வ நாடுகளில் ஆலைப் பொருளுற்பத்தியின் வளர்ச்சி விகிதம், சோவியத் யூனியனிலும், மக்கள் ஜனநாயக நாடுகளிலும் அதன வளர்ச்சி விகிதத்தைக் காட்டிலும் மிகமிகக் குறைவு.

இந்தப் புள்ளி விபரங்களிலிருந்து வெளியாகும் மற்றொரு விஷயமென்னவெனில், முதலாளித்வ நாடுகளில் ஆலைப் பொருளுற்பத்தியில் சிறிது வளர்ச்சி ஏற்பட்டுள்ளதெனில், அது யுத்தத் தயாரிப்புகளினலும், யுத்தகாலத்தில் யுத்த இயந்திரம் ஈடுபடுத்தப்பட்டதினலும் மாத்திரம் தான.

முதலாளித்வத்தின் பொருளாதார, அரசியல் முரண்பாடுகளை அகற்றுவதற்குபதிலாக, இரண்டாவது உலக யுத்தம் இந்த முரண்பாடுகளை மேலும் அதிகரிக்கவே செய்தது.

முதலாளித்வ நாடுகளின் பொருளாதாரத்தைக் குலைத்து, உலக முதலாளித்வ அமைப்பின் பொது நெருக்கடியை ஆழமாக்கியது. ஏகாதிபத்ய நாடுகளின் பெரு முதலாளிகளின் நம்பிக்கைகளை இரண்டாவது உலக யுத்தம் ஊர்ஜிதம் செய்யவில்லை. யுத்தத்திலீடுபட்ட இரண்டு முதலாளித்வ கோஷ்டிகளும, ஆயுத பலத்தைக் கொண்டு உலகத்தை மீண்டும் தங்களுக்குள் மாற்றிப் பங்கிட்டுக் கொள்ளவும் புதிய மூலப் பொருள் ஆதாரங்களைப் பிடித்துக் கொள்ளவும் தன்னுடைய எதிரிகளை உபயோகப்படுத்திக் கொண்டு தன்னுடைய பொருட்களுக்குச் சந்தையை விஸ்தரிக்கவும், அதாவது சொந்தப் பொருளாதார நிலைமையை பலப்படுத்திக் கொள்ளவும் உலகத்தின மீது தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டவும் கணக்கு போட்டன. ஆனல் இந்த இரண்டுகணக்குகளும் தப்பாகப் போய்விட்டன. மூன்று முக்கிய முதலாளித்வ நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியவற்றின் பிரதான எதிரிகளென்ற முறையில் ஜப்பானும் ஜெர்மனியும் தோற்கடிக்கப்பட்ட நாடுகளென்றாலும், இந்த நாடுகளின், குறிப்பாக அமெரிக்காவின் 4, 5 மடங்கு ஆலைப்பொருளுற்பத்தி பெருக்கிவிடுவோம் என்ற நம்பிக்கைகள் தவிடுபொடியாயின அதற்கும் மேலாக சோவியத் யூனியன, ஐரோப்பிய மக்கள் ஜனநாயகங்கள் முதலாளித்வ அமைப்பிலிருந்து விடுபட்டு, சோவியத யூனியனுடன சேர்ந்து, ஐக்கியப்பட்ட வலிமை பொருந்திய ஜனநாயக, சமாதான முகாமை அமைத்துள்ளன. அது ஏகாதிபத்திய முகாமை எதிர்த்து நிற்கிறத

தோழர் ஸ்டாலின் ... காட்டியதுபோல், ...ரான இரண... ஏற்பட்டதின ...

ஆக்ரமிப்புத் தனமைவாய்ந்த ஏகாதிபத்ய முகாம். ஒரு உலக மார்க்கெட்டின அழிவு, இரண்டாவது உலக யுத்தத்தினுடையவும் அதனுடைய பொருளாதார விளைவுகளுடையவும் மிக முக்கியமான பொருளாதாரப் பலனாகும்.

இந்த இரண்டு உலக மார்க்கெட்டுகளின் வளர்ச்சி ஒன்றுக்கொன்று நேர் எதிரான பாதைகளில் போகின்றன. புதிய ஜனநாயக உலக மார்க்கெட்டுக்கு விற்பனை சம்பந்தமான நெருக்கடிகள் ஒன்றும் கிடையாது. ஜனநாயக முகாமில் நெருக்கடி எனபதேயில்லாமல் தொழிலபிவிருத்தி ஏற்பட்டுவருவதைப் போல், ஜனநாயக மார்க்கெட்டில் பொருள்-வாங்கும் சக்தியும் வருஷத்திற்கு வருஷம் அதிகரித்து வருகிறது

மேலும், அந்த முகாமின் எல்லா நாடுகளிலும் உற்பத்தியின் வளர்ச்சி தங்கு தடையில்லாமல் நடைபெற்று வருவதின் காரணமாகவும், ஜனநாயக மார்க்கெட் தொடர்ந்து விஸ்தரித்துவருகிறது. இதற்கு நேர் எதிரானமுறையில், மற்றொரு உலக மார்க்கெட்டாகிய ஏகாதிபத்திய மார்க்கெட்டில்—சோவியத் யூனியனுடனே, இதர ஜனநாயக நாடுகளுடனே சம்பந்தப்படாத இந்த மார்க்கெட்டில், இதன் காரணமாகவே அது குறுக்கப்பட்டு, தொழிலில் ஏற்படும் நெருக்கடி, தொழில்கள் நிறுத்தப் படுவது,வேலையில்லாத் திண்டாட்டம், வெகுஜனங்கள் ஓட்டாண்டியாவதுஜனநாயகநாடுகளுடன் அது தொடர்பற்றிருப்பது ஆகிய காரணங்களினல் அது விற்பனை நெருக்கடியால் பாதிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒரு உலக மார்க்கெட் என்பது சிதறுண்டு போய்விட்டதால், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ்—ஆகிய முக்கிய முதலாளித்துவ நாடுகளுக்கு உலகத்தின மூலாதாரங்களைப் பெறுவதற்குள்ள மண்டலங்களும் வெகுவாகக் குறைந்து விட்டன. இதன் விளைவாக முதலாளித்வ உலக மார்க்கெட் இடைவிடாமல் சுருங்கிக் கொண்டு வருகிறது. இந்த மார்க்கெட்டில் பொருள்கள் விற்பனையாவதற்குள்ள நிலைமைகள் சீரழிந்துவிட்டன; தொடர்ந்து சீரழிந்து வருகின்றன.

இரண்டாவது உலகயுத்தத்தின பலன்கள் வெவ்வேறு முதலாளித்வ நாடுகளுக்கு வெவ்வேறாக இருந்து வந்துள்ளன. ஆகவே அவர்களுக்கிடையிலுள்ள பொருளாதார உறவுகளை இது கணிசமாக மாற்றியுள்ளது. யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்ட பல நாடுகளின் பொருளாதாரங்கள், தொடர்ந்து நீண்ட யுத்தத்தின காரணமாகவும் மனித நஷ்டத்தினலும் பொருள் நஷ்டத்தினலும் மிகவும் பாதகமடைந்தன. பிரதானமாக, ஜெர்மனி, இதாலி, ஜப்பான்-ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டன. பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், இன்னும் பல நாடுகளும் பெரிதும் நாசமடைந்தன. பிரிட்டன் மிகக கடுமையாக பலஹீனப் படுத்தப்பட்டது.

அமெரிக்காவிற்கு யுத்தத்தினல் கொள்ளை லாபமும், அமெரிக்கக் கோடீசுவரர்களின பொருளாதார நிலைமைகள் பலப்படுவதுமேற்பட்டன. இருந்தபோதிலும் அமெரிக்கா தன் லட்சியத்தை அடைவதில் வெற்றி பெறவில்லை. உலகமார்க்கெட்டின மீது அமெரிக்க மூலதனத்தின ஆதிக்கத்தை ஏற்படுத்துவதில் அது வெற்றி பெறவில்லை. ஜெர்மனியும், ஜப்பானும் தோல்வி யடைந்து சீரழிந்து போய்விட்டதால், அமெரிக்கா தன்னுடைய, பொருளுற்பத்தியை 4 அல்லது 5 மடங்கு அதிகரிக்கலாம் எனறு நினைத்தது. ஆயினும் அது உற்பத்தியை இரணடு மடங்குதான பெருக்க முடிந்தது. இப்பொழுது பொருளாதார நெருக்கடி என்ற சரிவுப்பாதையில சரிந்துகொண்டிருக்கிறது. குறைந்தபட்சம் 30 லட்சம பேராவது முழுக்க முழுக்க வேலையில்லாமல் இருக்கிறார்கள் எனபதும், அதற்கும் அதிகமான பேர்கள பாதியளவு வேலையில்லாமல் இருக்கிறார்கள் எனபதும் உண்மை.

...குஜன வேலைநிறுத்தங் ...மெரிக்கக் கோடீசுவரர் ...நெருக்கடிகளை அதி... ...ன்றன. அமெ... ...தொழில்களுக்கு ... யூனியன், சீன, ... ஜனநா... ...

இருப்பதுமட்டுமின்றி இதர, எல்லா முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார அமைப்புகளையும் சீர்குலைக்கும் சக்தியாகவும் இருந்து வருகிறது. தன்னுடன் போட்டி போடக் கூடியவர்களின்பலவீனமான நிலைமையை உபயோகப்படுத்திக்கொண்டு, யுத்தம் முடிந்ததிலிருந்து அமெரிக்கஏகபோக மூலதனம் உலக முதலாளித்துவ மார்க்கெட்டின் ஒரு கணிசமான பகுதியை அபகரித்துக் கொண்டது. முதலாளித்துவ நாடுகளுக்கிடையே பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த பலதரப்பட்ட பொருளாதாரப் பிணைப்புகளை நாசமாக்கி, அதற்குப்பதிலாக இந்த நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் மாத்திரம் பொருளாதாரப் பிணைப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

கொஞ்சமும் ஈவிரக்கமின்றித் தங்கள் பொருள்களைப் பிறநாடுகளின் மீது திணிப்பதின் மூலமாக தங்களுடைய ஏற்றுமதிகளை மாத்திரமே அதிகப்படுத்துவதின காரணமாகவும், அதே சமயத்தில் தங்கள்உள்நாட்டில் வேறெந்த வெளி நாட்டின் சரக்குகளும் இறக்குமதியாகாமல் தடுப்பதின் மூலமும் முதலாளித்வ உலக மார்க்கெட்டுக்கு இன்னும் அதிக நெருக்கடியை அமெரிக்க ஏகபோக முதலாளிகள் உண்டுபண்ணி வருகின்றனர். இதன் விளைவாக அதே சமயத்தில் அமெரிக்க மக்கள் விலைவாசி உயர்வினல் மிகவும் அமுக்கப்படுகிறார்கள். மேற்கு ஐரோப்பிய நாடுகள் பரம்பரை பரம்பரையாக கிழக்கு ஐரோப்பிய மார்க்கெட்டுகளிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவையும், மூலப் பொருள்களையும் வாங்கிக்கொண்டு தங்கள் நாடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை பெரிய அளவிற்கு அவைகளுக்கு ஏற்றுமதி செய்துவந்தன. ஆனல் இப்பொழுது அமெரிக்க ஏகாதிபத்யம் மேற்கு ஐரோப்பிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய மார்க்கெட்டிலிருந்து உணவு பெறும் சந்தர்ப்பத்தைப் பறித்து வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்தப் பொருளாதாரக் கொள்கை, அமெரிக்காவிற்கும் இதர முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே உள்ள முரண்பாடுகளை மேலும் தீவிரமாக்குவதில் தான் கொண்டு போய் முடியும். இவைகளில் முக்கியமானது, அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்குமிடையில் உள்ள முரணபாடுதான். இது அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகபோக முதலாளிகளிடையில் எண்ணை, ரப்பர், அரிய உலோகங்கள், கெந்தகம், கம்பளி ஆகியவற்றைப் பெறுவதற்கும், மார்க்கெட்டுகளுக்கும் வெளிப்படையான சண்டை என்ற வடிவத்தையே எடுத்து வருகிறது.

இத்துடன் அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் ஒரு பக்கத்திலும், அமெரிக்காவுக்கும் இதாலிக்கும், அமெரிக்காவிற்கும் மேற்கு ஜெர்மனிக்கும், (அதாவது அமெரிக்காவிற்கும், அமெரிக்க சர்வாதிகாரிகளின் ராணுவங்கள் தங்கி நின்று வசபபடுத்திக் கொண்டிருக்கும்நாடுகளுக்கும்) இடையிலும் மிக்க கடுமையான முரணபாடுகள் இருக்கின்றன.

தோல்வியடைந்த நாடுகள், காலவரையறையின்றி அமெரிக்க எஜமானர்களின காலடியின் கீழேயே இருப்பதற்கு ஒத்துக்கொள்வார்கள் என்று நினைப்பது சுத்தப் பைத்தியக்காரத்தனமாகும். ஏதாவதொரு விதத்தில் அவர்கள் அமெரிக்க அடிமைத்தனத்தடியைத் தூக்கி யெறிந்து விட்டு சுதந்திரமாக விடுதலை பெற்றவர்களாக வாழ முயற்சி செய்யமாட்டார்கள் என்று நினைப்பது மடத்தனமாகும். அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்குமிடையில் உள்ள முரண்பாடுகள், அமெரிக்காவிற்கும் பிரான்சுக்குமிடையில் உள்ள முரண்பாடுகள் ஆகியவை மேலும் மேலும் கூர்மையாகி வருகின்றன.

அமெரிக்க ஏகாதிபத்யம் "உதவி" என்ற நொண்டிச் சாக்கின் கீழும், கடன்கள் கொடுப்பதின மூலமும் பிரிட்டன், பிரான்ஸ், இதாலி ஆகிய நாடுகளின் பொருளாதாரங்களுக்குள்ளே ஊடுருவி வருகிறது. பிரிட்டிஷ், பிரெஞ்சு காலனிகளிலுள்ள கச்சாப் பொருள் மூலாதாரங்களையும் மார்க்கெட்டுகளையும் அபகரித்து வருகிறது. இதன் காரணமாகவும் அவைகளுக்கிடையிலுள்ள முரணபாடுகள் ...வும் கூர்மையாகி வருகின்...

...டனும், அதைத் ...ான்சும், இதர ...ம், தங் ...ான ...ற ...கள் ...வும் ...ஆதிக்...கத்தின் கீழிருந்து துண்டித்துக்கொண்டு போவதற்கு முயற்சி செய்து வருகின்றன. பிரிட்டிஷ் முதலாளிகள், உலக வியாபாரத்தின் மீது அமெரிக்கா கொண்டுள்ள இரும்புப் பிடியை எதிர்த்து, ஏற்கனவே கடுமையான போராட்டம் நடத்தி வருகின்றனர்.

யுத்தம் முடிந்ததிலிருந்து முதலாளித்வ நாடுகளைக்கவ்வி வந்த பொருளாதாரக் கஷ்டங்கள், ஏகாதிபத்ய வாதிகள் தாங்களாகவே ஜனநாயக உலக மார்க்கெட்டுக்குக் கதவை மூடித் தாளிட்டுவிட்டதின் காரணமாக அவை மேலும் தீவிரமாகியுள்ளன. சோவியத் யூனியனுடனும், ஐரோப்பிய மக்கள் ஜனநாயகங்களுடனும் அமெரிக்கா தன் வியாபாரத்தைப் பரிபூர்ணமாகக் குறைத்து விட்டது. சீனவுடன் வியாபாரம் செய்வதை அடியோடு நிறுத்தி விட்டது. தோற்கடிக்கப்பட்ட தேசங்களை (ஜப்பான, மேற்கு ஜெர்மனி, இத்தாலி) மட்டுமின்றி பிரிட்டன் பிரானஸ், ஹாலந்து, டென்மார்க், நார்வே, பெல்ஜியம் முதலிய இதர முதலாளித்துவ நாடுகளைக் கூட ஜனநாயக தேசங்களின் மார்க்கெட்டில் சாமான்களை விற்கவோ அல்லது வாங்கவோ கூடாதென்று அமெரிக்கா நடை முறையில் தடை செய்துள்ளது. இன்று ஜனநாயக முகாமிலுள்ள தேசங்களுடன் அமெரிக்கா 1937ம் வருடத்தில்செய்தவியாபாரத்தில் பத்தில்ஒரு பங்கே 1951ல் செய்திருக்கிறது. இந்நாடுகளுடன் பிரிட்டன் செய்து வந்த வியாபாரம் ஆறில் ஒரு பங்காகவும், பிரான்ஸ் செய்து வந்த வியாபாரம் நான்கில் ஒரு பங்காகவும் குறைந்திருக்கிறது.

சோவியத் யூனியன், சீன, ஐரோப்பிய மக்கள் ஜனநாயகங்களை பொருளாதார 'முற்றுகை' போடுவதின் மூலம் இந்நாடுகளின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கலாம் என்று அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் எண்ணின. ஆனல் உண்மையில் இதன விளைவாக வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படவில்லை. புதிய ஜனநாயக உலக மார்க்கெட் உறுதிப்பட்டது. ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய சொந்த ஏற்றுமதி வியாபாரத்திற்கு இதன்மூலம் தாங்களே பெருந்தீங்கு இழைத்துக்கொண்டனர். அவர்களின் தொழில் உற்பத்திபலத்திற்கும், உற்பத்தி சரக்குகளின் விற்பனை சாத்தியங்களுக்குமிடையேயுள்ள முரண்பாடு இதன் விளைவாக இன்னும் தீவிரமாயிற்று.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஆழமான முரண்பாடுகள் தோன்றியிருக்கின்றன எனபதையும், மொத்தத்தில் உலகரீதியாக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பே குறிப்பிடத்தக்க அளவு ஒடுங்கி, பலவீன மடைந்திருக்கிறது எனபதையும், யுத்தத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் ஸ்திர நிலை மிகவும் குறைந்திருக்கிறது என்பதையும் இவை சுட்டிக் காட்டுகின்றன.

இந்தப் பொருளாதாரக் கஷ்டங்களை உணர்ந்த அமெரிக்க முதலாளிகள், கொரியப்போர், ஆயுதப்பெருக்கு, தொழில்களை ராணுவ மயமாக்குதல் மூலம் இவைகளை சமாளிக்க முயலுகின்றனர்.

கொரிய மக்களுக்கெதிராக ஒரு பிற்போக்கு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்ட பின்னர், ஜனநாயக முகாமிற்கு எதிராக யுத்த வெறியைத் தட்டி எழுப்பும் பொழுதே, அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் பொருளாதாரங்களை யுத்தத்திற்கென மாற்றிக் கொண்டு விட்டார்கள். பொருளாதாரத்தை ராணுவ மயமாக்கியிருக்கின்றனர். ஆயுத உற்பத்தியை பிரம்மாண்டமான அளவுகளுக்கு அதிகரித்துள்ளனர். தினே, தினே வளர்ந்து பெருகிவரும் இந்நாடுகளின் யந்திரத் தொழில் உற்பத்தி ராணுவப் படைகளின் யுத்த தயாரிப்புகளுக்காகச் செலவிடப்படுகிறது. அமெரிக்காவிலும், இதர முதலாளித்துவ நாடுகளிலும், உள்ள எல்லா முக்கியமான தொழில்களிலும் யுத்த காண்ட்ராக்டுகள்தான் தீர்மானமான அம்சங்களாகும். ஆயுதப் பெருக்கிற்காக நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்யப்படும் செலவுகளினல், முதலாளித்துவ நாடுகளின பட்ஜெட்டுகளில்ராணுவசெலவுகளின்பங்கு படிப்படியாக அதிகரித்து வருகிறது. 1937–38 நிதி வருடத்தில் 100 கோடி டாலர்களாக இருந்த அமெரிக்க நேரடி ராணுவ செலவு 1952–53ல் 5820 கோடி டாலர்களாகப் பெருகியுள்ளது. அதாவது அமெரிக்க மொத்த தேசிய பட்ஜெட்டில் 1937-38 நிதி வரு...

(4-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளரால் உலக யுத்த

உலக மக்களின் சமாதானப் போராட்டம்

மலெங்கோவ் அறிக்கைத் தொடர்ச்சி

டத்தில் 14 சதவிகிதங்கள் மட்டுமே இருந்த ராணுவ செலவு இப்பொழுது 74 சதவிகிதங்களாக அதிகரித்திருக்கிறது. அதே காலகட்டத்தில் பிரிட்டனின் ராணுவ செலவு 19 கோடி 70 லட்சம் பவுன்களிலிருந்து 163 கோடி 40 லட்சம் பவுன்களாக உயர்ந்துள்ளது. அதாவது யுத்தத்திற்கு முன்பு மொத்த பட்ஜெட்டில் 17 சதவிகிதமாயிருந்த ராணுவ செலவு இப்பொழுது 34 சதவிகிதமாக இரட்டித்துள்ளது. பிரான்ஸின் மொத்த பட்ஜெட்டில் சுமார் 40 சதவிகிதம், ராணுவத்திற்காக இப்பொழுது செலவிடப்படுகிறது.

இதற்கு முன் என்றுமே கண்டிராத அளவில் ராணுவ செலவு அதிகரித்து வருவதின் காரணமாக, வரி உயர்வுகளுக்கு ஒரு முடிவே இல்லாது போய்விட்டது. பண வீக்கத்தை அதிகரிக்கும் முறையில், அதிக ரூபாய் நோட்டுகள் அச்சிடப்பட்டு [illegible] முதலாளித்துவ நாடுகளின் [illegible] நாளுக்குநாள் மோசமாகி [illegible] குறைந்துள்ளது.

1951ம் வருடத்தில் டாலரின் வாங்கும் சக்தி 1939ம் வருட வாங்கும் சக்தியில் 43 சதவிகிதம்தான் [illegible] புள்ளி விபரமே கூறுகிறது. [illegible] 32 சதவிகிதமாகவும், பிரெஞ்சு நாணய [illegible] 3·8 சதவிகிதமாகவும், இத்தாலியின் [illegible] 2 சதவிகிதத்தைக் காட்டிலும் குறைவாகவும் [illegible] விழுந்துள்ளன.

யுத்த அடிப்படையில் பொருளாதாரம் மாற்றப்பட்டுள்ளதால், அமெரிக்க முதலாளித்துவ நாடு களும் தாற்காலிகமாகத் தங்கள் தொழிலுற்பத்தி அளவுகளை அதிகரிக்க முடிந்துள்ளது. அதிக அளவில் யுத்த தேவைகள் ஏற்பட்டால், என்றென்றைக்கும் உயர்ந்த மட்டத்திலேயே 'வியாபார நடவடிக்கை'யை வைக்க முடியும் என்று இதனடிப்படையில் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் நிரூபிக்க முயலுகின்றனர். ஆனால் இவர்களின் கூற்றுகளை யதார்த்த உண்மைகள் பொய்யாக்குகின்றன. முதலாளித்துவப் பொருளாதாரம் ராணுவமயமாக முடுக்கி விடப்பட்டுள்ள இம் மூன்றாவது வருடத்தில், இதன் மரண விளைவுகள் நன்கு தெளிவாகப் புலப்படத் தொடங்கியுள்ளன. யுத்தமும், பண வீக்க அம்சங்களும், தற்காலிக தொழில் உற்பத்திப் பெருக்கிற்கு இடமளித்த போதிலும், முதலாளித்வ நாடுகளில் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு தரப்பட்ட ராணுவத் தன்மையையே அளித்துள்ளன. நாளுக்கு நாள் அதிகமாக சாமான்களும், மூலப் பொருள்களும், மறுபடியும் உற்பத்திக்குத வாத முறையில், ராணுவத்தால் விழுங்கப்படுகிறது. அல்லது, பிரமாண்டமான அளவில் கேந்திரமான கையிருப்பு ஆயுதங்களாக சேமித்து குவித்து வைக்கப்படுகிறது. அதே சமயத்தில் பொருளாதாரத்தை ராணுவ மயமாக்குவது என்றால், மக்களின் பணம் அதிக வரிகளின் மூலமாகச் சுரண்டப் பிழியப்படுகிறது என்று அர்த்தம், இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? பொது மக்களைக் கோடீசுவரப் பிரபுக்கள் கொள்ளையடிக்கவும் அவர்களின் வாங்கும் சக்தியைக் கணிசமான அளவு குறைக்கவும், யந்திர சாமான்களுக்கும், விவசாயப் பொருள்களுக்குமுள்ள தேவையை கிரப்பந்தமாகக் குறைக்கவும், பொது மக்களுக்கு அத்தியாவசியமான உற்பத்தியைத் தலைகீழாகக் குறைக்கவும், மிக கொடிய பொருளாதார நெருக்கடிக்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதற்கும் தான் முதலாளித்துவ நாடுகளின் பட்ஜெட்டுகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. தேசியப் பொருளாதாரத்தை ராணுவ மயமாக முடுக்கிவிடுவதின் மூலம், உற்பத்தி அளவுக்கும், முதலாளித்துவ நாடுகளின் ஆட்சியாளர்களால் தலைகீழாகக் குறைக்கப்பட்டதும், நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதுமான மக்களின் வாங்கும் சக்திக்குமிடையேயுள்ள அகழியைக் குறுக்க முடிவதில்லை. அதற்கு [illegible]

றது. அதுவும் குறிப்பாக கொரியாவில் அமெரிக்க ஆக்கிரமிப்புத் தொடங்கிய பின்னர் [illegible] முதலாளித்துவ மார்க்கெட் படிப்படியாக சுருங்குகிறது. [illegible] புதிய, மிகவும் ஆழமான பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

ஆயுதப் பெருக்கு திட்டம், அமெரிக்காவின் கைப் பொம்மை நாடுகளின் பொருளாதாரத்திலும் [illegible] அமெரிக்கா அதிக பிடிப்பு போட்டது. [illegible]

[illegible]

[illegible] ஆளும் பூர்ஷ்வா அரசாங்கத்தைத் தம் வசப்படுத்திக் கொண்டுள்ள கோடீஸ்வரர்கள், மற்றொரு யுத்தத்திற்கான தயாரிப்புகள் பற்றியும், ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்து வைப்பது சம்பந்தமாகவும் அந்த அரசாங்கத்தின் மீது சர்வாதிகாரம் செலுத்துகின்றனர். இதன்மூலம் கணக்கு வழக்கற்ற லாபத்தை அவர்கள் கொள்ளையடிக்கின்றனர். ஆயுதப்பெருக்குத் திட்டத்தினால், கோடீஸ்வரர்கள் அதுவும் குறிப்பாக அமெரிக்காவிலுள்ள ஏகபோக முதலாளிகளும் கோடீஸ்வரர்களும் இதற்கு முன் என்றுமே ஈடு இணை காட்ட முடியாதபடி அவ்வளவு அதிகமாகப் பணத்தை கொள்ளையடித்திருக்கின்றனர் 1938ல் 330 கோடி டாலர்களாக இருந்த அமெரிக்க ஏகபோக முதலாளிகளின் கொள்ளைலாபம் 1951ல் 4290 கோடி டாலர்களாகப் பெருகியுள்ளதென்று அதிகார பூர்வமான புள்ளி விபரங்களே கூறுகின்றன. அதாவது 13 மடங்குகளுக்கு அதிகமாகப் பெருகியுள்ளது. இதேபோல பிரிட்டிஷ் ஏகபோக பணமூட்டைகளும், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் முதலிய நாடுகளிலுள்ள முதலாளித்துவ ஏகபோகங்களும் மிகப் பெரிய அளவில் கொள்ளை லாபமடைந்துள்ளன. இந்நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியின்றி தேங்கிக் கட்டிக்கிடக்கும் இந்நிலைமையில்கூட இவ்வளவு லாபமடைய முடிந்திருக்கிறது.

இதே சமயத்தில், ராணுவமயமாக்கியதன் விளைவாக, பொது மக்களின் வாழ்க்கைத் தரம் தலைகுப்புற விழ்ச்சியடையத் தொடங்கியிருக்கிறது. வரி உயர்வு, அத்தியாவசியமான தேவைப் பண்டங்களின் விலை உயர்வு, பணவீக்கம் முதலியன தொழிலாளி மக்கள் மீளாத வறுமைப் படுகுழியில் வீழ்வதைத் துரிதப்படுத்துகின்றன. நாணய மதிப்பு விழ்ச்சியைக் கணக்கிலெடுத்துக் கொண்டால்கூட, அமெரிக்காவில், பொதுமக்களின்மீது இவ்வருடம் நேரடியாக விதிக்கப்படும் வரி, 1937–38ம் வருட அளவைவிட 12 மடங்குகள் அதிகமாகும். இரண்டாம் உலகப் போருக்கு முன்பே, வரிப்பளு தாங்காது மேற்கு ஐரோப்பிய மக்கள் திணறிக் கொண்டிருந்தனர். இ[illegible] துண்[illegible]ட, இன்று பிரி[illegible] யுத்தத்திற்குமுன[illegible] தைக் காட்[illegible]

பவர்களும், அரைகுறை வேலை செய்துவருபவர்களும மொத்தம் சுமார் 30 லட்சம் பேர்கள் இருக்கின்றனர். ஜப்பானில் இதே போன்ற பயங்கர நிலைமையில் இருக்கும் மக்களின் தொகை ஒரு கோடியாகும். அமெரிக்காவில 30 லட்சம் பேர் வேலையின்றி தவிக்கின்றனர். மேலும் ஒரு கோடிப்பேர் அரைகுறை வேலையில் ஈடுபட்டு காலந் தள்ளுகின்றனர். பிரிட்டனிலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. ஏற்கனவே இது 5 லட்ச மட்டத்தைத் தாண்டியாகி விட்டது. சின்னஞ்சிறு தேசமான பெல்ஜியத்தில்கூட 3 லட்சத்திற்கு அதிகமான பேர் வேலையில்லாதிருக்கின்றனர்.

ஆயுதப் பெருக்கு திட்டத்தின் காரணமாக, பொதுமக்களின் எல்லாப் பிரிவினர்களின் வாழ்க்கை நிலைமையும் படிப்படியாக மோசமாகிக் கொண்டே வருவதால், வெகுஜனங்களிடையே அதிருப்தி நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து வருகிறது. எனவே, வாழ்க்கைத்தரம் குறைக்கப்படுவதை எதிர்த்தும், புதிய யுத்தத்திற்காக தயாரிப்புகள் செய்யும் கொள்கையைக் கண்டித்தும் பொது மக்கள் நாளுக்குநாள் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒருபக்கம் ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்களுக்கும், மறுபக்கம் தொழிலாள வர்க்கத்திற்கும் எல்லா பாடுபடும் மக்களுக்குமிடையே வர்க்க முரண்பாடுகள் மிகவும் துரிதமாக உச்ச நிலையை அடைந்து வருகின்றன. உலகம் பூராவிலும் வேலைநிறுத்த அலை விரிந்து பரவிக்கொண்டிருக்கிறது.

யுத்தத்தின் விளைவாகவும் காலனி, சார்பு நாடுகளில் நடைபெறும் தேசவிடுதலைப் போராட்டத்தின் புதிய எழுச்சியாலும், ஏகாதிபத்திய காலனி அமைப்பு சிதறுண்டு வருவதால் உலக முதலாளித்துவ அமைப்பின் நி[illegible]ய சிக்கலடைந்திருக்கிற[illegible]

பாசிஸ்ட் [illegible] கொரியா, [illegible] திபத்திய அ[illegible] விழுங்கத், [illegible] இருந் [illegible] கா[illegible]

அமெரிக்க ஊடுருவல்

[illegible] யுத்தத்திற்குப்பிறகு, காலனி [illegible] நாடுகளுக்கும் இடையே [illegible] மிகவும் [illegible] பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற [illegible] ஆட்சிபுரியும் [illegible] பொருளாதாரத்தை ராணுவ மயமாக்குவதாலும், அமெரிக்க [illegible] கைப்பற்றிவைத் [illegible] சமாதான [illegible] மேலும் [illegible] முயல்கின்றனர். [illegible] காலனி [illegible] வல்லரசுகளின் செல்வாக்கு [illegible] அமெரிக்க [illegible] ஊடுருவி வருகின்றனர். [illegible] தேசங்களில் [illegible] கொள்கை ஏற்படுத்தி வருகின்றனர்; [illegible] நாடுகளிலுள்ள [illegible] ஈவிரக்கமின்றி [illegible] தூண்டி [illegible] மேலும் [illegible] காலனி [illegible] சார்பு நாடுகளிலுள்ள [illegible] (எகிப்து [illegible] மொராக்கோ, [illegible] தேசங்கள் [illegible] உபயோகிக்கப்படுகின்றன. [illegible], இனி [illegible] யுத்தத்தில் [illegible] தயாரிக்கப்பட்டு வருகின்றன.

[illegible] உணவுப் போதிய உணவில்லை; பட்டினிக் கொடுமையால் பல்லாயிரம் பேர் மடிந்து விட்டனர். காலனி, சார்பு நாடுகளை ஏகாதிபத்திய வல்லரசுகள் ஈவிரக்கமின்றிச் சுரண்டுவதால் அந்த நாடுகளிலுள்ள உற்பத்தி சக்திகள் வளர்ச்சி குன்றிவிட்டது; மக்களின் வாங்கும் சக்தி மிக மிக குறைந்துவிட்டது; தொழிலதிபர்களுக்கு வேண்டிய மார்க்கெட்டுகள் குறைந்துவிட்டன. இவையெல்லாம் முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தை அமுக்கும் பாரங்களல்லாமல், உலக முதலாளித்வ முறைக்குள்ளே ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளை மேலும் முற்றவைத்து வருகின்றது.

காலனி, சார்பு நாட்டிலுள்ள மக்கள், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களை மேலும்மேலும் உறுதியாக எதிர்த்து நிற்கின்றனர். தேச விடுதலை இயக்கத்தின் அளவு விரிந்து பரந்து வருவது, வியட்நாம், பர்மா, மலேயா, பிலிப்பைனஸ், இந்தோனேஷிய மக்கள் நடத்தி வரும் போராட்டத்திலும், இந்தியா, ஈரான், எகிப்து முதலிய நாடுகளில் தேசியப் போராட்டம் வளர்ந்து வருவதிலும் நன்கு வெளிப்படுகின்றது.

ஏகாதிபத்திய-எதிர்ப்பு வளர்ச்சி

[illegible]

2. சர்வதேச நிலைமை தீவிரப்படுதல்; அமெரிக்க - பிரிட்டிஷ் ஆக்ரமிப்பு அணியினால் தூண்டிவிடப்படும் புதிய பயமுறுத்தல்; சமாதானத்திற்காக நடக்கும் மக்களின் போராட்டம்.

சர்வதேச உறவுத் துறையில், அமெரிக்க, பிரிட்டிஷ் பிரெஞ்சு ஆளும் வர்க்கங்களின் யுத்த பிற்கால நட[illegible]க்கைகள், ஒரு புதிய யுத்[illegible]ற்கான தயாரிப்புகளா[illegible] [illegible]கின்றன.

[illegible] உலக யுத்தம் [illegible]

நடந்த வல்லரசுகள் மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவாகும். அடுக்கடுக்காக எடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால், சர்வதேச நிலைமையை அமெரிக்கா நெருக்கடிக்குள்ளாக்கி, ஒரு புதிய யுத்த அபாயத்தை உலக மக்களின கண் முன்னே நேரே கொண்டு வந்து நிறுத்தியது.

ஆக்கிரமிப்பு நோக்கம்

அமெரிக்க ஆளும் வர்க்கம் தங்களது ஆக்கிரமிப்புக்கொள்கையின் நோக்கத்தைத் தெட்டத் தெளிவாக வகுத்தனர். 1945-லிருந்தே, அமெரிக்க ஜனாதிபதியானவுடனேயே, "இந்த வெற்றியானது, அமெரிக்க மக்கள்மீது உலகத் தலைமைக்குரிய பொறுப்பைத் தொடர்ந்து சுமக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது" என்று ட்ரூமன் பிரகடனப்படுத்தினார். அதற்குப் பின்னர், ட்ரூமனும், இதர அமெரிக்க அரசியல் தலைவர்களும் "உலகத்தலைமைக்கு" அமெரிக்கா பாத்தியம் கொண்டாடுவதைப் பல்லவியாகப் பாடி வந்துள்ளனர். உலக ஆதிக்கத்தை நோக்கமாகக்கொண்டு இதர எல்லா நாடுகளையும அடிமைப்படுத்துவது என்பதுதான அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சிக் கும்பல் கையாண்டுவந்த சகல கொள்கைகளுக்கும் அடிப்படையாகும்.

சோவியத் எதிர்ப்பு அணி

ஆனால், இதர நாடுகளை சமாதான முறைகளால் அடக்கியாள்வது என்பது முடியாத காரியம் என்பதை அமெரிக்க மன்னர்கள் அறிவார்கள். இதர நாடுகள்மீது தங்கள் ஆட்சியை நிலைநாட்ட எண்ணிய ஹிட்லர் கும்பலின அநுபவத்திலிருந்து, ஆயுத பலத்தை உபயோகிக்காமல், ஒரு புதிய யுத்தத்தை மூட்டாமல், உலக ஆதிக்கம் பெறுவதென்பதை நினைக்கவியலாது என்பதை அவர்கள் அறிந்தே, சமாதானத்திற்கு பங்கம் விளைவித்து, ஒரு யுத்தத்திற்குத் தயாரிப்பு செய்வதென்று அவர்கள் முடிவு செய்தார்கள். சோவியத் யூனியன்தான் ஒரு புதிய யுத்தத்தை மூட்டுவதற்கு குறுக்கே நிற்கும் பிரதான எதிரி, சமாதானத்தின் பிரதம கோட்டையாதலால், சோவியத் யூனியனையும், சமாதானத்திற்கு ஆதரவாக உள்ள இதர நாடுகளையும் எதிர்த்து யுத்தத்தை மூட்டிவிட வேண்டுமென்று அமெரிக்க பகாசுரர்கள் முடிவு செய்தனர். ஆகவே தான், சோவியத் யூனியனுக்குத் தெரியாமலும், அதன் முதுகுக்குப் பின்னாலும், வட அட்லாண்டிக் ஆக்கிரமிப்பு அணி உருவாக்கப்பட்டது. மக்களை ஏமாற்றவும், இந்த அணியின் ஆக்கிரமிப்பு சொரூபத்தை அவர்களிடமிருந்து மறைக்கவும்தான், அதை, "கம்யூனிசத்திற்கு" எதிரான "பாதுகாப்பு" அணியென்றும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இன்னும் அந்த அணியிலுள்ள இதர நாடுகளைத் தாக்குவதற்குத் தயார் செய்வதாக சோவியத் யூனியனை கற்பித்து, அதற்கு எதிரான "பாதுகாப்பு" அணியென்றும் பறைசாற்றினர்.

இந்த ஆக்கிரமிப்புக்கொள்கையை மனதிற் கொண்டுதான், சோவியத் எல்லைப்புறங்களுக்கு அருகிலுள்ள பல நாடுகளில் அமெரிக்கராணுவ தளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதே ஆக்கிரமிப்பு நோக்கத்துக்காகத்தான், அமெரிக்க ஆளும் வர்க்கங்கள், மேற்கு ஜெர்மனியையும். ஜப்பானையும் மீண்டும ராணுவ மயமாக்கி வருகின்றன.

மேற்கு ஜெர்மனியையும், ஜப்பானையும் மீண்டும் ராணுவ மயமாக்குவதன் மூலம், அமெரிக்க ஆளும் வட்டாரங்களும், அவர்களின் அடிவருடிகளும், உலகக் கண்முன்னே பகிரங்கமாக, இரண்டாவது உலக யுத்தத்தின் இரு பாசறைகளையும், எந்த அதே பாசறைகளை இடித்துத் தகர்த்து நிர்மூலமாக்க அந்த யுத்தத்தில் மக்கள் தங்கள் ரத்தத்தை சிந்தினார்களோ, அவற்றை உயிர்ப்பித்து வருகின்றனர்.

கொரியாமீது ஆக்கிரமிப்பு

கொரிய மக்கள் ஜனநாயக குடியரசின்மீது அமெரிக்கா தொடுத்த தாக்குதலானது, ஆக்கிரமிப்பு யுத்தத்தயாரிப்பிலிருந்து நேரடியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலேயே அமெரிக்க-பிரிட்டிஷ் அணி இறங்கிவிட்டது என்பதற்கு அர்த்தம். கொரிய மக்கள், வீரமிக்க சீனத் தொண்டர்களின் நெருங்கிய [illegible]த்துழைப்போடு, தங்கள் தாய்த் திருநாட்டின் சுதந்திரத்தையும், [illegible]யையும் உயி[illegible] [illegible]

குலம் முழுவதும் உள்ளம் பூரித்துப் பாராட்டி நிற்கின்றது (பலத்த கரகோஷம்).

இன்றைய உலக நிலைமை முழுமையின் குறிப்பிடத்தக்க தன்மைகளில், விசேஷ அம்சங்களில் கீழ் வருவனவைத் தெளிவுபடுத்துவது அவசியம்.

பிரதான ஆக்கிரமிப்பு வல்லரசான அமெரிக்கா முக்கியமாக அட்லாண்டிக் கூட்டணியிலுள்ள முதலாளித்துவ நாடுகளையும், இரண்டாவது உலகயுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட மேற்கு ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான ஆகிய நாடுகளையும் யுத்தப் பாதையில் செல்லும்படி தூண்டும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அந்த நாடுகளுக்கு அமெரிக்கா உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது. யுத்தக் கூட்டணியிலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்காக, யுத்த நோக்கங்களையும, எங்கெந்த இடங்களில் யுத்தத்தை நடத்துவது என்பதையும், எங்கெந்த இராணுவம் இதில் பங்கு கொளவது என்பதையும், யுத்தத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட இது போன்ற மற்ற பிரச்னைகளையும் முடிவு கட்டுவது அமெரிக்கா தான.

'சுதந்திர நாடுகளின் கூட்டணி'யை உண்டாக்குவதென்ற உயர்ந்த எண்ணத்தால் உந்தப்படுவதாக அமெரிக்காவை ஆளும் கூட்டம் சொல்லிக் கொள்ளுகிறது. அமெரிக்கா, பிரிட்டன, பிரான்ஸ், துருக்கி, கிரீஸ் ஆகிய சுதந்திரநாடுகள் தான் இவ்விதக் 'கூட்டணி' என்று அவர்கள் சொல்லிக் கொள்ளாத நாளே இல்லை, சோவியத் யூனியனும், மக்கள் ஜனநாயக குடியரசுகளும் தான் 'சுதந்திரமில்லாத' நாடுகளென்றும் குற்றம் சாட்டுகின்றனர். நம் பார்வையில் அமெரிக்கா, பிரிட்டன, பிரான்ஸ், துருக்கி போன்ற முதலாளித்துவ தேசங்கள் வாஸ்தவத்தில் "சுதந்திர"முள்ளவை தான்! ஆனால் அந்த சுதந்திரம் மக்களுக்கல்ல. மக்களைச் சுரண்டிக் கொள்ளையடிக்கும் சுதந்திரம் அது, சோவியத் யூனியன், மக்கள் ஜனநாயக தேசங்களைப் பொருத்தவரை, பாட்டாளி மக்களைச் சுரண்டிக் கொள்ளையடிக்கும் சுதந்திரத்தை ரொம்பநாளைக்கு முன்னேயே ஒழித்துக்கட்டிவிட்டோம். (சபையினர் ஆரவாரம்) அமெரிக்க நாகரீகத்தைப் பற்றி வியாக்கியானஞ் செய்பவர்கள் எதைப்பற்றிப் பெருமை கொள்ளுகிறார்கள் என்பதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் புரிந்துகொள்ளமுடிகிறது.

அமெரிக்காவின் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நண்பர்களைப் பொருத்தவரை, அமெரிக்கா ஜனநாயகக்கொள்கையைக் கையாளவில்லை. மாறாக, ஏகாதிபத்தியக்கொள்கையைக் கையாளுகிறது. பழைய "கம்யூனிஸ எதிர்ப்பு", "சுதந்திரத்தைப் பாதுகாப்பது" என்ற முகமூடியை போட்டுக்கொண்டு, நீண்ட நெடுநாளைய முதலாளித்துவ நாடுகளையும், அவைகளின அடிமைநாடுகளான காலனிகளையும் அமெரிக்கா தனது ஆதிக்கத்தின கீழ் கொண்டு வந்து கொள்ளையடிக்கிறது. இதற்கு முன ஹிட்லர் செய்தது போலவே அமெரிக்க ஏகாதிபத்ய வாதிகள் அவர்களது ஆக்கிரமிப்புத் திட்டங்களை மூடிமறைப்பதற்காகவே 'கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுவது' என்ற புலித்தோலை போர்த்திக்கொள்ளுகின்றனர். பிரிட்டன், பிரானஸ் போன்ற முதலாளித்துவ நாடுகளைப் பொருத்தவரை ஏகாதிபத்தியக் கொள்கையைக் கையாளுகின்ற அமெரிக்கா அந்த தேசங்களின் நண்பர்கள் போல் வேறு நடிக்கிறது. அருமையான நண்பர்தான்! தங்களின சிறுபங்காளிகளுக்கு சேணத்தையும் கடிவாளத்தையும் போட்டு, சாட்டை அடிபுங் கொடுத்து அவர்களைக் கொள்ளையடித்து கொடு விலங்கிட்டுக்கொண்டே "நாம் நண்பர்களாக இருப்போ"மெனக் கூறும் அமெரிக்கப் பணமூட்டைகள் அருமையான நண்பர்கள்தான்! இந்தப் பணமூட்டைகளின் பாஷையில் என்ன அர்த்தம் தெரியுமா? 'முதலில்' என்னைத் தூக்கிக் கொள், பிறகு உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன்' என்பதுதான். (சிரிப்பு)

ஒரு சமயத்தில் சுதந்திர முதலாளித்வ நாடுகளாக இருந்த பிரிட்டன, பிரான்[illegible], நெதர்லண்ட்ஸ், [illegible]ல்ஜி[illegible] நார்வே ஆகிய [illegible] இன்று நடைமு[illegible]றை[illegible] அவர்களது தேசி[illegible] கொள்கையைக் கைவிட்டுள்ளன. அமெரிக்கஏகாதிபத்தியவாதிகளால் நிர்ணயித்து [illegible] [illegible]

தற் மூளும் சமயத்தில் [illegible]லால் இத்தேசங்களுக்கு பேராபத்து ஏற்படும் நிலைமை உண்டாக்கி வைத்துள்ள அமெரிக்க உத்தரவிற்கு பணிந்து அவர்களது தேசநலனுக்கு விரோதமான ஒப்பந்தங்களும், கூட்டணிகளும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. இதற்கு நல்ல உதாரணம், பிரான்சின் நீண்ட நாளைய கொடிய எதிரியான ஜெர்மன ஏகாதிபத்தியத்திற்கு புத்துயிரளிக்கும் காரியங்களை பிரான்சின் ஆளும் கூட்டம் செய்து வருவது தான். அமெரிக்காவின இளைய பங்காளியாக பிரிட்டனை இங்கிலாந்தின் கன்சர்வேட்டிவ் தலைவர்களும், தொழிற்கட்சித் தலைவர்களும் மாற்றி விட்டனர். அதன் மூலம் ஒரு தேசியக் கொள்கையையல்ல, அமெரிக்கக் கொள்கையைக் கையாள சபத மேற்றுள்ளனர். இதனால் பிரிட்டிஷ் மக்கள் பெரும் சுமையை சுமக்க நேர்ந்துள்ளது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின அடித் தளமே ஆட்டங் கொண்டுள்ளது.

அதே சமயத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை உடைப்பவர்கள் கம்யூனிஸ்டுகள்தான் என்று பிரிட்டிஷ் பிரசார ஏடுகள் கூறுகின்றன. எனினும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் ஆளுங்கூட்டம் உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மைகளை மூடி மறைக்க முடியாது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ள தேசங்களை கபளீகரம் செய்வது கம்யூனிஸ்டுகளல்ல, அமெரிக்கக் கோடீசுவரர்கள் என்பது வெள்ளிடைமலை. கனடாவை அபகரித்துக் கொண்டது கம்யூனிஸ்டுகளா? அல்லது அமெரிக்க கோடீசுவரர்களா? ஆஸ்திரேலியாவையும், நியூஜிலாந்தையும் விழுங்கிக் கொண்டிருப்பது கம்யூனிஸ்டுகளா? அல்லது அமெரிக்கப் பண மூட்டைகளா? சூயஸ் கால்வாய் பிரதேசத்திலிருந்தும், தென் அமெரிக்க மார்க்கெட்டிலிருந்தும், சமீப, மத்ய கிழக்கு ஆசியாவிலிருந்தும் பிரிட்டனுக்கு சொந்தமான எண்ணை கிடைக்கும் பிரதேசங்களிலிருந்தும் பிரட்டனைத் துரத்தி அடித்து வருவது கம்யூனிஸ்டுகளா? அல்லது அமெரிக்கப் பண மூட்டைகளா?

உண்மை யென்னவென்றால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வேறு எந்த எதிரியும் இதுவரை அதற்குக் கொடுக்காத அடிகளை அதன் "நண்பன்" என்று சொல்லிக்கொள்ளும் அமெரிக்கா கொடுத்து வருகின்றது. சாம்ராஜ்யத்தைச் சல்லிச் சல்லியாக உடைத்து கபளீகரம் செய்து வருகிறது. இந்த "நண்பன்" பிரிட்டனும் உள்ள கூட்டணியைச் சேர்ந்தவன். பிரிட்டிஷ் மண்ணில் விமானத் தளங்களை ஏற்படுத்தியுள்ள 'நண்பன்'. பிரிட்டன மிகவும் வருந்தக் கூடிய, இன்னும் சொன்னால், அதற்கு ஆபத்தான நிலையில் அந்நாட்டை வைத்துள்ள நண்பன். இவ்வளவு செய்துவிட்டு, "சோவியத் கம்யூனிஸத்"திலிருந்து பிரிட்டனை பாதுகாத்து அபயமளிக்க வந்தவனைப்போல அமெரிக்கா பாசாங்கு செய்யும் தைரியம் அதற்கு ஏற்பட்டுள்ளது.

கிரீஸ், துருக்கி, யுகோஸ்லோவியா போன்ற "சுதந்திர" தேசங்களைப் பொருத்தவரை அவைகள் ஏற்கனவே அமெரிக்கக்காலனிகளாக (குடியேற்ற நாடுகளாக) மாற்றப்பட்டுள்ளன. யுகோஸ்லோவியாவின் ஆட்சியாளர்களான, டிட்டோக்களும், கார்தேலிகளும், ரேங்கோவிக்குகளும், ஜிலாசேக்களும், விஜாடேக்களும் அமெரிக்கக் கங்காணிகளாக இருந்து வெகுநாட்களாகவே சோவியத் யூனியனுக்கும் மக்கள் ஜனநாயக நாடுகளுக்கும் எதிராக உளவு வேலைகளிலும் நாச வேலைகளிலும், ஈடுபட்டு அவர்களது அமெரிக்க அதிபர்களின உத்தரவுகளை நிறைவேற்றி வருகின்றனர்.

பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய தேசங்களின் ஆட்சியாளர் அமெரிக்க ஏகாதிபத்யத்தின் ஏவல் நாய்களாக மாறிவிட்டனர். தங்களது சுதந்திரமான, தேசிய, அந்நிய நாட்டுக் கொள்கையை கைவிட்டு விட்டனர். அத் தேசங்களின நலன்களை காட்டிக்கொடுத்து அவர்களது கையாலாகாத போக்கை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருப்பது உண்மை. இந்த ஆளுங் கூட்டங்கள் அட்லாண்டிக் சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள ஏகாதிபத்ய வாதிகளின் உதவியை அடைவதற்காக தங்களது தேசிய நலன்களை மக்களுக்கு எதிராக தியாகம் செய்வதற்குத் தயாராக உள்ளனர். ஏனெனில் அவர்கள் ஏகாதிபத்ய அடிமை[illegible] [illegible]

[illegible] வி[illegible] ப[illegible] து[illegible] சே[illegible] அ[illegible] விள[illegible] திற[illegible] கள் ந[illegible] போரா[illegible] இடும் [illegible] வேற்[illegible]

அமெ[illegible] தின யுத்[illegible] தெளிவா[illegible] மற்ற தே[illegible] ராணுவங்க[illegible] மாக மேற்[illegible] பானிய ராணு[illegible] துடன் பி[illegible] இத்தாலிய [illegible] அடிப்படைய[illegible] யுத்தத்திற்க[illegible] தீட்டி, பிற[illegible] மூடத்தனம[illegible] வும் துப்பா[illegible] வும், பயங[illegible] அடிமைப்[illegible] ஏகாதிபத்[illegible] மிடுகின்[illegible]

ஆனால் [illegible] களிலும் [illegible] நாடுகளி[illegible] சக்தியுள்ள [illegible] ணம் ப[illegible] வாதிகள், [illegible] மேல் கெ[illegible] கணபார்[illegible] மரிதர்கள், [illegible] பதிய வேட்டை[illegible] கள் தேசங்க[illegible] படுபாதாள[illegible] செல்கின்ற[illegible] உணர ஆரம்பித்து [illegible] யுத்தத்தை எதிர்த்து [illegible] கொள்கையை [illegible] பித்து விட்டனர். [illegible] சர்வாதிகாரிகளுக்கு [illegible] பாவைகளாகத் [illegible] உள்ள இத் [illegible] உள்ள உண்மையை [illegible] தானம் விரும்பும் [illegible] சக்திகள், சுதந்திர[illegible] தானமானக் கொள்[illegible] மேற்கொள்ளும் ச[illegible] அமெரிக்க சர்வாதிகா[illegible] ஏற்படுத்தப்பட்டுள்ள [illegible] க்கட்டையான [illegible] லிருந்து மீளும் [illegible] கண்டுபிடிப்பார்கள் என நம்பலாம். இவ்வித வ[illegible] செல்லும ஐரோப்பிய [illegible] களும் மற்ற நாடுகளும், தானம் விரும்பும் தேசங்[illegible] டரிபூரண நல்லெண்ணத்[illegible] பெறுவார்கள் என்பதில் [illegible] தேகமில்லை. (நீண்ட [illegible] வாரம்.)

ஜனநாயக முகாமை எ[illegible] து இன்று நடக்கும் பிரச்[illegible] யுத்தத்தை அமெரிக்[illegible] [illegible]

சமாதானத்தை பாதுகாத்து பலப்படுத்தும் பணியில்

சோவியத் யூனியன் ஆற்றும் பங்கு!

• மலெங்கோவ் அறிக்கைத் தொடர்ச்சி

தேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கையை [illegible] துறைகளிலும் பாதி[illegible] விதத்தில் யுத்த த[illegible]ப்புகள் இதுவரைக் கண்டிராத வேகத்தில் ராணுவ முஸ்தீப்புகளுடன் நடந்துவருகின்றன. பாட்டாளி மக்களின்மேல் பெரும் தாக்குதலை ஆவேசத்துடன் பிற்போக்காளர்கள் ஏவிவிட்டுள்ளனர். அத்தேசங்களின் ஆட்சி அமைப்பு பூராவையும் பாசிஸ மயமாக்கி வருகின்றனர்.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு தயார் செய்து கொண்டிருக்கிற சமயத்தில், தங்களது தேசத்தில் பாசிஸத்தைப் புகுத்திய ஹிட்லர் ஏகாதிபத்தியத்தைப் போல, இன்று புதிய உலக யுத்தத்திற்காக தயார்செய்துகொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்க தேசத்திலும், வெளிநாடுகளில் முக்கியமாக பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் போன்ற சமாதான ஜனநாயக சக்திகள் வளர்ந்துள்ள [illegible]தேசங்களிலும், கொடிய பாசிஸ ஆட்சி அமைப்பை புகுத்திவருகின்றனர். அமெரிக்க ராணுவத் தலைமையால் உத்திரவிடப்படும் இழிவான காரியத்தை அந்நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் நிறைவேற்றும் விதத்தில் அந்நாட்டு மக்களின் மேலும் யுத்தம் தொடுத்துள்ளனர். அமெரிக்க தேச எல்லைகளுக்கு வெளியே நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ராணுவங்கள் இந்த நாட்டு மக்களை அடக்க உதவும் தண்டப் போலீஸ் செய்யும் கடமைகளை செய்துவருகின்றன.

இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு ஆக்கிரமிப்பாளன் மட்டுமல்ல; சாத்தியமான இடங்களிலெல்லாம் சுதந்தரத்தை [illegible]க்கி பாசிஸத்தை நி[illegible] முயற்சிக்கும் [illegible]லகப் [illegible]ஸ்காரன் அது.

அதனால் நசுக்கப்பட்டுவரும் மக்களிடையே இந்த உலக போலீஸ்காரனுக்கு எதிராக துவேஷமும் எதிர்ப்பும் அலை போலக் கிளம்பி வருகிறது.

ஏகாதிபத்தியங்களுடைய நிலைமைகள் பலவீனப்பட்டு வருவதற்கு இவையனைத்தும் சான்றுகளாகும். ஏகாதிபத்திய முகாமுக்குள்ளே ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த பாசிஸ்ட் பிற்போக்கு சக்திகளுக்கும், மக்களின் ஜனநாயக சக்திகளுக்கும் இடையில் நடக்கும் போராட்டம் கடுமையாக முற்றுவதற்கு இவையனைத்தும் வழி செய்துள்ளன. இப்படிப்பட்ட நிலைமை யுத்த வெறியர்களுக்கு மிகவும் ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும்.

அதிகரித்துவரும் யுத்த அபாயம் சம்பந்தமாக சகல மக்களையும் அணைத்துநிற்கும்படியான ஒரு சமாதான இயக்கம் வளர்ந்து வருகிறது. வெவ்வேறு வர்க்கங்களையும் சமூக ஜனப் பகுதிகளையும் கொண்ட ஒரு யுத்த எதிர்ப்பு கூட்டணி சிருஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவற்றின் நலன்களுக்காக, சகல சர்வதேச நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு புதிய உலக யுத்தத்தைத் தடுக்கவேண்டும். இந்த கட்சி சார்பற்ற அமைதியான ஜனநாயக இயக்கத்தை ஒரு கட்சி சார்புள்ள கம்யூனிஸ்ட் இயக்கமென்று தூற்றி யுத்த வெறியர்கள் கெட்டபெயர் உண்டாக்க செய்துவரும் முயற்சிகளெல்லாம் தோல்வியுற்று வருகின்றன. ஸ்டாக்ஹோம் விண்ணப்பத்தில் 50 கோடி மக்கள் கையெழுத்திட்ட உண்மையும், 5 வல்லரசுகள் சமாதான ஒப்பந்தத்துக்கான விண்ணப்பத்தில் 60 கோடிக்கு அதிகமான மக்கள் கையெழுத்திட்ட உண்மையும் யுத்த வெறியர்களின் இந்தக் கூற்றுக்கு சிறந்த மறுப்பாகும்; பதிலாகும்; சமாதானத்துக்காக நடக்கும் இந்த கட்சி சார்பற்ற, ஜனநாயக இயக்கத்தின் பிரம்மாண்டமான வளர்ச்சி அளவுக்கு அவை ஒரு எடுத்துக்காட்டாகும். முதலாளித்துவத்தை அழிப்பது சமாதான இயக்கத்தின லட்சியமல்ல; ஏனெனில் அது ஒரு சோஷலிஸ்ட் இயக்கமல்ல. கோடிக்கணக்கான மக்களை அணைத்து நிற்கும் ஒரு ஜனநாயக இயக்கமே அது. சமாதானத்தைப் பாதுகாத்து யுத்தத்தைத் தடுக்க உதவும்படியான கோரிக்கைகளையும் யோசனைகளையும் சமாதானப் பிரியர்கள் சமர்ப்பிக்கின்றனர். இன்றைய சரித்திர நிலைமைகளில் இந்த குறிக்கோளை சாதிப்பது ஜனநாயக, சமாதான லட்சியத்துக்கு மகத்தான வெற்றியாக இருக்கும்.

ஏகாதிபத்திய யுத்த முகாமுக்கும் ஜனநாயக சமாதான முகாமுக்கும் இடையேயுள்ள இன்றைய பலாபலத்தைப் பார்க்கும்போது யதார்த்தத்தில் சாதிக்கக்கூடிய குறிக்கோள்தான் இது என்பதைக் காட்டுகிறது. சமாதானத்தை விரும்பும் அரசுகளைக் கொண்ட ஒரு வலிமை பொருந்திய, ஒற்றுமையுள்ள முகாம் சரித்திரத்திலேயே முதல் தடவையாக இன்று அமைந்திருக்கிறது. முதலாளித்துவ நாடுகளில் முன்னைவிட சிறப்பாக தொழிலாளி வர்க்கம் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு நிற்கிறது; தொழிலாளிகளின், விவசாயிகளின், மாதர்களின், வாலிபர்களின், பலமான சர்வதேச ரீதியான ஜனநாயக ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டுள்ளன. சமாதான லட்சியத்துக்காக வீராவேசப் போராடி வரும் கம்யூனிஸ்ட் கட்சிகள் எண்ணிக்கை அளவிலும், செல்வாக்கிலும் வளர்ச்சி பெற்றுள்ளன.

அமெரிக்க மக்கள் உட்பட (யுத்த மேற்பட்டால் மற்ற நாட்டு மக்களைப் போலவே இவர்களும் துன்பம் அனுபவிப்பார்கள் என்பது நிச்சயம்) எல்லா நாடுகளின மக்களும் ஒரு புதிய யுத்தம் ஏற்படும் அபாயத்தை எதிர்த்துப் போராடுவதின தேவையை உணர்ந்துள்ளனர். அமெரிக்க யுத்த தளவாடங்களின் அளவு ஒப்புநோக்கின மிக அதிகமாயிருக்கிற போதிலும்கூட, கொரியா யுத்தம் லட்சக்கணக்கான அமெரிக்கர்களின் உயிரைப் பருகியும், காயப்படுத்தியும் பலி வாங்கியுள்ளது. சமாதானத்தை நேசிக்கும் மக்களுக்கு எதிராக ஒரு யுத்தத்தில லாபக் கொள்ளையிலே வீங்கிப் பெருத்துள்ள அமெரிக்க பெருமுதலாளிகள் அமெரிக்க மக்களைத் தள்ளினால் அமெரிக்க மக்களுக்கு ஏற்படும் துன்ப துயரங்கள் எவ்வளவு பிரமாதமாயிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்ப்பதில் கஷ்டமில்லை.

மக்களை மென்மேலும் செயல்படுத்துவதும், சமாதான போராட்ட வீரர்களின் ஸ்தாபனத்தை பலப்படுத்துவதும், சளைக்காமல் யுத்த வெறியர்களை அம்பலப்படுத்திக் கொண்டேயிருப்பதும், பொய்களைக் கொண்டு பின்னிய வலையில் மக்களை அவர்கள் சிக்க வைக்க அனுமதிக்காமலிருப்பதும் இன்றைய கடமையாகும். தங்களுடைய லாபங்களுக்காக உலக மக்களை ஒரு இரத்தக் களறியில் தள்ளிவிட முயற்சிக்கும் ஏகாதிபத்திய ஆக்ரமிப்பு முகாமிலிருக்கும் சூதாட்ட வெறியர்களுக்கு கடிவாளமிட்டு ஒதுக்குவது—இதுதான் முற்போக்கான, சமாதானத்தை நேசிக்கும்; மனித குலத்தின் முன்னிற்கும் முதற் பெருங் கடமையாகும். (நீடித்த கரகோஷம்.)

3. சமாதானத்தைப் பாதுகாத்து பலப் படுத்தும் போரில் சோவியத் யூனியன் வகிக்கும் நிலை.

வெளிநாட்டுக் கொள்கை விஷயத்தில் கட்சியின திட்டம் ஏற்கெனவே அனுஷ்டித்ததும் சரி, இன்று அனுஷ்டித்து வருவதும் சரி, தேசங்களிடையே சமாதானம் நிலவச் செய்வது, நமது சோஷலிஸ்ட் தாயகத்தின பாதுகாப்புக்கு உத்தரவாதம் செய்வது என்பதுதான்.

சோவியத் அரசு ஸ்தாபிதமான ஆரம்ப நாட்கள் முதற்கொண்டு தேசங்களிடையே, சமாதானமும், நேசப்பான்மையுள்ள உறவுகளும் நிலவச் செய்யும் கொள்கையைத் தான் கம்யூனிஸ்ட் கட்சி பிரகடனம் செய்து நடைமுறையில் அனுஷ்டித்துவந்திருக்கிறது. இரண்டு உலக யுத்தங்களுக்கு மிடையிலுள்ள காலகட்டத்தில் சமாதான லட்சியத்தை சோவியத் யூனியன் விடா முயற்சியுடன் ஆதரித்து நின்றது; மற்றொரு யுத்தம் ஏற்படும் அபாயத்தைத் தடுக்க சர்வதேச அரங்கத்தில் முயற்சிகளையெல்லாம் செய்து வந்தது. கூட்டு பாதுகாப்புக் கொள்கைக்காகவும், கூட்டு முறையில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பதிலளிக்கும் கொள்கைக்காகவும் அது பணியாற்றியது. அமெரிக்காவிலும், மேலைய ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள பிற்போக்கு வட்டாரங்கள் கூட்டு பாதுகாப்புக் கொள்கையை முறியடித்து ஹிட்லர் ஆக்கிரமிப்புக்கு ஆதரவளித்து இரண்டாவது உலக யுத்தத்திற்கு கொண்டு சென்றது, சோவியத் யூனியனின் குற்றத்தினலல்ல.

ஒரு சமாதானக் கொள்கையை வழிபிறழாது கடைப்பிடித்து வருகிற அதே சமயத்தில் சோவியத் யூனியனை நாற்புறமும் வளைத்து நிற்கும் துவேஷ வளையத்தை கவனத்தில் வைத்து முழு தயாரிப்புடன் எதிரியைச் சந்திப்பதற்காக சோவியத் நாட்டின் பாதுகாப்பை நமது கட்சி பலப்படுத்தியது.

மற்றொரு யுத்தத்தின் ஜுவாலைகள் ஏற்கனவே விசிறியடிக்கத் துவங்கிய காலத்தில் 1939ல் நடந்த 18-வது கட்சி காங்கிரஸில் தோழர் ஸ்டாலின் சோவியத் வெளிநாட்டு கொள்கையின அடிப்படைக் கோட்பாடுகளை வலியுறுத்தினார்.

"சமாதானத்துக்காகவும், எல்லா நாடுகளுடனும் வியாபார உறவுகளுக்காகவும் நாம் நிற்கிறோம். அதுதான் நமது நிலை; சோவியத் யூனியனுடன் இந்த நாடுகளும் இதைப்போன்ற உறவுகளை வைத்திருக்கும்வரைக்கும், நமது நாட்டின நலன்களில் அவை குறுக்கிடாதிருக்கும் வரைக்கும், இந்த நிலையைத்தான் நாம் அனுஷ்டித்து நிற்போம்" என்று தோழர் ஸ்டாலின் எடுத்துச் சொன்னார். அதேசமயத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு தோழர் ஸ்டாலின ஒரு எச்சரிக்கையும் செய்தார். "ஆக்ரமிப்பாளர்களின மிரட்டலுக்கு நாங்கள் பயப்படவில்லை; சோவியத் நாட்டின் எல்லைகளுக்கு பங்கமுண்டாக்க முயற்சிக்கிற யுத்தக் கொள்ளிகளின் ஒவ்வொரு அடிக்கும் இரண்டு அடி திருப்பிக்கொடுக்க நாங்கள் சித்தமாயிருக்கிறோம்" என்று பிரகடனம் செய்தார்.

பிறகு ஹிட்லர் ஜர்மனி, நமது தாயகத்தைத் தாக்கிய பொழுது சோவியத் மக்கள நிர்மூலம் செய்யும்படியான தோல்வியை எதிரிக்கு அளித்து, எதிரியை பூர்ணமாக ஒழித்துக்கட்டினர்.

வார்த்தைகளை காற்றுவாக்கில் நமது கட்சி அள்ளி வீசுவதில்லை என்பதை உலகம் பூராவுமே பார்த்தது. (புயல போன்ற நீடித்த கரகோஷம்)

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபிறகு, ஒரு சாசுவதமான நிலையான சமாதானத்துக்கும், சர்வதேச கூட்டுறவுக்கும் உத்தரவாதம் செய்கிற வெளிநாட்டுக் கொள்கையை நமது கட்சி தொடர்ந்து பின்பற்றியது. யுத்தத்தைத் தவிர்ப்பதற்காக உலகறிந்த நடவடிக்கைத் திட்டத்தை சோவியத் சர்க்கார் சமர்ப்பித்தது.

சோவியத் யூனியன் வைக்கும் யோசனைகள் மட்டுமல்லாமல், அதன செய்கைகளும், சோவியத் யூனியனின் சமாதானத் தன்மைக்கு உதாரணங்களாகும். யுத்தம் முடிந்தபிறகு சோவியத் யூனியன் தனது படை பலத்தை வெகுவாக, குறைத்துக் கொண்டது. யுத்தத்திற்கு முந்திய காலத்தில இருந்ததைவிட இன்றைய படை பலம் எண்ணிக்கை அளவில் அதிகமில்லை. யுத்தம் முடிந்த பிறகு மிகக் குறுகிய காலத்தில், பாசிஸ்ட் ஆக்ரமிப்பாளர்களுக்குஎதிராக ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நேரத்தில் நுழைந்த சோவியத் துருப்புகள் சீனா, கொரியா, நார்வே, செகோஸ்லவாகியா, யூகோஸ்லாவியா, பல்கேரியா, நாட்டு மண்ணிலிருந்து வாபஸ் பெற்றது; மற்றொரு யுத்தத்திற்காக நடக்கும் மனிதகுலத்துவேஷமான பிரச்சாரத்தை எதிர்த்து போராடுவதானது; சர்வதேச நெருக்கடி உணர்ச்சியைத் தணிப்பதின பெரிய பங்காகிறது. என்பதைச் சுட்டிக்காட்டி சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் சபை (பார்லிமெண்ட்-[illegible]) 1951ம் வருடம் மார்ச் 12ம் தேதியன்று ஒரு சமாதான பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றியது; யுத்தபிரச்சாரம் என்பது மனித குலத்துக்கு எதிரான மிகக் கொடிய குற்றமாக பிரகடனம் செய்தது. அதன் வாயிலாக இதர எல்லா நாடுகளுக்கும் உதாரண புருஷனாக விளங்கிற்று.

சமீபத்திய ஆண்டுகளில் சர்வதேச அரங்கத்தில் தலை நீட்டிய மிக கடுமையான சிக்கல்களினபோது, சர்ச்சைக்குரிய பிரச்சினைகளுக்கு சமாதான வழியில் பரிகாரம் தேடும் அடிப்படை கொண்ட யோசனைகள் சோவியத் யூனியன தான் அளித்து வந்துள்ளது. கொரியாவில் யுத்த நிறுத்தப் பேச்சுகளுக்கு அடிப்படையாக அமைந்த யோசனைகளை அளித்தது சோவியத் யூனியனதான என்பதை மட்[illegible] ஞா[illegible] மூட்டினால் [illegible]னது. [illegible]

த. ஐ. நா. சபை ஒரு முக்கியமான கருவியாக செயலாற்றக்கூடும் என்ற உணர்வில், ஐ. நா. சபைக்கு சோவியத் சர்க்கார் அதிக முக்கியத்துவமளிக்கிறது. ஆனால் இன்று ஐ. நா. சாஸனத்தினபடி சர்வதேசக் கூட்டுறவுக்காக இயங்கவேண்டிய ஸ்தாபனமான ஐ. நாவை அமெரிக்காவானது சமாதான எதிர்ப்புப் போரில் தனது சர்வாதிகாரக் கொள்கைக்கு ஒரு கருவியாக மாற்றிவருகிறது; தனது ஆக்ரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஐ. நா.வை ஒரு திரையாக உபயோகித்து வருகிறது. என்றாலும்கூட, ஐ. நா.வில் அமெரிக்கா தனது கைதூக்கிகளின் யந்திரத்தைக் கொண்டு சோவியத் யூனியனுக்கு குறுக்கே கடினமான முட்டுக்கட்டைகளை போட்டுவந்தபோதிலும், ஐ. நா.வில் சமாதான கொள்கைகளுக்காகப் போராடி வருகிறது; இன்றைய சர்வதேச சூழ்நிலைமைகளைத் தொடர்ந்து சாதனைக்குரிய யோசனைகளை ஏற்கும்படி செய்வதற்காக சோவியத் யூனியன் வேலை செய்து வருகிறது. ஆக்ரமிப்பு சக்திகளுக்கு விலங்கிடும்படியான, மற்றொரு யுத்தம் நிகழா வண்ணம் தடுக்கும்படியான ஏற்கனவே நடக்கும் யுத்தங்களை நிறுத்தும்படியான, யோசனைகள் அவை.

சோவியத் அரசுக்கு எதிராக மட்டுமே ஒரு யுத்தம் ஏற்பட முடியும் என்று நினைப்பது தவறாகும். சோவியத் யூனியன் பிறப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்பே முதலாவது உலக யுத்தம் ஏகாதிபத்தியவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டது என்று நாமெல்லோருமறிந்த விஷயமாகும். இரண்டாவது உலக யுத்தம் என்பது முதலாளித்துவ அரசுகளுக்கிடையே ஏற்பட்ட யுத்தமாகவே ஆரம்பித்தது; அதன விளைவாக முதலாளித்துவ நாடுகளே பலத்த நஷ்டமடைந்தன. இன்று ஏகாதிபத்திய முகாமை பிளவுபடுத்துகிற முரண்பாடுகள் இரண்டு முதலாளித்துவ அரசுகளுக்கிடையே யுத்தம் ஏற்படுவதில் கொண்டுபோய் விடக்கூடும். இந்த சூழ்நிலைமைகளையெல்லாம் கவனத்தில் வைத்து, அரசுகளிடையே எந்தவிதமான யுத்தமும் ஏற்படாமல் தடுக்க சோவியத் யூனியன வேலை செய்து வருகிறது; சர்வதேச சச்சரவுகளையும், வேற்றுமைகளையும் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று இயக்கம் நடத்திவருகிறது.

என்றபோதிலும், நிலையான சமாதானத்துக்கு உத்தரவாதம் தேடும் தனது கொள்கையை பின்பற்றுகிற காலத்தில் அமெரிக்கா ஆளும்வட்டாரங்களின ஆக்ரமிப்புக் கொள்கைக்கு எதிர்ப்பட்டு சோவியத் யூனியன சமாளிக்க வேண்டியிருக்கிறது.

மேலும், குற்றமற்றவர்கள் மீது பழிசுமத்த அமெரிக்க யுத்தவெறிக் கும்பல்கள் முயன்று வருகின்றன. சோவியத் யூனியனிடமிருந்து ஆக்ரமிப்பு அபாயம் இருப்பதாக கற்பனை செய்து எல்லா வகைகளிலும் பொய் பிரசாரத்தை விசிறி வருகின்றனர். சோவியத் யூனியனைப் பற்றிய இந்தப் பொய் மூட்டைகளை, கற்பனைகளைப் பொருத்தமட்டில் அவற்றை துருவிப், பார்க்க வேண்டிய அவசியமில்லை; ஏனெனில் அவற்றிற்கு ஆதாரமெதுவுமில்லை. ஆக்கிரமிப்பாளன யார் என்பதை மறுக்க முடியாத உண்மைகள், சுட்டிக் காட்டுகின்றன.

ஆயுதப் பெருக்கு திட்டத்தை அமெரிக்கா தீவிரமாக முடுக்கி விட்டுள்ளது என்பதையும், அணுகுண்டு யுத்த சாதனங்களையும், விஷக்கிருமி யுத்த சாதனங்களையும் தடை செய்ய அமெரிக்கா மறுக்கிறது என்பதையும். வழக்கமான யுத்த தளவாடங்களைக் குறைக்க அமெரிக்கா மறுக்கிறது என்பதையும், அதே சமயத்தில் அணுகுண்டு, விஷக்கிருமி ஆயுதங்கள் மீது தடை விதிக்க வேண்டுமென்றும், இதர யுத்த தளவாடங்களையும், படைபலங்களையும் குறைக்க வேண்டுமென்றும் சோவியத் யூனியன யோசனைகளை அளித்து வருகிறதென்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

ஒரு சமாதானஒப்பந்தத்தை செய்துகொள்ள வேண்டும் என்று சோவியத் யூனியன் வற்புறுத்து[illegible]தையும், அமெரிக்கா[illegible]தையும் அனை வரும்[illegible]. [illegible] நேசிக்கும் மக்களு[illegible]க அமெரிக்கா[illegible]களை [illegible]

யும் எதிர்த்துப் போராடுவது ஒன்றே, சோவியத் யூனியன அன்னிய அரசுகளுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களின குறிக்கோள் என்பதையும் ஒவ்வொருவரும் அறிவர்.

அமெரிக்கா கொரியாவைத் தாக்கிய தென்பதையும் அதை அடிமைப்படுத்த முயன்று கொண்டிருப்பதையும் ஒவ்வொருவரும் அறிவர். மறுபக்கத்தில் இரண்டாவது உலக யுத்த முடிவிலிருந்து சோவியத் யூனியன் எந்த இடத்திலும் சண்டை போடவில்லை என்பதையும் அனைவரும் அறிவர்.

அமெரிக்கா சீனவையும் ஆக்கிரமித்திருக்கிறது. தொன்மை வாய்ந்த சீனப் பிரதேசமான டைவான (பார்மோஸா) தீவை அமெரிக்கா கைப்பற்றியிருக்கிறது. சர்வ தேச சட்டம் ஒப்புக்கொண்டுள்ள சகல விதிகளையும் மீறி, அமெரிக்க விமானப்படை சீனப் பிரதேசத்தில் குண்டு வீச்சு நடத்திக் கொண்டிருக்கிறது. சோவியத் விமானப்படை எவர்மீதும் குண்டுவீச்சு நடத்தவில்லை என்பதையும் சோவியத் யூனியன் எந்த அன்னியப் பிரதேசத்தையும் கைப்பற்றவில்லை என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

இவை ஆட்சேபிக்கமுடியாத உண்மைகள்.

பிரிட்டனுடனும் பிரான்சுடனும் நமக்குள்ள உறவுகளைப் பார்ப்போம். இரண்டாவது யுத்தகாலத்தில் நாம் இந்த நாடுகளுடன செய்துகொண்ட ஒப்பந்தங்களின கருத்துப்படி இந்த உறவுகள் அமைந்திருக்கவேண்டும். யுத்த பிற்காலத்தில், அந்த நாடுகளும் நாமும் ஒத்துழைக்கவேண்டுமென்று அந்த ஒப்பந்தங்கள் கூறுகின்றன. எனினும் பிரிட்டிஷ் பிரஞ்சு சர்க்கார்கள் இந்த ஒப்பந்தங்களை மீறிக்கொண்டிருக்கின்றன. ஜெர்மன பாசிஸ்ட் அடிமைத்தனத்திலிருந்து ஐரோப்பிய மக்களை விடுதலை செய்வதற்காக, சோவியத் யூனியனின் மக்கள் ரத்தவெள்ளத்தைப் பெருக்கி யுத்தம் நடத்திய பொழுது, அத்துடன்யுத்தபிற்காலத்தில் ஒத்துழைப்பதாக பிரிட்டிஷ் பிரெஞ்சுசர்க்கார்கள் புனிதமான உறுதிமொழியை கொடுத்தன. அதற்கு விரோதமாக சமாதானத்தை நேசிக்கும் ராஜ்யங்களுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வகுக்கும் ஆக்கிரமிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு அதிபர்கள் பூர்ணமாகச் சேர்ந்து விட்டார்கள். பிரிட்டிஷ்—பிரெஞ்சு சர்க்கார்கள் இதனை எடுத்திருப்பதால், அந்த நாடுகளுடன நமக்குள்ள உறவு பெரிதும் சீர்படவேண்டியிருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், முதலிய பூர்ஷுவா அரசுகள் சம்பந்தமாக சோவியத் யூனியன் தெள்ளத் தெளிய நிலையை மேற்கொண்டிருக்கிறது. நாம் பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளோம் இப்பொழுதும், சமாதான பூர்வமான சர்வதேச நியதிகளை அனுஷ்டிப்பதற்காகவும் நிலையான நிரந்தரமான சமாதானத்தை உறுதிசெய்வதற்காகவும் நாம் இந்த அரசுகளுடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம். (கரகோஷம்)

தோற்கடிக்கப்பட்ட தேசங்களான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை சம்பந்தமாக சோவியத் யூனியன கடைப்பிடிக்கும் கொள்கை ஏகாதிபத்திய அரசுகளின கொள்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கோட்பாட்டை உடையது. வெற்றியடைந்த நாடுகளில் ஒன்றாக சோவியத் சோஷலிஸ்ட் அரசும் இருப்பதால், இதற்குமுன் ஏற்படாததும் புத்தம் புதியதுமான ஒரு நிலையும் சாத்தியபாடுகளும் தோல்வியுற்ற தேசங்களின் மக்களுக்கு சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், நிபந்தனையில்லாத சரணாகதிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட ஒவ்வொரு தேசமும் சமாதான பூர்வமாக ஜனநாயக வளர்ச்சி அடைவதற்கும், சமாதானத் தொழில்களையும் விவசாயத்தையும் வளர்ப்பதற்கும் அன்னியச் சந்தைகளில் பொருட்களை விற்பதற்கும், தேசத்தின தற்காப்புக்குத் தேவையான சுதேசி ராணுவத்தை சிருஷ்டிப்பதற்கும் வேண்டிய சாதியானுகூலங்களை சோவியத் அரசாங்கம் உண்டாக்கித் தருகிறது. பாட்ஸ்டாம் ஒப்பந்தப் பிரகாரம், ஜர்மனியுடன் துரிதமாக சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு, சகல அன்னியப் படைகளும் ஜர்மனியிலிருந்து வாபஸாகவும் ஒன்றுபட்ட சுதந்திரமான ஜனநாயக, சமாதான ஜர்மனியை உருவாக்கவும் சோவியத் யூனியன பாடுபடுகிறது. சமாதானத்தை நேசிக்கும் சோவியத் யூனியனுடன அத்தகைய ஜர்மனி உருவாகிவிட்டால், ஐரோப்பாவில் புதிய போர்கள் மூள முடியாதென்பதையும்ஐரோப்பிய நாடுகளை உலக ஏகாதிபத்தியவாதிகள் அடிமைப்படுத்த முடியாதென்பதையும் நாம் கருத்தில் கொண்டிருக்கிறோம். (நீண்ட கரகோஷம்). இந்தப் பாதையை பின்பற்றுவதா அல்லது அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் கூலிப் படையாவதா என்ற தர்மசங்கடத்தில் சிக்கியிருக்கும் ஜெர்மனிய மக்கள் பிழையற்ற பாதையை, சமாதானப் பாதையை தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள் என்று நாம் நம்புவதற்கு காரணம் உண்டு. (கரகோஷம்).

இத்தாலி சம்பந்தமாகவும் இதைக் கூறமுடியும். இத்தாலியின் சகோதர மக்கள் தமது தேச சுதந்திரத்தை பூர்ணமாகப் பெறவேண்டுமென்று சோவியத் யூனியன் விரும்புகிறது. (கரகோஷம்)

நேச தேசங்களின் கூட்டுப் பிரகடனம் கூறியபடி, ஜப்பானும் ஒரு சுதந்திர ஜனநாயக சமாதான அரசாக வேண்டுமென்பதே சோவியத் யூனியனின் கருத்து. அமெரிக்க சர்வாதிகாரிகள் ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின மீது திணித்த ஒருதலைப் பட்சமான ஒப்பந்தத்தில் கையெழுத்திட சோவியத் சர்க்கார் மறுத்தது; ஏனென்றால், அந்த ஒப்பந்தம், கெய்ரோ, பாட்ஸ்டாம் பிரகடனங்களின கோட்பாடுகளையும் யால்டா ஒப்பந்தத்தின் கோட்பாடுகளையும் மிதித்துத் துவைக்கிறது; ஜப்பானை அமெரிக்காவின கீழ்க்கோடி ராணுவ தளமாக்கும் குறிக்கோளைக் கொண்டது. அன்னிய விலங்குகளின் பாரத்தை சுமக்கும் ஜப்பானிய மக்கள்பால் சோவியத் யூனியன் ஆழ்ந்த நன்மதிப்புக்கொண்டிருக்கிறது; ஜப்பானிய மக்கள் தம் தேசத்தின் சுதந்திரத்தைப் பெற்று சமாதானப் பாதையை மேற்கொள்வார்களென்று சோவியத் மக்கள் நம்புகிறார்கள்.

ஒத்துழைக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்தால், ஒப்புக்கொண்ட காரியங்களை நிறைவேற்றத் தயாராயிருந்தால், ராஜ்யங்களின சமத்துவத்தை ஏற்றுக்கொண்டு, இதர ராஜ்யங்களின உள்விவகாரங்களில் தலையிடாமலிருந்தால், முதலாளித்வமும் கம்யூனிசமும் சமாதான பூர்வமான அண்டை வீட்டார்களாக ஒத்து வாழ முடியும். இந்த கோட்பாட்டின் அடிப்படையிலேயே சோவியத் யூனியன், மக்களின் பந்தோபஸ்துக்காகவும் சமாதானத்துக்காகவும் பாடுபடுகிறது.

சமூக ஏற்பாடுகளின் பேதாபேதத்தைப் பாராட்டாமல், இதர தேசங்களுடன் வர்த்தக உறவுகளை வளர்ப்பதும், ஒத்துழைப்பதும் சோவியத் யூனியனின கொள்கையாக எப்பொழுதும் இருந்துவந்திருக்கிறது; இன்றும் அந்த கொள்கையை பின பற்றுகிறது. எதிர்காலத்திலும், பரஸ்பர நன்மை அடிப்படையில் இந்தக் கொள்கையை கட்சியின் பற்றும் என்பது உறுதி.

ராணுவ தளவாட பொருட்களின உற்பத்திப் பெருக்கமே முதலாளித்துவ நாடுகளின் தொழில்களுக்கு நிறைய வேலை கொடுப்பதற்கு உதவுகிறதென்று வெறிகொண்ட அமெரிக்க, பிரிட்டிஷ் வட்டாரங்கள் பன்னிப்பன்னி கூறியபொழுதிலும், இன்னொரு பாதை இருப்பதை கண்கூடாகப் பார்க்கலாம்; சமுதாய அமைப்புகளின வித்தியாசத்தை பாராட்டாமல், சகல தேசங்களுக்குமிடையே வியாபார உறவுகளை வளர்த்து விஸ்தரிக்கும் வழியே அது. தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளின் மில்களுக்கும் பாக்டரிகளுக்கும் பல வருஷங்களுக்கு இது வேலை கொடுக்கும். சில நாடுகளில் மட்டும் நிறைய உள்ள பொருட்களுக்கு இதர நாடுகளில் மார்க்கெட்டுகளை இந்த வழி உறுதி செய்யும்; பிற்பட்ட நாடுகளின் பொருளாதார பேரெழுச்சியை அது தூண்டி விடும். இவ்வாறாக நீண்ட கால பொருளாதாரக் கூட்டுறவை நிறுவும்.

சமாதானக் கொள்கையைக் கடைப்பிடிப்பதில், சோவியத் யூனியனுடன சமாதானத்தை நேசிக்கும் இதர ஜனநாயக அரசுகளான சீன மக்கள் குடியரசு, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லவாகியா, ஹங்கேரி, பல்கேரியா, அல்பேனியா, ஜர்மன் ஜனநாயகக் குடியரசு, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, மங்கோலிய மக்கள் குடியரசு ஆகியவை ஒருமனப்பட்டிருக்கின்றன. சோவியத் யூனியனுக்கும் இந்த நாடுகளுக்கு மிடையேயுள்ள உறவுகள் அரசுகளிடையே சரித்திரம் ஒருபொழுதும் கண்டிராத உறவுகளாகவும், புத்தம் புதிய உறவுகளாகவும் சம அந்தஸ்து பொருளாதாரக் கூட்டுறவு, தேச சுதந்திரத்தை மதித்து நடத்தல் ஆகிய கோட்பாடுகள் இந்த உறவுகள் அடிப்படையாகக்கொண்டும் இருக்கின்றன. தன்னுடைய பரஸ்பர உதவி ஒப்பந்தங்களுக்கு விசுவாசம் செலுத்தும் சோவியத் யூனியன், இந்த நாடுகள் மேன மேலும் வலு பெற்று வளர்ச்சியடைவதற்கு, உதவியும் உறுதுணையும் செய்து வந்திருக்கிறது; இனியும் தொடர்ந்து செய்யும்.

(பலத்த கரகோஷம்)

முதலாளித்துவத்துடன சமாதானமாகப் போட்டியிடுவதில், சோஷலிஸ்ட் பொருளாதார முறை முதலாளித்துவ முறையிலிருந்து மேம்பட்டிருக்கும் உண்மை வருஷா வருஷம் மேன்மேலும் நிதர்சனமாகுமென்பதில நமக்கு திட நம்பிக்கை உண்டு. எனினும், நமது சித்தாந்தத்தையோ நமது பொருளாதார ஏற்பாட்டையோ எவர் மீதும் திணிக்கும் எண்ணம் நமக்குக் கிடையாது. "புரட்சியை ஏற்றுமதி செய்வதென்பது அபத்தம்" என்று ஸ்டாலின கூறுகிறார். "ஒவ்வொரு தேசமும் விருப்பப்பட்டால் தன புரட்சியை செய்து கொள்கிறது. அது விரும்பாவிட்டால் புரட்சி ஏற்படாது" என்று அவர் மேலும் கூறுகிறார்.

சோவியத் யூனியன் சகல நாடுகளுடன சமாதானமான முறையில் ஒத்துழைக்கும் கொள்கையை உறுதியாக கடைப்பிடிக்கிறது. அதேசமயத்தில், யுத்த வெறியர்கள் புதிய ஆக்கிரமிப்புகளை தொடங்குவார்கள் என்ற ஆபத்தை அது ஞாபகத்தில் வைத்துக்கொண்டுள்ளது. யுத்த வெறியர்கள் சகல வரம்புகளையும் மீறிவிட்டனர். இந்தக் காரணத்தினால் சோவியத் யூனியன தனனுடைய தற்காப்புத்திறனை பலப்படுத்திக்கொண்டிருக்கிறது; தொடர்ந்து பலப்படுத்தும். (நீண்ட கரகோஷம்)

சோவியத் யூனியன் யுத்த வெறியர்களின் பயமுறுத்தல்களைக் கண்டு அஞ்சவில்லை. நமது மக்களுக்கு ஆக்கிரமிப்பாளர்களுடன சண்டை போட்டு அனுபவம் உண்டு; எதிரிகளை முறியடிப்பது நமக்கு புதிய காரியமல்ல. சோவியத் மக்கள் உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு சரியான பாடம் கற்பித்தார்கள்; அப்போது சோவியத் அரசாங்கம் இளம்பருவத்தில் இருந்தது; இன்றுடன ஒப்பிட்டுப்பார்த்தால் பலவீனமாக இருந்தது. இரண்டாவது உலக யுத்தத்திலும் நமது மக்கள் எதிரிகளை முறியடித்தார்கள். எதிர்காலத்திலும் ஆக்கிரமிப்பாளர்கள் நம தாய நாட்டை ஆக்கிரமிக்கத் துணிவார்களானால், அவர்களுக்கு நம் மக்கள் சரியான பாடம் கற்பிப்பார்கள் என்பது திண்ணம். (பலத்த நீண்ட கரகோஷம்)

சரித்திர உண்மைகளை புறக்கணிக்க முடியாது. முதல் உலக யுத்தத்தின காரணமாக ரஷ்யா முதலாளித்துவ முகாமிலிருந்து கத்தரித்துக் கொண்டு வெளியேறியது. இரண்டாவது உலக யுத்தத்தின காரணமாக ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பல நாடுகள் முதலாளித்துவ முகாமிலிருந்து பறித்துக் கொண்டன. இவைதான சரித்திர உண்மைகள். மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டால் உலக முதலாளித்துவ அமைப்பே அழிந்துவிடும் என்று கருதப்போதிய சான்றுகளும் உள்ளன. (நீண்ட கரகோஷம்)

ஆக்கிரமிப்பாளர்கள் யுத்தத்தை மக்கள்மீது திணிப்பார்களானால், அதன விளைவு, முடிவு இப்படித்தானிருக்கும்.

ஆனால், இன்னொரு பாதை ஏற்பட வழியிருக்கிறது. அதுதான சமாதானத்தை பாதுகாக்கும் பாதை; சகல நாடுகளுக்குமிடையே சமாதானத்தை பாதுகாக்கும் பாதை. ஐக்கிய நாடுகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி யுத்தப் பிரச்சாரத்தின்மீது தடை, அணுகுண்டு, விஷக்கிருமி ஆயுதங்கள் மீது தடை, பெரும் வல்லரசுகளின் ஆயுதப்படைகளை பெருமளவுக்குக் குறைத்தல், வல்லரசுகளிடையே சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தல், நாடுகளுக்கிடையே வியாபாரத்தை அபிவிருத்திசெய்தல், ஒரே சர்வதேசமார்க்கெட்டை மீண்டும் ஏற்படுத்துதல், சமாதானத்தை [illegible]லப்படுத்தும் உணர்வில் இதர பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் என்பவற்றை அதுகோருகிறது.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால், சமாதானம் பலப்படும்! யுத்த அபாயத்திலிருந்து மக்கள் விடுபடுவர்; ஆயுத தளவாடங்களுக்கும், அழிவு யுத்தத் தயாரிப்பிற்குமான மூலப்பொருள்கள் உற்பத்திக்கான செலவு அறவே குறையும்; இவைகளை மக்களின் நல்வாழ்விற்காக செலவழிக்கத் திருப்பிவிட ஏதுவாகும்.

இந்த நடவடிக்கைகளை,நாடுகளிடையே சமாதான லட்சியத்தைப் பரப்ப,மேற்கொள்ள வேண்டுமென்று சோவியத் யூனியன் விரும்புகின்றது. (பலத்த கரகோஷம்)

நம்முன்னுள்ள கடமைகள்

வெளிநாட்டுக் கொள்கையில் கட்சியினுடைய கடமைகளாவன:

1. மற்றொரு யுத்தத்தை மூட்டிவிடத் தூண்டுவதற்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தல்; சமாதானத்தைப் பலப்படுத்த பலம் பொருந்திய யுத்த-எதிர்ப்பு, ஜனநாயக அணியைத் திரட்டல்; உலக முழுவதுமுள்ள சமாதான ஆதரவாளர்களுடன் நட்புறவு, ஒற்றுமை உறவுகளை பலப்படுத்துதல்; மற்றொரு யுத்தத்திற்கான சகல யுத்த வெறியர்களின சதிகளையும், மோசடிகளையும் தயாரிப்புகளையும் இடைவிடாமல் அம்பலப்படுத்துதல்.

2 சர்வதேச ஒத்துழைப்புக் கொள்கையைப் பின்பற்றி, சகல நாடுகளுடனும் வர்த்தக உறவுகளைத் தொடர்ந்து வளர்த்தல்.

3. சீனமக்கள் குடியரசுடனும், ஐரோப்பிய மக்கள் ஜனநாயகங்களான—போலந்து, செக்கோஸ்லாவாகிய, ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, அல்பேனியாவுடனும், ஜெர்மன ஜனநாயகக் குடியரசுடனும், கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசுடனும், மங்கோலிய மக்கள் குடியரசுடனும் முறிக்க முடியாத நட்புறவுகளை வளர்த்து பலப்படுத்துதல்.

4. சோவியத் அரசின் பாதுகாப்பு பலத்தை சளைக்காமல் பலப்படுத்தி, எந்த ஆக்கிரமிப்பாளனையும் நொறுங்க முறியடிக்கும்படியான நமது தயாரிப்பை அதிகரித்தல்.(பலத்த கரகோஷம்)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நவம்பர் 3ல் சென்னை சட்டசபை கூடும்

சென்னை, அக். 17—

சென்னை சட்டசபை, நவம்பர் 3ம் தேதி காலை 11 மணிக்கு கூட்டுவதற்கு, சென்னை கவர்னர் உத்திரவிட்டுள்ளதாக அக்டோபர் 16 சென்னை சர்க்கார் கெஜட் பிரசுரித்துள்ளது.

மைலோ விற்பனையில் லாபக் கொள்ளை!

ராஜாஜி சீடர்களின் பொதுஜன சேவை!

திண்டுக்கல், அக். 13—

8-10-52ந் தேதி புதன் மாலை 7மணிக்கு திண்டுக்கல் தாலுகா சேர்வைக்காரன்பட்டியில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் ஆர். சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. 4000க்கு மேற்பட்ட விவசாய மக்கள் கலந்து கொண்டார்கள்.

தோழர் என். வரதராஜன் பேசுகையில் காங்கிரஸ் சர்க்காரின் கண்ட்ரோல் நீக்கத்தால் விலைப்பிரபுக்கள் கொள்ளையடிப்பது மட்டுமல்ல, பெரும்பாலானநியாயவிலைக் கடைகளும் அநியாய விலைக்கடைகளாக காட்சியளிக்கிறது. மைலோவின சர்க்கார் நிர்ணய விலை 0-6-4 கணமுனனால் விற்பது 0-12-0 இதற்குசர்க்காருடந்தையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

தொழிலரசு ஆசிரியர் தோழர் என். கிருஷ்ணசாமி பேசுகையில், நகரசபை தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை அள்ளி வீசியும்கூட அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. ஆகவேதான் மைனர் பஞ்சாயத்து தேர்தலை கைதூக்கும் முறையாக மாற்றியுள்ளார்கள். இதிலும் விவசாயிகள் ஒன்றுபட்டு, பொதுத் தேர்தலில் மதனகோபால் அவர்களை தேர்ந்தெடுத்ததைப் போல், கிராம நலத்தில் அக்கரை கொண்டவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ் பொதுச் செயலாளர் தோழர் வி. பாலசுப்ரமணியம் பேசுகையில், விவசாயிகள் அனைவரும் சங்கத்தில் திரண்டு, சர்க்காரின விவசாயிகளுக்கு விரோதமான கொள்கைகளை முறியடிக்கச் செய்ய வேண்டும். மதனகோபால் அவர்களின் சட்டசபைப் போராட்டமும், வெளியில் உங்கள் வெகுஜன இயக்கமும் ராஜாஜி சர்க்காரின ஜன விரோத கொள்கையை முறியடிக்கும் என்று கூறினார். கூட்ட முடிவில் நூற்றுக்கணக்கான பெண்கள் தோழர் பாலுவை சூழ்ந்துகொண்டு, தங்களுக்கு நியாய விலைக் கடையில் நடக்கும் அநீதிபற்றியும், தங்களது பட்டினி பற்றியும் முறையிட்டார்கள். விவசாயிகள் கடன தொல்லையை சித்தரித்து கண்ணீர் விட்டார்கள். இரவு $10\frac{1}{2}$ மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

(ந. கி.)

நான்காம் வகுப்பு ரயில்வே சிப்பந்திகளின் மகாநாடு

சென்னை, அக். 17—

தென் பிராந்திய ரெயில்வேயின் அஸ்திவாரமாக விளங்கும் நான்காம் வகுப்பு சிப்பந்திகளின் மகாநாடு இவ்வருஷம் டிசம்பர் மாத இறுதியில் சென்னையில் கூடுமென முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் 60 சதத்திற்குமேல் உள்ள 4-வது வகுப்பு ரயில் நிர்வாகத்தில் அடித்தளத்தில் கிடந்து சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். அவர்களுடைய வறுமை, வேலைப்பளு, கஷ்டம் மேல்படியிலுள்ள ஒவ்வொரு தொழிலாளியையும் பாதிக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். லோகோ, ரன்னிங் ஷெட், போக்குவரத்து, மெக்கானிகல், மின்சார எஞ்சினீரிங் வைத்திய ஸ்தலங்களில் வேலை செய்வோர் ஆபீஸ் பியூன்கள் இப்படி ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக் குறைகளையும், பொதுவான குறைகளையும் முன்வைத்து அதை நிவர்த்திக்கவும், தொடர்ந்து கோரிக்கைகளைபெறவும் ஐக்ய ஸ்தாபன ரீதியான ஏற்பாடுகள் மகாநாட்டில் உருவாகும்.

பேசின்-பிரிட்ஜ் ரன்னிங் ஷெட் தொழிலாளிகளின் நிலை ரயில்வே பூராவிலுமுள்ள தொழிலாளர்களின் குறைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு. காலை 7 மணியிலிருந்து மாலை 6 மணிவரை ஷெட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீட்டில் சமைத்து சோறு கொண்டுவரும் ஆளுக்கு பாஸ் கிடையாது. பெரம்பூர் ஒர்க்ஷாப்பில் 10 சாப்பாட்டுக்கு ஒரு பாஸ் வீதம் கொடுக்கும் பழக்கம், அண்டையிலுள்ள பேசின்-பிரிட்ஜில இல்லை. இதே நிலைமை சென்டிரல் ஸ்டேஷனிலும், ராயபுரம், சால்ட்டு கோட்டர்ஸ் போன்ற இடங்களிலும் நீடிக்கிறது. தொழிலாளர்களை பகல் பூராவும் பழைய சோறு தின்ன வைப்பதில நிர்வாகத்திற்கு ஒரு திருப்தி!

கடினமான உழைப்பு ஒரு புறம். சிக்கு கண்டு சிகிச்சைக்குப் போனால் ரயில்வே ஆஸ்பத்திரியில் டாக்டர்களின அட்டகாசம் சொல்ல முடியாது. ஆஸ்பத்திரி என்றாலே ரயில்வே சிப்பந்திகளுக்கு திகில். முறை ஜுரம், இருமல், 'ஸ்கிரீன்' செய், என்றால் டி.பி. என்ற பட்டம் சூட்டி, மாதக்கணக்கில், வருஷக்கணக்கில் லீவில் வைத்து, லீவு சம்பளமில்லாமல் வீடும் ஆஸ்பத்திரியுமாக அலைய விட்டு பரலோகத்திற்கு 'பிட்' செய்து விடுவது பழக்கமாகிவிட்டது. தப்பித் தவறி மீண்டும் வேலைக்கு போக நேர்ந்தால், ஜி.ஓ.வில் கண்டபடி டி.பி.யால் பாதிக்கப் பட்டவர்களுக்கு லேசான வேலை என்பதில்லை. கீழ்த்தர வேலையில் தள்ளி முரட்டுத் தனமான வேலையைகொடுத்து பழிவாங்கும்படலம். இதனால் ரெயில்வே சிப்பந்திகள தனிப்பட்ட டாக்டர்களிடம் போவதே மேல் என்கிற முடிவுக்கு வந்துவிட்டனர்.

நீண்ட சர்வீசுக்கு பின் 'மெடிகல்' டெஸ்டும் இதே நிலைமை. 45 வயது சிப்பந்தியிடம் 20வயது பையனுடைய பார்வையை எதிர்பார்ப்பதில் என்ன ஆச்சரியம்? அவனை லாயக்கில்லை என்று 'அன்பிட்'செய்து கீழ்த்தரவேலைக்கு சிபார்சு! இந்த "மெடிகல் சிபார்சில்" நிர்வாகம் செய்யும் பாகுபாடு விந்தையிலும் விந்தை. 1931-க்கு முந்தி வேலையிலமர்ந்த சிப்பந்திகளுக்கு, 1931-க்கு பின்னால் அமர்ந்தவர்களைவிட சம்பளம் குறைவு! காரணம்? 1931-க்கு முன்னால் அமர்ந்தவர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லையாம். பின்னால் வந்தவர்கள் கொடுக்கப்படும் கீழ்த்தர கிரேட்டில் "மாக்ஸிமம்", வாங்குகிறார்கள். காரணம் 1947-ல் அமுலுக்கு வந்த மத்ய சம்பளக் கமிஷன் சிபார்சுகள் 1952ல் கூட நீண்டகால சிப்பந்திகளின் சம்பளத்தைப் பற்றி நிர்ணயிக்கவில்லையாம்!

நிர்வாக ஊழல், இழுத்தடிப்பு கற்பனைக்கடங்காது. ஒன்றரை வருஷங்களுக்கு முன் "புயல்" மேஸ்திரி, டூல்-ஸ்டோர் கீப்பர், டூல் செகசர், ஸ்டோர் இஷ்யூயர் இவர்களுக்கு தேர்ச்சி பெற்ற 'ஆ[illegible]' தொழிலாளர்களின் கிரேடை கொடுப்பதென போர்டு முடிவு செய்தது என அறிகிறோம். ஆனால் இதுவரை அம்முடிவு புயல் மேஸ்திரிகளுக்கே அமுலாக்கப்பட்டது. எனினும் கீழ் கிரேட்டு சிப்பந்திகள் மேல கிரேட் வேலையை செய்யும் பொழுது தவறு செய்ய நேரிட்டால் ஜவாப் சொல்ல கடமைப்பட்டவர் தண்டனைக்கு உள்ளாவர்.

கூலி குறைப்பு புதிய பெயர்! பம்பிங் என்ஜின் டிரைவர், சாதாரணமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய தேர்ச்சி பெற்ற தொழிலாளி. அவருக்கு ஏ. பி. அடெண்டர் என்ற பெயர் சூட்டி ஸ்கில்டு கிரேட் கிடையாதாம். நான்காவது சிப்பந்திகளுக்கு வாழ்க்கை செலவு உயர்வு பற்றி சம்பந்தா சம்பந்தம் இல்லை. படி அரிசி ரூ. 1-4-0 விற்றாலும் "பாட்டா" அணா 13 தான். வெளியூர்களுக்கு வேலைமேல் சென்றால் இந்த பாட்டாவில் வாழ்க்கை முடித்துக்கொள்ள வேண்டும். ஒர்க்மென்களுக்கு பாட்டா வித்தியாசம் கூடாது; தினம் ரூபா 1-8-0 அவசியம் என்று கோருகிறார்கள்.

இன்றுள்ள நிலையில் தென் பிராந்திய ரயில்வே பூராவிலுமுள்ள தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்தால், தொழிற்சங்கங்களின ஒற்றுமையை வளர்த்தால் 4வது சிப்பந்திகளின் கோரிக்கைகளை மறுக்க யாராலும் முடியாது. மாநாடு தீர்மானத்தோடு நில்லாமல், சகல பகுதியிலுள்ள தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அதன் மூலம் தொடர்ந்து வேலைசெய்ய ஸ்தாபன உத்தரவாதம் செய்யும் என எதிர்பார்க்கிறோம்.

சிலர் இம் மகாநாட்டை எம். எஸ். எம். எம்பிளாயீஸ் யூனியன் எல்லையோடு, எம்பிளாயீஸ் யூனியன் செல்வாக்கிலுள்ள தொழிலாளர்களை மட்டும் திரட்டினால் போதுமென நம்புகிறார்கள். இந்த சுய திருப்தி காரிய வெற்றியில் கொண்டு செல்லாது. பரந்த ஐக்கியத்தை ஏற்படுத்தி, வெற்றிப்பாதையில் முன்னேறுவோம்.

அமெரிக்க, பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கு ரூ. 12 லட்சம் அபராதம்

பம்பாய், அக். 16—

ரசாயண, மருந்து வகைகள் தயாரிக்கும் பார்க் டேவிஸ் அன் கம்பெனி என்ற அமெரிக்க கம்பெனிக்கும், மார்க்கோனி இண்டர் நாஷனல் மரைன் கம்யூனிகேஷன்ஸ் கம்பெனி என்ற ஒரு பிரிட்டிஷ் வயர்லெஸ் எஞ்ஜினீரிங் கம்பெனிக்கும் சுங்க விதிகள் மீறியதற்காக முறையே ரூ. 9 லட்சமும், ரூ. 3 லட்சமும் பம்பாய் சுங்க இலாகா கலெக்டர் திரு. எ. என். சட்டநாதனால் அபராதம் விதிக்கப்பட்டது.

ரூ.21 லட்சத்துக்கு கிலோர் மிஸெட்டின் என்ற மருந்தின் விலையைக் குறைத்து பட்டியல் போட்டு சுங்க வரியைக் குறைப்பதற்காக அனுப்பியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு ரூ 9 லட்சம அபராதம் விதிக்கப்பட்டது. இம்மாதிரி இந்த கம்பெனி நீண்ட நாட்கள் செய்துகொண்டு வந்திருக்கலாம் என்று கருதி ரூ. 9 லட்சம் பெருமதியான சமானுக்கு கனத்த அபராதம் விதிக்கப்பட்டது.

கப்பல்கள், துறைமுகங்களுக்கு வேண்டிய மின்சார சாமான்களுக்காக அளிக்கப்பட்டிருந்த விசேஷ பாஸை துஷ்பிரயோகம் செய்ததற்கு ரூ. 3 லட்சம், பிரிட்டிஷ் மார்க்கோனி கம்பெனிக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

சமரச அதிகாரியின் ஏதேச்சாதிகாரம்

நிலச்சுவான்களுக்கு வக்காலத்து

சீர்காழி, அக். 13—

8-10-5 ல் சமரச கோர்ட்டில் கொடுக்கப்பட்ட மனுக்கள்மீது நடந்த விசாரணையில் சமரச அதிகாரி திரு சரவண பிள்ளை, மிராசுதார்கள் என்ன சொன்னார்களோ அதையே அடிப்படையாக வைத்துத் தீர்ப்புக் கூறியுள்ளார்.

குறிப்பாக புதுத்துறை விவசாயிகள் தங்களுக்கு சென்ற பசலியில் சாகுபடி செய்த நிலம் கிடைக்கவேண்டுமென்று கொடுக்கப்பட்ட மனுவை விசாரித்தபோது விவசாயிகள் தங்களுக்குச் சென்ற பசலியில் எந்த விதமான பாக்கியுமில்லை என்று கூறினர். இதை ஒப்புக் கொள்ளாமல்—மிராசுதார்கள் கற்பனையாய்—வாய்க்கணக்காக 10 கலம் என்றும் 40 கலம் என்றும் சொன்னபடி யெல்லாம் விவசாயிகளை விபரம் கேட்காமலேயே மிரட்டி மனுவில் கை எழுத்து வாங்கி இருக்கிறார் என்று தெரிகிறது. இதிலிருந்து இந்த பாக்கியை விவசாயிகள் கொடுத்த பிறகேதான் அடுத்த பசலியில் (1363ம்) நிலத்தில் வேசிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறது. அப்படியானால் விவசாயிகளுக்கு அவசர சட்டத்தின்மூலம் நன்மை அடைவதற்கு பதில், கடனில்லாதிருந்த விவசாயிகளை கடனாளியாக்குகிறது.

அதுமாத்திரமில்லை, மிராசுதார்களுக்குப் பதிலாக எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் வரும் ஏஜெண்டுகளை அனுமதித்து ஒத்துக்கொள்ளுகிறார். ஆனால் மனுதாரர்களாகிய எழுத படிக்க தெரியாத அப்பாவி விவசாயிகளுக்கு அவர்களுடைய பிரதிநிதியாகவரும் விவசாய சங்க ஊழியர்களை அனுமதிக்க முடியாது என்று வெளியேற்றுகிறார். கோர்ட்டுக்குள் 3 பேர் கூட இருக்கக்கூடாது என்கிறார். அது எந்த சட்டத்திலிருக்கிறது என்று தோழர்கள் கேட்டதற்கு என் சட்டத்திலிருக்கிறது என்கிறார். சாதாரணமாக எல்லா பகிரங்க சிவில் கிரிமினல் கோர்ட்டில் நடக்கும் நடவடிக்கைகளை எந்த ஜனங்களும் பொதுமக்கள் பார்வையாளராக இருந்து வேடிக்கை பார்க்கிறார்கள் ஆனால் சமரச கோர்ட்டில் அதுவும் விவசாயிகளுக்கு நியாயம் வழங்குவதாக கூறப்படும் ஒரு கோர்ட்டில் விவசாய பிரதிநிதிகளுக்கு இடமில்லை.

இந்த சமரஸ அதிகாரி இந்த ஊரைச்சேர்ந்தவர். பல மிராசுதார்களுக்குச் சொந்தக்காரரும் கூட. இவரிடமிருந்து எந்த நீதியும் எதிர்பார்க்க முடியாதென்று மக்கள் பேசிக்கொள்ளுகின்றனர்.

உடனடியாக இவரை இந்தத் தாலுக்காவை விட்டே மாற்றவேண்டும்.

பஞ்சநிவாரணத்துக்கு நிரந்தர நிதி ஒதுக்கவேண்டும்

நிதிமந்திரி மகாநாட்டில் ராஜாஜி கோரிக்கை

சென்னை, அக். 16—

புதுடில்லியில் சமீபத்தில் நடைபெற்ற நிதி மந்திரிகள் மகாநாட்டில் சென்னை முதலமைச்சர் திரு. சி ராஜகோபாலாச்சாரியார், ஐந்தாண்டுத் திட்டத்தில பஞ்சநிவாரணத்துக்காக நிரந்தரமாக நிதி ஒதுக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினார் என்று வர்த்தக வரி இலாகா மந்திரி திரு. எஸ். பி. பி. பட்டாபிராம ராவ் இன்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், வரி செலுத்தாமல் தப்புகிறவர்களை தடுப்பதுபற்றி முடிவு எடுக்கப்பட்டது என்றும், பட்ஜெட் தயாரிப்பதுசம்பந்தமாக ஒருவருக்கொருவர் கலந்தாலோசிக்க முடிவு எடுக்கப்பட்டதென்றும், தமாஷா வரி சம்பந்தமாக அந்தந்த ராஜ்யங்கள் முடிவு எடுத்துக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

பருகூர் பிர்க்காவில் கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்துக!

கிருஷ்ணகிரி, அக். 13—

கிருஷ்ணகிரி தாலுக்கா பருகூர் பிர்க்கா ஜெகதேவி கிராமத்தில் 6-10-52 மாலை விவசாயிகள் சங்க திறப்பு விழா நடைபெற்றது.

அதுசமயம் ஸ்ரீமான் ருத்ரப்ப செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்.

ஸ்ரீமான் திரு. மாணிக்க முதலியார், அவர்கள் செங்கொடியேற்றி வைத்தார். தோழர் மார்க்ஸ், விவசாயிகள் ஒற்றுமைப் பற்றி பேசினார்.

தோழர் என். அண்ணாஜி, அவர்கள் அரசாங்கத்தின் வரிக் கொடுமையால் பொது ஜனங்களும், விவசாயிகளும் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும், புதிய வரிகள் ஏழை விவசாயிகளை பாதிக்கிறது என்றும், ஆகவே விவசாயிகள் ஒன்று திரள வேண்டுமென்றும் செங்கொடியின் கீழ் விவசாயிகள் ஒன்று திரண்டதினால்தான் தஞ்சையில் வெற்றிக்கொடி நாட்டினார்கள் என்றும் விளக்கமாக பேசினார்.

பிறகு, தோழர்கள் பி. சீனிவாசன், பீடாமுத்து, வேணு ஆகியோர் பேசியபின் இந்த பிர்க்காவில் உடனடியாகக் கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், கக்கல்பட்டி, மோடிக்குப்பம், போன்ற கிராமங்களுக்கு ஜில்லா போர்டு ரோடு வசதிசெய்து தரவேண்டுமென்றும், நாகமங்கலம், ராசிபல்லி போன்ற கிராமங்களில் பள்ளிக்கூடம் திறக்கவேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் பத்திரிகாசிரியர்கள் கரஞ்ஜியா, காரகா கைது

பம்பாய், அக் 16—

"பிளிட்ஜ்" ஆசிரியர் ஆர். கே. கரஞ்ஜியா, "கரண்ட்" ஆசிரியர் டி. எப். காரகா ஆகிய இருவரும் இன்று பிற்பகல், கள்ளக் கையெழுத்து சம்பந்தமாக பம்பாயில் இந்திய சர்க்காரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் இருவரும் முறையே ரூ. 20 ஆயிரம், 10 ஆயிரம் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். வழக்கு மாகாண பிரதம மாஜிஸ்ட்ரேட் முன்பு அக்டோபர் 23ல் வரும்.

அமெரிக்க ஸ்தானிகர் செஸ்டர் பௌல்ஸ், கரஞ்ஜியாவுக்கு எழுதியதாகச் சொல்லப்படும் ஒரு கடிதம் புகைப்படம் எடுக்கப்பட்டு, காரகாவின 'கரண்ட்'டில் வெளியிடப்பட்டிருந்தது இது கள்ளக் கையெழுத்திட்டது என்று ஸ்தானிகர் மறுத்துள்ளார்.

ஜுலை 29-ம் தேதியிட்டு, பௌல்ஸ், கரஞ்ஜியாவுக்கு எழுதிய கடிதத்தின் ஆரம்ப, கடைசி பகுதிகள் வெட்டியெடுக்கப்பட்டு, அவற்றை வேறொரு காகிதத்தில் ஒட்டி, புகைப்படப் பிரதியில் காணப்படும் வாசகங்கள் இடையில் கொண்டதான கடிதம், சஞ்ஜீவா என்ற தனது சிப்பந்தி மூலம் காரகாவுக்கு கரஞ்சியா அனுப்பியதாக போலீஸ் கூறுகிறது.

அக்டோபர் 2-ம் தேதி, பம்பாயிலுள்ள அமெரிக்க கான்சல் ஜெனரல் சில்டஸ், போலீசுக்குப் புகார் செய்ததில், அடுத்த நாள், காரகாவின காரியாலயத்தை போலீசார் சோதனையிட்டு, 2 புகைப்பட பிளாக்குகளை கைப்பற்றினர்.

"பிளிட்ஜில்" வேலை பார்த்து வந்த, பெர்ரி என்ற நபர், இதெல்லாம் கரஞ்சியா செய்ததே யென்று போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்ததாகத் தெரிகிறது.

வானொலி

அக்: 20 திங்கள்.

சென்னை (41·33மீ)

காலை
7-00 ஸ்வாகதம்
7-15 தமிழில் செய்தி
7-30 என். வி. யசோதரா --பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்தி

பகல்
12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 கீதமஞ்சரி
1-40 ஹிந்தியில் செய்தி
1-50 கதம்பம்
2-00 தமிழில் செய்தி
2-10 கிளாரினெட்

மாலை
4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
4-30 ஐரோப்பிய சங்கீதம்
5-30 சோமசுந்தரி --பாட்டு
5-45 ஆர். ஏழுமலை--பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்தி
6-10 அறிவிப்புகள்
6-20 வி. ராகவன்--வீணை
7-00 நவாவரணக்ருதி (8)
7-15 தமிழில் செய்தி
7-30 கல்லூரி மாணவர் -விவாதம்
7-50 கானன்தேவி (இசைத்தட்டு)
8-00 விஜயலக்ஷ்மி நடராஜன் -பாட்டு
8-30 செல்லம் ஐயங்கார் --பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 ஹிந்தி பாடம்
9-30 டி. எஸ். நாராயணராவ் --வயலின்
10-00 ரவி சங்கர்--சிதார்

★

திருச்சி (389·6மீ)

காலை
7-10 கீதாரம்பம்
7-15 தமிழில் செய்தி
7-30 கே.ஏ.வெங்கடேஸ்வரன் --பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்தி
8-15 தமிழில் செய்தி

பகல்
12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-00 நீங்கள் கேட்டவை
1-40 ஹிந்தியில் செய்தி
1-50 வாத்ய இசை
2-00 தமிழில் செய்தி
2-10 நாட்டுப் பாடல்கள் (இசைத்தட்டு)
2-15 உயர்நிலைப்பள்ளிகளுக்கு

மாலை
4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 ஆர். நடராஜன்-வயலின்
5-45 இசைப்பயிற்சி
6-05 அறிவிப்புகள்
6-10 வாத்யகோஷ்டி
6-30 கிராம நிகழ்ச்சிகள்
7-15 தமிழில் செய்தி
7-30 சித்ரகானம்
7-45 பிரசுரிப்புத் தொழில் பேச்சு
8-00 ஆர். நடராஜன்-வயலின்
8-30 குரல் வகை
8-45 இன்றைய ஐரோப்பிய சர்வகலாசாலை வாழ்க்கை -ஆங்கிலத்தில் பேச்சு
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 கே. ஏ. வெங்கடேஸ்வரன்-பாட்டு

மதுரையிலிருந்து தஞ்சைக்கு வேலைதேடிச் செல்பவர்கள் நிலை

வேலையில்லாது அலைகின்றனர்

திரும்பும் வழியில் ஒருவர் மரணம்

இருங்காக்கோட்டை, அக். 12—

மதுரை ஜில்லாவைச் சேர்ந்த மேலூரிலிருந்து இருளப்ப பிள்ளையும் தன் உற்றார் உறவினருடன் பஞ்சத்தால் தங்கள் ஊரைவிட்டு தஞ்சை ஜில்லாவிற்கு வேலை தேடிச் சென்றனர். மன்னார்குடி வரையிலும் சென்று வேலை கிடைக்காததால் தங்கள் ஊருக்கே திரும்பி விடலாம் என்று திரும்பி வரும்வழியில் சமுத்திரப்பட்டியில் அவர் அண்ணன் மனைவி இறந்தார். இருங்காக்கோட்டைக் கருகில் அவரது மனைவி நடந்துச் செல்ல முடியாமல் விழுந்துக் கிடக்கையில் நம் தோழர்கள் சந்தித்து உதவி செய்தனர்.

அவரும் அவரது குடும்பமும் சிறுநிலச் சொந்தக்காரர்களாக இருந்தார்களென்றும், நிலத்தை எல்லாம் விற்றுச் சாப்பிட்டபின இந்த நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டதென்றும் அந்த விவசாயி நம் தோழர்களிடம் கூறினார்.

மதுரை ஜில்லா விவசாயிகள் சங்க நிர்வாகக் கூட்டம்

மதுரை, அக். 15—

"மதுரை ஜில்லா விவசாயிகள் சங்க"த்தின நிர்வாகக் கமிட்டிக் கூட்டம், அக்டோபர் 20, 21ம் தேதிகளில் திண்டுக்கல்; சட்டாம் பிள்ளைத் தெருவிலிருக்கும் காரியாலயத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்தில் (1) பழனி, திண்டுக்கல் தாலுக்கா பஞ்ச நிலைமை பற்றியும், (2) விவசாயிகள் மத்தியில் சமாதான இயக்கம் பற்றியும், (3) நிலசீர்திருத்த சட்டத்திற்கான கிளர்ச்சி பற்றியும் ஆலோசிக்கப்படும். மதுரை ஜில்லா விவசாயிகள் சங்க ஊழியர்களும் கூட்டத்திற்கு வரலாம். நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் அவசியம் வரவேண்டுமென கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்" என மதுரை ஜில்லா விவசாய சங்க ஆபீசிலிருந்து தோழர் என். சங்கரய்யா அறிவிக்கிறார்.

காங்கிரஸ் தலைவரின் கள்ளமார்க்கெட் அம்பலம்

ஒப்பத்துநாயக்கன் பாளையம் கிராம காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே. துரைசாமி பண்டபாச்சி சேலம்டவுனிலிருந்து 40 மூட்டை ரேஷன் சோளத்தை ஒரு லாரியில் ஏற்றி இவ்வூர் வழியாகவே ஆத்தூருக்குச் சென்று துரைசாமி பிள்ளை மண்டியில் வைத்து கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்யும்பொழுது சர்க்கார் அதிகாரிகளால் பிடிபட்டார். மூட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இவ்வூர் மக்கள் சோளத்திற்கு பஞ்சநிவாரண கடைகள் முன்னால் பரிதவித்துக்கொண்டு இருக்கும்பொழுது இந்த அஹிம்சா பக்தர், காந்தி சீடா கள்ளமார்க்கெட் நடத்தி மக்களை பட்டினி போட்டு பணம் சம்பாதிக்க முனைந்துள்ளார்!

டி. ஆர். ராமச்சந்திரன்,
ஒப்பத்துநாயக்கன்பாளையம்,
பஞ்சநிவாரணக் கமிட்டி.

தமிழ்மொழி, சர்க்கார் மொழியாகவேண்டும்

நெல்லை, அக். 13—

தமிழ்நாட்டில், அரசாங்கக் காரியங்களுக்குத் தமிழையே சர்க்கார் மொழியாக ஆக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்காகச் சென்னையில் ஒரு மகாநாடு கூட்டுவதென்றும், அதற்காக ஒரு வரவேற்புக் கமிட்டியும், நேற்று இங்கு நெல்லை, ராஜதானி தமிழ்சங்க சார்பில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு. எம். சுப்பிரமணியஞ் செட்டியார் தலைமையில், வீரசிவசுப்பிரமணியம்பிள்ளை, அருணைப்பன், எஸ். ராமசாமிக் கோனார், கணபதி முதலியார் மற்றும் திருநாவுக்கரசு ஆகியோர் பேசினர். எம். சுப்பிரமணியஞ்செட்டியார் (தலைவர்), எஸ். ராமசாமிக்கோனார் (உபதலைவர்), ச. எம். சுப்பிரமணியம்பிள்ளை (காரியதரிசி) ஆகியோர் கொண்ட வரவேற்புக் கமிட்டி அமைக்கப்பட்டது.

செந்துறையில் 25,000 மக்கள் திரண்ட காட்சி

தோழர் கே. ஏ. நம்பியாருக்கு அமோக வரவேற்பு

அரியலூர், அக். 8—

நேற்று மாலை 6-மணிக்கு செந்துறையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் அரியலூர் கம்யூனிஸ்டுக் கட்சி காரியதரிசி எ. ஆர். சீனிவாசன தலைமையில் நடைபெற்றது.

மாலை நான்கு மணிக்கு செந்துறை ரயில்வே ஸ்டேஷனில் தோழர் கே. ஏ. நம்பியாரை வரவேற்று அனேக மாலைகள் பல சங்கங்களின சார்பாக போட்டு ஊர்வலமாக அழைத்துக்கொண்டு நெய் வனம் தோழர் ராஜமாணிக்கம் அவர்கள் வீட்டிற்கு போனார்கள். தோழர் ராஜமாணிக்கம் கே. ஏ. நம்பியாருக்கும அவரோடு வந்த வெளியூர் தோழர்கள் சுமார் 50 பேருக்கும் ஓர் தேநீர் விருந்தளித்தார்.

தோழர் நம்பியார் நேரில் குளங்களையும், கிணறுகளையும் பார்வையிட்டுவிட்டு தன்னால் முடிந்தளவு அரசாங்கத்தோடு போராடி உங்கள் குறைகளை எடுத்துச் சொல்லி ஏதாவது உடனடி உதவிகள் கிடைக்கும்படி செய்கிறேன் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறி நீங்களும் ஒன்று சேர்ந்து சங்கம் அமைத்து உங்கள் குறைகளை அரசாங்கத்திற்கு தெரியபடுத்துங்கள் என்று கூறினார்.

பிறகு 6½ மணிக்கு கூட்டம் ஆரம்பமானது தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் நம்பியார் பேசியதாவது.

பஞ்சம், பசியால் வாடும் உங்களுக்கு குடி தண்ணீர் போன்ற வசதிகள் கூட கிடைக்கவில்லை. இதைப்பற்றி சற்று முன் அனேகர் நேரில் என்னிடம் சொன்னீர்கள். நானும் சில இடங்களைப் பார்த்தேன். உங்கள் கஷ்டங்களை உணருகிறேன். ஆனால் இந்த அரசாங்கம் அதை உணரவேண்டும். ஆனால் அதுதான் இல்லை. உங்கள் கஷ்டங்களைப் பற்றி அரசாங்கத்திற்கு கவலையில்லை. எனவே சகலரும் ஒன்றுபட்டு பஞ்சம் போக்கப் பாடுபட வேண்டும்" என்றார்.

பஞ்சப் பிரதேசத்தில் வரி வஜா செய்க!

கோவை, அக். 10—

கோவை ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 5-10-52-ல் வெள்ளைக் கிணர் கிராமத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் நாராயணசாமி தலைமைவகித்தார். பின்னால் தோழர்கள் ஆர். வெங்கிடு, எஸ். கிருஷ்ணன் ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் வெள்ளைக் கிணர் கிராமத்தில் சுற்று வட்டாரத்தில் சரியான மழை பெய்யாததால் இந்த வருட வெள்ளாமை கெட்டுவிட்டதால் மழையை எதிர்பார்த்து விவசாயம் செய்யும் பிரதேசங்களிற் உள்ள காட்டு பயிர்களுக்கு வரி வஜா செய்ய வேண்டுமென்றும்,

2. வெள்ளைக்கிணர், சுற்றுப்புறக் கிராமங்களில் வி. சி. பழனிச்சாமிக் கவுண்டர் குடும்பங்களுக்கு சொந்தமான தோட்டங்களில் 1939ல் ஒரு ஏக்கர் பூமிக்கு ரூ. 50 ஆக இருந்த குத்தகை இன்று ரூ. 350 ஆக 7 மடங்கு குத்தகை உயர் வாகியுள்ளதை உடனடியாக சரிபாதியாக குறைக்கவேண்டுமென்றும்,

3. வெள்ளைக்கிணர், துடியலூர் போன்ற கிராமங்களில் சரியான சுகாதார வசதி இல்லாததால் காலரா போன்ற தொத்து நோய்கள் பரவி வருவதை தடுக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும்.

4. தஞ்சை விவசாயிகளுக்கு சர்க்கார் அளித்த பாதுகாப்பு சட்டத்தை சென்னை மாகாண முழுவதும் உடனடியாக அமுல் நடத்த வேண்டுமென்றும் பேசப்பட்டது. (ந-நி)

ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோ தொழிலாளர் உண்ணாவிரதம் நிறுத்தம்

தொழிலாளர் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது

சென்னை, அக். 16—

16-10-52 மாலை 6 மணிக்கு ஸ்டுடியோ அதிபர் திரு. எ. ராமையா தொழிலாளர்கள் சார்பாக தோழர்கள் எம். ஆர். சௌரிராஜு, டீ. வி. ஜாராஜு என்பவர்களை அழைத்து தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய நான்கு மாதச் சம்பளத்தையும் உடனே கொடுப்பதற்குப் பணமில்லையென்று சொன்னார். ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை மூன்று மாதச் சம்பளம் இப்பொழுது பெற்றுக் கொள்வதென்றும் செப்டம்பர் மாதம், அக்டோபர் மாதச் சம்பளத்தை நவம்பர் 7-ம் தேதி கொடுக்க வேண்டுமென்றும் கோரியதற்கு, ஸ்டுடியோ சவுண்டு எஞ்ஜினீயர்கள், திரு எஸ். ராஜகோபால், திரு. கனியப்பன், 'சொசைட்டி பிக்சர்ஸ்' ஜெனரல்மானேஜர் திரு. சுந்திரபாபு, புரொடக்ஷன் மானேஜர் திரு. ராகவன் முதலியவர்களை மத்தியஸ்தத்தின பேரில் திரு. ஏ. ராமையா தொழிலாளர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். தொழிலாளர்கள் ஜூன், ஜூலை ஆகஸ்ட் மூன்றுமாதச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு உண்ணாவிரதத்தை நிறுத்தி வேலைக்குத் திரும்பினர்.

திருக்கடையூர் தர்மகர்த்தாவின் தாக்குதல்

விவசாயிகள் கண்டனம்

செம்பனார்கோயில், அக். 10—

செம்பனார்கோயில் பொறையார் பிர்க்காவைச் சேர்ந்த கருவாழக்கரை என்ற கிராமத்தில தோழர் வ. பெருமாள் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகள் பொதுக் கூட்டம் நடந்தது.

மாலை 5 மணிக்கு பல இடங்களிலிருந்தும் ஒன்றுசேர்ந்த விவசாயிகள (தாழ்த்தப்பட்டவர்கள் உள்பட) 2000 பேர் உள்ளூர் அக்ரஹாரத்தின் வழியாக கோஷமிட்டுக் கொண்டுவந்தனர்.

தோழர் கோவி, பாரதிமோகன் திருக்கடையூர் கோவிலுக்கு சொந்தமான நிலத்தை நீண்ட காலமாக சாகுபடி செய்துவந்த சுமார் 30 குடும்பங்களின் நிலத்தை பிடுங்கியுள்ளார்களென்றும் இதனால் 15 குடும்பங்களுக்கு மேல் ஊரைவிட்டே சென்றுவிட்டார்கள் என்றும் கூறினார். இத்துடன நில்லாது திருக்கடையூர் டிரஸ்டி கனகசபை பிள்ளை விவசாயிகளின் சட்டி பானைகளையும், படுக்கைகளையும் ஜப்தி செய்ய ஆரம்பித்துள்ளதாகவும் கூறினா.

அடுத்துப் பேசிய தோழர் கே. எஸ். அண்ணங்கார் அவசரச் சட்டம் வந்தபின் ரெவினியூ கோர்ட்டுகளில மிராசுதார்கள் [illegible] சொல்ல ஆரம்பித்துள்[illegible]றும், அதையெல்ல[illegible] விவசாயிகள் ஒ[illegible] நிற்க வேண்டுமெ[illegible]றினர். தோ[illegible]வி[illegible] ரை.

ஆசிரியர்களது அவல நிலை

காங்கிரஸின் கருணையற்ற போக்கு

இராமநாதபுரம், அக். 14—

இராமநாதபுரம், பரமக்குடி முதுகுளத்தூர், தாலுக்காக்கள் ஏற்கனவே வரண்ட பிரதேசம். மானேஜ்மெண்ட் ஆரம்பப் பள்ளிகளில் ஏற்கனவே ஆண்டுக்கொரு தடவை கொடுத்த சர்க்கார் பண உதவி, ஆறு மாதத்திற்கு ஒரு தடவையாக மாறி பின்னர் மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாக ஆக்கப்பட்டு சமீபத்தில் மாதாமாதம் என்ற நிலைக்கு வந்து அதுவும் கூட இப்போது பரமக்குடி தாலுக்கா, பண்ணூர் போன்ற பள்ளிக்கு 1952 வருடம் மார்ச் மாதம் முதலும் வேறு பல கிராம பள்ளிக்கூடங்களுக்கு ஜூன் மாதம் முதலும் கிராண்ட் பணம் கிடைக்கவும் இல்லை. இந்நிலையில் ஒரு கிராம ஆசிரியர் டைரக்டருக்கு தனது பரிதாப நிலைமையை தந்திமூலம் தெரிவிக்க இது ஸ்தல டிப்டி இன்ஸ்பெக்டருக்கு வர இவர் பள்ளி ஆசிரியரை [illegible] நிலைமை மோசமாகியது.

சோள விநியோகத்திலுள்ள ஊழலைப் போக்குக

குளித்தலை, அக். 14—

10-10-52-ம் தேதி நடைபெற்ற குளித்தலை நகர பொது நல மன்றத்தின செயற்குழு கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1.

2. சோளத்தை தனிநபர்கள் மூலமாக விநியோகிக்காமல், கூட்டுறவு பண்டகசாலை மூலமாகவோ, அல்லது நியாய விலை கடைகளில பொது மக்கள் பிரதிநிதிகள் முன்போ விநியோகிக்க வேண்டும்.

3. குளித்தலை ஆரம்ப பாடசாலைக்கு ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைப் போக்குவதற்கு, உடனடியாக மேற்படி பள்ளியின் ஒரு பகுதியை பழுது பார்க்கப்பட்டுள்ள பழைய கோர்ட்டின ஒரு பகுதிக்கு மாற்றவேண்டும். பள்ளிக்கூடத்தில் தற்பொழுதுள்ள ஷிப்டு முறையை ரத்து செய்ய வேண்டும்.

4. குளித்தலைக்கும் முசிறிக்குமிடையில் காவேரியாற்றில் விரைவில் நடைபாதைப் பாலம் போட வேண்டும்.

சமாதானப் பிரதிநிதிகள் மீது வாரண்டு

டோக்கியோ, அக். 16

பீகிங் சமாதான மகாநாட்டுக்குச் சென்ற 13 ஜப்பானிய பிரதிநிதிகளில் 7 பிரதிநிதிகளை கைது செய்ய ஜப்பானிய போலீஸ், வாரண்ட் பிறப்பித்துள்ளதின்பேரில், இன்று 800 போலீஸ் புகுந்து அவர்கள் வீடுகளைச் சோதனையிட்டது. சர்க்கார் அனுமதி [illegible] பீகிங் [illegible]ந்தது தான [illegible]கள் மீ[illegible] சாட்டு.

போர்மனை நீக்க வேலைநிறுத்தம்

ஜோத்பூர், அக். 17—

விடுமுறை கொடுக்காமல் ஒரு நோயாளி தொழிலாளியைச் சாகடித்த போர்மேனை உடனடியாக வேலையை விட்டு சஸ்பெண்டு செய்யவேண்டுமென்று கோரி 1500 வட பிராந்திய ரயில்வே தொழிற்சாலைத் தொழிலாளிகள் நேற்று பிற்பகல் வேலை நிறுத்தம் செய்தனர்.

மழை பெய்தும் சாருபடி செய்ய வழியில்லை

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலை

கள்ளிமந்தயம், அக். 13—

கள்ளிமந்தயம் பிர்கா தேவத்தூர் கிராமத்தில் பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளதால் ஜனங்களுக்கு அறவே வேலை கிடையாது. கையில் காசும் கிடையாது தங்களிடம் உள்ள ஒன்று, இரண்டு ஆடு, கோழி இவைகளையும், மாடு முதலியவைகளையும் விற்றுவிட்டார்கள். கையில் பணம் வைத்து இருப்பவர்களுக்கும் மலிவு தானியக் கடையில் கொடுக்கும் சோளமும் சரிவர கிடைப்பது இல்லை. இதனால் பெரும்பகுதி ஜனங்கள் கற்றாழை, உணாத்தழை இளம் பனமரத்தை வெட்டி அதிலுள்ள தண்டையும் கொத்தமல்லியை பொடியாக கொண்ட பால் இல்லாத காப்பி இவைகளை சாப்பிடுவதால் வயிற்றோட்டம் கண்டு பலர் இறந்துள்ளனர்

இந்த ஊரில் இருந்து 100க்கு மேற்பட்டவர்கள் பிழைப்பிற்காக வெளியூர் சென்றுவிட்டார்கள்.

தேவத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மடூர்பட்டி என்பது செழுமையாயிருந்தது. இந்த பட்டியின் மொத்த ஜனத்தொகை 500 இதில் 183 பேர் பிழைப்பைத்தேடி வெளியூர் சென்றுவிட்டார்கள். சென்ற பக்கம் அவர்களுக்கு வேலை கிடைக்காமல் தவிக்கிறார்கள். ஊர் வந்தும் சேர முடியவில்லை. இருந்த சாமான்களையும் அடமானம் வைத்து சாப்பிட்டுவிட்டு ரயிலில் டிக்கட் இல்லாமல் அடியும், உதையும் பட்டு ஒரு சிலர் ஊர் வந்து சேருகின்றார்கள். அவர்களைப் பார்த்தால் எலும்பும், தோலும்தான் இருக்கின்றன. ஊரிலிருக்கும் 10, 15 ஏக்கர் உள்ள விவசாயிகளுக்குக் கிணற்றில் அறவே தண்ணீர் இல்லாமல் விவசாயத்திற்காக இருந்த விதையையும் சாப்பிட்டுவிட்டார்கள். இப்போது எங்கள் பக்கம் மழை பெய்து இருக்கின்றது. 10, 15 ஏக்கர் உள்ள விவசாயிகள் விதை வாங்க காதோலை, கம்மல் முதலியவைகளை கொண்டுபோய் கொடுத்தாலும் விதையும் கொடுக்கவில்லை. பலர் விதைக்க முடியாமல் நிலத்தை சும்மா வைத்திருக்கின்றார்கள்.

அரசாங்கம் இந்தப்பிர்க்காவை பஞ்சப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி கஞ்சித்தொட்டி வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். (ந-நி)

2500 ஆண்டுகளுக்குமுன் விற்பனைவரி இருந்ததாம்!

லட்சுமணபுரி, அக். 16—

உத்தரபிரதேச சட்டசபையில் இன்று, காங்கிரஸ் மெம்பர் பரிபூரணனந்த வர்மா விற்பனை வரி மசோதாவின்மீது நடந்த விவாதத்தில் பேசும்பொழுது, இந்தியாவில் 2500 ஆண்டுகளுக்கு முன்னரும், மௌரிய ஆட்சிக் காலத்திலும் விற்பனைவரி விதிக்கப்பட்டதாகவும், விற்பனை வரி பற்றி சௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டிருப்பதாகவும் கூறினார். இதே காலத்தில் சீனாவிலும் விற்பனை வரி இருந்ததாகவும், ஆனால் அது விதிக்கப்படக் கூடாது என்று கன்பூஷியஸ் எதிர்த்ததாகவும் கூறினர்,

பாகிஸ்தானுக்கு சோவியத் கோதுமை

கராச்சி, அக். 16—

சென்ற மாதம் பாகிஸ்தானுக்கும் சோவியத் யூனியனுக்கும் கையெழுத்தான 1 கோடி 20 லட்சம் பவுனுக்குரிய பண்டமாற்றுதல் ஒப்பந்தப்படி, ரஷ்யா, 1½ லட்சம் டன் கோதுமை பாகிஸ்தானுக்கு அனுப்ப வேண்டும்; பாகிஸ்தான 22 ஆயிரம் டன் சணலும், 13,150 டன் பஞ்சும் ரஷ்யாவுக்கு அனுப்ப வேண்டும்.

அதில் முதல் தடவையாக சோவியத் கோதுமை 7 ஆயிரம் டன் நேற்று கராச்சி துறைமுகத்திற்கு ரஷ்யக் கப்பல் ஒன்றில் வந்து சேர்ந்தது.

பாக்கியலக்ஷ்மி மில் ஒர்க்ஸ் கமிட்டி தேர்தல்

பொள்ளாச்சி, அக் 12—

பாக்கியலக்ஷ்மி மில் ஒர்க்ஸ் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. நிர்வாகம் பாக்யலக்ஷ்மி மில் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளான திருவாளர்கள். எ. கே. கஸ்தூரி, எ. காளிமுத்து, [illegible] அப்பாஜி, என. சின்னராஜு, எஸ். மாரிமுத்து ஆகியோரை ஒர்க்ஸ் கமிட்டி உறுப்பினர்களாக ஏற்றுக்கொண்டது. இவ்வைவரும் தொழிலாளர் சார்பாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Edited, Printed & Published by G. Alavandar, at Janasakti Press, Subodhaya Buildings, 38, Mount Rd, Madras 6.